ஸஞ்சிகை 51.

# ஸ்ரீவாணீ விலாஸினீ.

1913வருஷம்

செப்டம்பர்மீ

ஸ்ரீரங்கம்

ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்.

1913

*Copyright Registered.*

031n211, SV
N13.51

# ஸ்ரீ வாணீ விலாஸினீ.

## ஓர் மாதாந்தத் தமிழ் ஸஞ்சிகை.

இத்தகைய தமிழ் ஸஞ்சிகை இதுவரை இந்தியாவில் கிடையாது. உயர்ந்த காகிதத்தில் பிரதிமாதமும் நூறு பக்கங்களடங்கியிருக்கும். வெகு முக்கியமான விஷயங்களைக் குறித்துத் தகுந்த வித்வான்களிடமிருந்து அநேக உபந்நியாஸங்கள் வெளியாகும். பிரதி ஸஞ்சிகையிலும் அநேக நேர்த்தியான படங்கள் பிரசுரிக்கப்படும்.

இதற்கு உபந்நியாஸங்கள் எழுதுவதாக அநேக சிறந்த வித்வான்கள் பிரியத்துடன் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

இது இங்கிலாண்டில் நடந்தேறிவரும் மிகச்சிறந்த மாஸ ஸஞ்சிகைகளைப் போலவே இருக்கும். பிரதி வருஷமும் ஸரஸ்வதி பூஜை ஸஞ்சிகையும் ஸங்கராந்தி ஸஞ்சிகையும் மிகவும் வனப்பு வாய்ந்ததாகவும், ஒவ்வொன்றும் குறைந்தது 200 பக்கங்களுள்ளதாயுமிருக்கும்.

இத்தகைய அபூர்வமானதும் உயர்ந்ததுமான ஸஞ்சிகை தமிழ் நாடெங்கும் ஏராளமாய்ப் பரவும்பொருட்டு இதன் கிரயம் மிகவும் ஸுலபமாகவே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சந்தாவை முன் பணமாகவே செலுத்தவேண்டும்.

| | |
|---|---|
| வருஷம் ஒன்றுக்குச் சந்தா | ரூ. 5—10—0 |
| 6மீ க்கு | ,, 3— 4—0 |
| பிரதி ஸஞ்சிகைக்கும் | ,, 0—10—0 |

### விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| பக்கம் 1க்கு | வருஷம் 1க்கு | ரூ. 24—0—0 |
| ஷை ½க்கு | ஷை | ,, 14—0—0 |
| ஷை 1க்கு | மீ 1க்கு | ,, 3—0—0 |
| ஷை ½க்கு | ஷை | ,, 2—0—0 |

வேண்டியவர்கள் தங்கள் தங்கள் பெயர்களை அடியில்கண்ட விலாஸத்திற்கு எழுதி உடனே ரிஜிஸ்டர் செய்துகொள்ளவேணுமாய்க் கோரப்படுகிறது.

மானேஜர்.

ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்,

ஸ்ரீரங்கம்

84357

# ஸ்ரீ வாணீ விலாஸினீ.

புத்தகங்கள் 1முதல் 7வரையில் தயாராயிருக்கின்றன.

ஒவ்வொரு புத்தகத்திலும் சுமார் 750 பக்கங்கள் மிகவும் அருமையான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. பற்பல விநோதக் கதைகளும், அநேக நூதன உபந்நியாஸங்களும் சிறந்த வித்வான்களால் எழுதப்பட்டுள்ளன. அநேக சித்திரப்படங்கள் பற்பல வர்ணத்தில் வெகு வனப்புடன் அச்சிடப்பட்டிருக்கின்றன. பள்ளிக்கூடங்களில் பரிசளிப்பதற்கு இவை இன்றியமையாதவை. ஒவ்வொரு வீட்டிலும் பெண்டுகளும் பிள்ளைகளும் அவசியம் வாசிக்க வேண்டியவை. ஒரு விதத்திலாவது இதற்கு நிகராக வேறொரு புஸ்தகத்தைச் சொல்லவொண்ணாது. வாங்கி வாசித்துப்பார்த்த பின்புதான் இவைகளின் மகிமை தெரியவரும். மிகவும் நேர்த்தியாக காலிகோ பயிண்டுசெய்து கில்ட் அக்ஷரங்கள் போடப்பட்டிருக்கிறது.

புத்தகம் ஒன்றுக்கு விலை ரூபாய் **3-4-0.**

தபால் சார்ஜ் பிரத்தியோகம்.

☞ ஸ்வல்ப பிரதிகள் தாம் கையிருப்பிலிருக்கின்றன. வேண்டியவர்கள் சீக்கிரத்தில் தருவித்துக்கொள்ளவேண்டும்.

---

**ஸ்ரீ ருக்மணீ பரிணயம்.** இது ஹரிகதைகளில உபயோகிக்கும்படி ஸ்ரீ ராமாயண விம்ஹம் பருத்தியூர் கிருஷ்ணசாஸ்திரிகள் குமாரர் ப. கி. கல்யாணராம சாஸ்திரிகளால் கீதரூபமாய் இயற்றப்பட்டது. 0 2

**சுண்ணும்பு, சாந்து, சிமெண்டு, காங்கிரீட், தளவரிசை** இவைகளைப்பற்றிய நூல். இது ரெவினியூ இலாகா மைனர் இரிகேஷன் ஓவர்ஸியர் எஸ். அமிர்தலிங்கய்யரால் இயற்றப்பட்டது. 0 4

# ஸ்ரீ வாணீ விலாஸினீ தொடர்.

1. ஸரஸ்வதீ ஸ்தோத்திரம், ச்யாமளாதண்டகம், நவரத்னமாலை. காளிதாஸன் இயற்றியது. தேவநாகர அக்ஷரத்தில் இரண்டு வர்ணத்தில் வெகு நேர்த்தியாக அச்சிடப்பட்டது ... 0 1 0
2. ஸரஸ்வதி அந்தாதி, லக்ஷ்மி அந்தாதி. கம்பன் இயற்றியது. இரண்டு வர்ணத்தில் வெகு நேர்த்தியாக அச்சிடப்படட்டது ... ... 0 1 0
3. சந்திரவல்லி. சருக்கை இராமசாமி ஐயங்கார் பீ. ஏ. இயற்றியது. மிகவும் நேர்த்தியான துப்பறியும் கதை ... ... 0 6 0
4. அய்யாக்குட்டி அல்லது விவாஹதரகர்கள். டி. வி. வெங்கடரமணய்யர் இயற்றியது ... 0 1 6
5. ஹென்றி பஸ்டலோஸி பீ. ஏ. ஸுப்பிரமணியய்யர், பீ. ஏ., எல். டி. இயற்றியது ... 0 2 0
6. அம்புஜவல்லி அல்லது கண்டதும் காதல். ஸ்ரீசைலர் இயற்றியது ... ... 0 6 0
10. ஸ்ரீ சங்கராசாரியர் சரித்திரம். அநேக படங்களுடன் கூடியது 1 0 0
11. தாதாவின் தந்திரம். டி. வி. வெங்கடரமண ஐயர் இயற்றியது. 0 2 0
12. ஹேமந்தகுமாரி. சருக்கை இராமஸாமி ஐயங்கார் பீ. ஏ. இயற்றியது ... 0 2 0
14. நாற்பது லக்ஷம் ரூபாய். ஒரு துப்பறியும் கதை இரண்டாம்பதிப்பு ... ... 0 2 0
15. விபீஷண சரணுகதி. பண்டிதர் பி. ஆர். கிருஷ்ணமாசாரியார் இயற்றியது. ... 0 2 0
16. ஆனரபில் கோடியாலம் வாஸுதேவ ஐயங்கார். பி. ஆர். கிருஷ்ணமாசார்யர் இயற்றியது. ... 0 2 0
17. மிருச்சகடிகம். மோ. க. சடகோபாசாரியார் இயற்றியது. ... ... 0 4 0
18. ஸத்யவதி. கிருஷ்ணமாசாரியார் இயற்றியது. 0 2 0
19. பெருமுடிச்சோழன். ஸ்ரீ சைலர் இயற்றியது. 0 6 0
20. கண்மணி கமலம். ஓர் நேர்த்தியான துப்பறியும் கதை. ... ... 0 2 0

21. நாஸிகேதோபாக்கியானம். அன்பில் ஸ்ரீ வெங்கடாசாரியார் இயற்றியது. ... 0 3 0

22. வீரமாதேவன் அல்லது விஷத்துகில். ஸ்ரீ சைலர் இயற்றியது. ... ... 0 4 0

23. ஸுலலிதாமனோஹரம். எஸ். ஜீ. ராமாநுஜலு நாயுடு இயற்றியது. ... 0 2 0

24. ஸ்ரீ ஸதாசிவேந்திர ஸரஸ்வதி. 0 2 0

25. மாலதீ. ஸ்ரீ சைலதாதாசாரியார் இயற்றியது. 0 3 0

---


# SRI RUDRA - - BHASHYA.

BY

***Abhinava Sankara***

A rare and exceedingly valuable commentary on the Rudra Prasna with an elaborate Bhumika published for the first time.

Crown 8vo. Featherweight Antique paper.

Price **As. 12.** Postage Extra.

THE MANAGER,

BOOK-SELLING DEPARTMENT,

*Sri Vani Vilas Press*, **SRIRANGAM.**

ஸ்ரீ

# பகவத்கீதை வெண்பா.

வாதிகேஸரி

## ஸ்ரீ அழகியமணவாள ஜீயர்

அருளிச்செய்தது.

இது சுமார் 700 வருஷங்களுக்கு முன்பு இயற்றப்பட்ட மிகவும் அருமையான நூல். கீதையிலுள்ள சுலோகங்களுக்கு ஸ்ரீ ராமாநுஜ பாஷ்யத்தை யனுசரித்து நேராக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மிக்க இனிமையான நடையில் அமைந்துள்ளது. பாராயணத்துக்கு யோக்யமானது. தமிழபிமானிகளும் மதாபிமானிகளும் ஒவ்வொருவரும் தவறாமல் வாங்கி வாசிக்கத் தகுந்தது.

சிறந்த தமிழ் வித்வான்களால் நன்ருகப் பரிசோதித்துக் குறிப்புரையுடன் மிகவும் நேர்த்தியாக வெண்மையான கடிதத்தில் டெமி 16 பக்கத்தில் மூன்று ஷட்டகங்களாகத் தனித்தனியே அச்சிடப்பட்டுள்ளது.

விலை மிகவும் ஸ்வல்பமாகவே ஏற்படுத்தப் பெற்றது.

| | |
|---|---|
| ஷட்கம் 1-க்கு விலை | அணா 6 |
| கித்தான் பைண்டு விலை | அணா 8 |

தபால் சார்ஜ் பிரதியோகம்.

ஒரே ஸமயத்தில் 50 பிரதிக்குக் குறையாமல் வாங்குபவர்களுக்கு 100-க்கு 25 வீதம் பிரதிகள் இனமாய்க் கொடுக்கப்படும்.

இதே புத்தகத்தை மிகவும் விலையுயர்ந்த கடிதத்தில் அச்சிட்டு, வெகு நேர்த்தியாக பைண்டு செய்து, கிலிட்டு அக்ஷரங்கள் போட்டு லைப்ரரி எடிஷனாக ஐம்பதே பிரதிகள் தயார் செய்யப்பட்டிருக்கின்றன.

**விலை பிரதி ஒன்று ரூ. 1**

வேண்டியவர்கள் அடியில்கண்ட விலாஸத்தில் பெற்றுக் கொள்ளலாம்,

மானேஜர்
புத்தகசாலை
ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்,
ஸ்ரீரங்கம்.

# சிறந்த தமிழ் நாவல்கள்.

| | | | |
|---|---|---|---|
| சுந்தரிமனோகரன் .. ... ... | 0 | 12 | 0 |
| பானுமதி வரகவி திரு. அ. சுப்பிரமணிய பாரதியார் இயற்றியது ... ... ... | 0 | 12 | 0 |
| மங்கம்மாள் அல்லது மதுரைக்காசி எஸ். கே. பிள்ளை எழுதியது ... ... ... | 1 | 0 | 0 |
| அஞ்ஞாதவாஸம் அல்லது மாண்டவன் மீண்ட மாயம் R. S. நாராயணஸாமி அய்யர் B. A., B. L., இயற்றியது. ... ... ... | 0 | 8 | 0 |
| கல்யாணி அல்லது வாழ்வில் தோன்றிய விபத்து ஷை | 0 | 10 | 0 |
| பத்மாவதி அ. மாதவய்யர் B. A., இயற்றியது. ... | 1 | 0 | 0 |
| தாமோதரன் 'டாம்ஜோன்ஸ்' என்னும் ஆங்கிலநாவலையொட்டி எழுதிய கதை. ... .. | 0 | 12 | 0 |
| சந்திரஹாஸா போரூர் ஷண்முகமுதலியார் இயற்றியது. ... ... ... | 0 | 8 | 0 |
| கன்னியின் முத்தம் அ. சங்கரலிங்கம்பிள்ளை B. A., இயற்றியது. இரண்டுபாகங்கள் ... ... | 1 | 8 | 0 |
| குலசேகரன் ஓர் இனியதப்பறியும் நாவல். ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றியது ... | 0 | 10 | 0 |
| தாக்ஷாயணி அல்லது காதலன் வெற்றி ஷை ... | 0 | 4 | 0 |
| கருணாகரன் ஷை ... | 0 | 4 | 0 |
| மங்களாம்பாள் பாலஸரஸ்வதி தேவகுஞ்சரி அம்மாள் இயற்றியது ... ... | 0 | 8 | 0 |
| விஜயலக்ஷ்மி ஷை ... | 0 | 10 | 0 |
| வசீகரி ஞா. ஞானப்பிரகாசம் பிள்ளை இயற்றியது | 1 | 0 | 0 |
| மீனாக்ஷி அல்லது ஒரு பிராமணகுடும்பத்தின் விசித்திர கதை ... ... ... | 1 | 0 | 0 |
| சந்திரோதயம் அல்லது அலைகடலளித்த அரசி நாகை ஸி. கோபாலகிருஷ்ண பிள்ளை இயற்றியது ... | 1 | 0 | 0 |
| கண்ணகி அல்லது காதலிற்சிறந்த காரிகை ஷை | 0 | 12 | 0 |
| ஜயலக்ஷ்மி வரகவி திரு அ. சுப்பிரமணிய பாரதியார் இயற்றியது ... ... | 0 | 8 | 0 |
| நவநீதம் ஷை ... ... | 0 | 3 | 0 |
| பத்மினி ஷை ... ... | 0 | 8 | 0 |
| வநஜாக்ஷி ஷை ... ... | 0 | 8 | 0 |
| மாளவிகாக்நிமித்ரம் ... | 0 | 8 | 0 |
| நன்றியறியாமகன் கு. ரா. ஸ்ரீநிவாஸய்யங்கார் B. A., இயற்றியது ... ... | 0 | 8 | 0 |
| ப்ரிதுலை ஓர் உழவன் மகள் ஷை ... | 0 | 8 | 0 |
| வித்யாரண்ய நகரம் ஷை ... | 0 | 8 | 0 |
| வத்ஸலா எஸ். ஏ. ராமஸாமி அய்யர் இயற்றியது ... | 0 | 8 | 0 |

| | | | |
|---|---|---|---|
| ராயர் அப்பாஜி அல்லது அதிநுபமந்திரி ... | 0 | 1 | 6 |
| மிருகதிருஷ்ணிகை எஸ். ரங்கஸாமி அய்யர் இயற்றியது | 0 | 6 | 0 |
| உமா பண்டிதை விசாலாக்ஷியம்மாள் இயற்றியது ... | 0 | 8 | 0 |
| கல்யாணி அ. நடேச பிள்ளை இயற்றியது ... | 0 | 8 | 0 |
| அப்பாசாமி சாஸ்திரி ஓர் ஹாஸ்ய நாடகம். அம்புஜூ இயற்றியது ... ... | 0 | 4 | 0 |
| ஹநுமான்ஸிங் அல்லது கோலைகளவு திறவுகோல் பி. ஏ. பிரணதார்த்திஹர சிவனுர் B. A., L. T., இயற்றியது ... ... | 0 | 12 | 0 |
| புத்திமானே பலவான் ஏ. பி. ராம் இயற்றியது ... | 0 | 6 | 0 |
| இராதாராணி ... ... ... | 0 | 2 | 0 |
| ஹிரண்மயி ... ... ... | 0 | 2 | 0 |

# மிகவும் உபயோகமான தமிழ் புத்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| முக்திசோபானம் இராம பிரம்மயோகிகள் இயற்றியது | 0 | 12 | 0 |
| விவேகாநந்த ஸ்வாமிகள் உபந்யாஸங்களாகிய ஞானத்திரட்டு இரண்டுபாகங்கள் ... | 1 | 0 | 0 |
| பிரபுலிங்கலீலை வசனம் வித்வான் இராமசாமி நாயுடு அவர்களால் வசனரூபமாய் இயற்றப்பட்டது | 0 | 12 | 0 |
| விவேகாநந்த விஜயம் மஹேசகுமார சர்மா இயற்றியது | 1 | 4 | 0 |
| பிரபோத சந்திரோதயம் வசனம் ஸ்ரீமான் ராமயோகிகளால் வசன ரூபமாய் இயற்றப்பட்டது | 1 | 0 | 0 |
| ஸ்ரீபகவத்கீதா ப்ரதிபத டீகாதாத்பர்ய பாஷ்யத்ரயஸாரம் | 1 | 0 | 0 |
| நாலடியார் உரையுடன் ... ... | 1 | 2 | 0 |
| இந்துதேசாபிமானிகள் சரித்திரம் முதற்பாகம் ... | 0 | 12 | 0 |
| வியாபாரநீதி சித்தூர் சுப்பிரமணியாசாரி B.A., L.T., இயற்றியது ... ... | 0 | 8 | 0 |
| விவேகசந்திரிகை ... ... | 0 | 8 | 0 |
| தேகதத்வசாஸ்திரம் எஸ். எஸ். வெங்கட்டரமணய்யர் பி. ஏ., பி. எல்., இயற்றியது ... | 2 | 8 | 0 |
| நீதிவிவாதமஞ்சரி ஷை ... | 2 | 8 | 0 |
| ஸ்ரீரங்கமஹாத்மியம் ... ... | 0 | 3 | 0 |

THE MANAGER,

Bookselling Department,

SRI VANI VILAS PRESS,

**SRIRANGAM,** *Madras Presidency, S. India.*



ஸ்ரீரங்கம் ஆனித்திருமஞ்சனம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 - MAY 1914
MADRAS.

# ஸ்ரீ வாணீ விலாஸினீ.

வா. 9. 1913௵ செப்டம்பர்௴ ந. 51

226

## அகஸ்தியமகாமுனிவர் சரித்திரம்.

முற்காலத்தில் தவநிதியாய் வருணமுனி என்கிற ஓர் தேவமுனி இருந்தார். அவர் ஓர்சமயம் மித்திரன் என்கிற தேவனால் தனக்கென உத்தேசித்தழைக்கப்பட்ட ஊர்வசி என்னுந்தேவஸ்திரீயைநோக்கித் தனக்கு இல்லறத் துணையாகும்படி கேட்டுக்கொண்டனர். அதற்கவள் நான் முன்னரே மித்திரதேவனால் கேட்கப்பட்டு இவ்வுடலை அவனுக்களித்துவிட்டேன்; ஆதலால் உமது வேண்டுகோளுக்கியையேன் என்று விடையளித்துத் தன் இடஞ் சென்றாள். இவ்வருண முனிவர் அவளைக்கொண்டு தன

க்கோர் சந்தானம் உத்பத்தி செய்துகொள்ள உத்தேசித்த து தவறியதுகண்டு உடனே சந்தானத்தைத்தாமே சிருஷ்டிக்கக்கருதி தனது தேஜஸ்ஸை ஓர் குடத்தில் அமைத்தார். இனி அத்தவமுனியின் சங்கற்பம் அமோகமாதலால் அவ்விடத்திற்றானே அகஸ்தியர் பிறந்தார். இவர் குடத்தினின் றுதித்தமையால் குடமுனி என்றும், வருணமாமுனி மித்திரகளத்திர தரிசனம் நேர்ந்துழி பிறந்தமையால் மைத்திராவருணி என்றும் வழங்குவதுண்டு. மற்றொருவருமிவருக்குடன்பிறந்தவருண்டு. பிறகு தகப்பனால் உபநயனம் முதலிய முதல் வருணச்சடங்குகள் நிறைவேறப்பெற்று வேதங்களையும் அவற்றின் அங்கங்களையும் ஓருவாறோதி முழுமுதலாய முக்கட்பிரான் திருவருட்பிரசாதம்பெற பெருமுயற்சிசெய்து தவஞ்செய்தலே தகுதியெனக்கைக்கொண்டார். பிறகு இவர் செய்துவருங்கடுந்தவத்தால் கருணைவள்ளலான கடுக்கைமாலையைத்தாங்கிய எம்பிரான் பிரத்தியக்ஷமாகி 'அப்பன்! உனது கருத்தென்னை? அதனையளிக்கவந்தோம்' எனவினவ, உடனே தவநிஷ்டை தெளிந்து உண்ணோக்கிய திருவருட் திருவுருவை வெளியே கண்டு அவர் திருவடித்தாமரைகளைச் சிரமேற் சூடி ஆனந்தவெள்ளம் பெருகி அகிலமலங்களும் விலகி தமக்கு வேண்டுவது முக்கியமாய் பக்தியே எனவிரும்ப இளம்பிறை சூடிய எம்பிரான் அங்ஙனமே உண்டாவதாக எனத்திருவுளம்பற்றினர். பிறகு அம்முனிவர் தனது தவவலிமையால் கடவுளமைத்த பல்கோடி உலகங்களைக் கண்டுகளிக்க உத்தேசித்து இந்திரஉலகம் முதலிய உலகங்களை வளைந்து ஓர் சமயம் மறலியின்மாடம் சென்றார். அங்கு நரகக்குழியில் தலைகீழாய் தொங்கிக்கதறும் சிலரைக்கண்டு 'ஐயா! நீங்கள் கதறுவது யாதுகாரணம்' என வினவ; அவர்கள் 'அப்பா! எங்குலத்தில் பிறந்தவன் ஒரு

வன் அகஸ்தியனென்றிருக்கிறான். அவன் தவத்திற்றுனே நின்று சந்ததியை உண்டாக்கினுனில்லையாம். அக்குற்றத்தால் இக்கதிபெற்றோம்' என்று விடைபகர்ந்தார்கள். உடனே அம்முனிமணி அவர்களை நமஸ்கரித்து தன் உண்மையைவிளக்கி உங்களுக்கு இக்கதிவிலக யான் முயல்வேன் எனவரமளித்துத் தனது குடிசையை யடைந்தார். இம்முனி காடுசென்று உலகத்தில் எல்லா நற்குணங்களுமமைந்து நல்லரூபமும் வாய்ந்தபெண்மணியை விவாகம் செய்துகொள்ள உத்தேசித்திருக்க ஒரு அரசன் தனக்குச் சந்ததி இன்மையால் இம்முனியை வழிபட்டான். உடனே அம்முனி தம்மனத்தால் உத்தேசித்த அம்மங்கைமணியை அம்மன்னவன் மகளாகப்பிறக்கச் சங்கற்பித்தார். அம்மன்னவன் ஒரு மகனை விரும்பியும் கிடைத்த மகளையே மகனுகவும் பாவித்து மனமகிழ்ந்து அவளுக்கு "லோபாமுத்திரை" எனப்பெயரிட்டு அவளுக்கேற்ற மணமகனைத்தேடலுற்றான். உடனே அம்முனிவரே அவ்விடம் சென்று அவளைத்தமக்கே இல்லறவாழ்க்கைக்குற்றதுணையாயிருக்கும்படி அவ்வரசனைக்கேட்டார். அம்மன்னவனிக்குமரியை இக்கொடுந்தவமுனியிடம் கொடுக்க விருப்பமற்றவனுயினும் சாப பயத்தாலும் தன்பெண்ணினது இஷ்டத்தை யனுசரித்தும் கொடுத்தான். அம்முனியும் அம்மன்னவன் குமரியுடன் கானகத்தின் ஓர் ஆசிரமத்தில் வசித்தார். அங்கு நித்தியம் தமது கருத்தறிந்துகொண்டு புரிந்த அம்மங்கைமணியை நோக்கி, 'ஓ பெண்ணரசே! உனக்கு எவ்விதவிருப்பம், அதைத்தெரிவித்தால் உனக்கு அவ்விதம் செய்வேன்' என்றூர். உடனே அம்மங்கைத் தன்னருமைக்கணவனடிமலர் வணங்கிச் சிறிதுகாலம் ராஜசுகத்தைப் பெறவேண்டிக்கொண்டனள். இதற்கு அம்முனி சிறிது தியானித்து இரண்டு மூன்று அரசர்களிடம்

போய் அவர்களிடம் பொருட்குறைவைக்கண்டு மீண்டும் காட்டிற்புகுந்துசெல்ல, அங்கு ஓர் பெரிய மாளிகையையும் ஜனங்களையுங்கண்டு ஆச்சரியமடைந்து திகைத்து நின்றூர். அச்சமயத்தில் திடீரென ஒருவன் இவரிடம் வந்து 'தாங்களெல்லோரும் பகற்போஜனத்திற்கு என்னரண்மனைக்கு வரவேண்டும்' என்று பிரார்த்தித்தான். இவர்களுமொப்பினூர்கள். அவனே அசுரன். தன்னுடன் பிறந்தவனை ஜாலமாய்த் தின்பண்டங்களிற் கலந்து வந்தவர்களை அருந்தச்செய்து அவர்கள் தின்றதும் வயிற்றைக் கிழித்துக்கொண்டு தன் தம்பியை வெளிவரச்செய்து அவர்கள் பொருளைப் பறித்துக்கொள்ளும் இயல்பையுடையோன். அவன் அந்த வழக்கத்தை இவர்களிடமுஞ்செய்ய நமது முனி தனது தவவலிமையால் அவ்வசுரனைத் தமது சரீரத்திற்றூனே ஜீர்ணித்தார். மற்றவன் இதையறிந்து பயத்தினூல் தான்தேடிய பொருளையெல்லாம் கொடுத்தொழிந்தான். இம்முனி அப்பொருளால் பலமான ராஜயோகத்தைப்பெற, அம்மாது "இத்மவாஹன்" என்ற குழந்தையைப்பெற்று மனமகிழ்ந்தாள். மற்றோர் சமயம் இமயமலையின் மகளாய்ப்பரமேசுவரி அவதரிக்க அங்கு எமது கண்ணுக்காச்சரியத்தையுண்டாக்கும் திருமணத்திருக்கோலத்தைச் சேவிக்க இம்முனியும் சகல பூதங்களுமோரிடஞ்செல்லவும், பூமி ஓரிடம் உயரவும் அக்காலமே விந்தியமலையும் வளர்ந்தது. இவ்விரண்டு ஆபத்துக்களையும் விலக்கப்பரமேசுவரன் நமது முனிக்குக்கட்டளையிட்டார். அவ்வாறே அம்முனி பரமனது கட்டளையைக் கைக்கொண்டு அவரது திருமணக்கோலத்தை தமது ஆசிரமத்தின்கண்ணே சேவிக்க வரம்பெற்று அவ்விடம்விட்டுத் தென்னூட்டை நோக்கிச்சென்றூர். இவர் இங்கு வரும்பொழுது, மிருகங்கள், பட்சிகள், மரங்கள் மற்றேதுமில்லாத ஓர் பாலைவனத்தைக்கண்டார். அதின்

வரலாறு யாதெனில், அயோத்திமாநகரில் அரசாண்ட இக்ஷ்வாகு என்கிற அரசனது பிள்ளைகளில் கடைப்பிள்ளையாகிய தண்டன் என்பவன் மிகக்குரூரமுடையவனென்று அவனுக்கு விந்தியமலைக்கும் சைவலம் என்கிறமலைக்கும் நடுவே இராச்சியங்கொடுக்கப்பட்டது. அவன் அங்கு சுக்கிரமுனியைக் குருவாய்க்கொண்டு மதுமந்தம் என்னும் பெயரால் ஓர்நகரமமைத்து அதில் வாசம்செய்து அரசாண்டு வந்தான். அம்மன்னன் ஒருதினம் தனது ஆசாரியன் வீட்டிற்குச்செல்ல, அங்கு அவரது மகளான அஜரை என்பவள் இருந்தனள். அவள்பேரில் இவன் ஹடாத்காரமாகக்காதல்கொண்டு மணந்தான். இச்சங்கதியையறிந்த அச்சுக்கிரமுனி இவன் ராச்சியம் ஏழு தினங்களில் மண்மாரிபெய்து மடியக்கடவதென்று சபித்தனர். அதுமுதற்கொண்டு அவ்விடமத்தன்மைத்தாயிற்று. இவ்விதம் பாலைவனத்தைச் சுற்றிவரும்பொழுது, அக்கும்பமுனியதன் நடுவே ஓர் குளத்தையும் சுற்றிச்சோலையையும் கண்டார். அங்கு இவர் ஓரிரவு வசித்துக் காலையில் மீண்டுமக் குளக்கரையையடைந்தார். அங்கு ஓர் பிணம் மிதந்துவர, அதை ஒரு தேவலோகப்புருடன் விமானத்தைவிட்டிறங்கித்தின்றான். அதைக்கண்ட இம்முனிவர் இஃதென்னை! எனவினவ அவன் இவரை வணங்கிச்சொன்னதாவது "ஐயா, நான் விதர்ப்பதேசாதிபதியாகிய சுதேவன் மகன் சுவேதன் என்பவன். நான் வெகுகாலம் அரசாண்டபிறகு என் குமாரனுக்குப் பட்டங்கட்டித் துறவியாயிதேவிடத்திற்றவம்புரிந்தேன்; அக்காலத்தில் தேவேந்திரன் சந்நியாசி ரூபமாகவந்து பிச்சைகேட்க, அவனுக்கு யான் பிச்சை கொடுத்தேனில்லை. ஆகையால் யான் சுவர்க்கலோகத்தைப் பெற்றும் எனக்குப் பசிதீரவில்லை. அதற்கு நான்முகன் கட்டளையாதெனின், 'உனது சவத்தையே நீ

தின்பாய்; அங்கு அகஸ்தியமுனி வருங்கால் அவரைக் கண்டு பிறகு நற்கதி பெறுவாய்' என்பதே. ஓ மகானே! நீவிரே அம்முனிமணியாயின் என்னை யாண்டருளவேண்டும்" என்று கேட்டுக்கொண்டான். அவ்விதமே அம்முனி அவனுக்கு அச்சாபத்தைத்தீர்த்தார். அதற்காக அவனிடத்தில் அநேகவாபரணங்களைப் பெற்றுக்கொண்டு பிறகு உயர்ந்த விந்தியபர்வதத்தை ஆழ்த்தித்தென்னாட்டைச் சீர்படுத்தி அநேக புண்ணிய நதிகளைக்கற்பித்து, நிலவளம் நீர்வளம் உண்டுபண்ணி அநேக மகரிஷிகள் வசிக்கும்படியாக சௌகர்யம் செய்தார். ஓர் சமயத்தில் விருத்திரன் முதலிய அசுரர்கள் கடலில் மூழ்கிக்கொண்டும் இரவில் வெளிவந்தும் கொல்லுகின்ற சங்கதியையறிந்து இந்திரனுக்குச்சகாயமாய்க்கடலை உட்கொண்டார். இவர் பிறகு, ஸ்ரீராமன் தென்னாட்டிற் பிறந்த இராட்சதர்களை வெல்லவேண்டி இந்திரன் தம்மிடம் கொடுத்த ஆயுதங்களை ஸ்ரீராமபத்திரனுக்கு ஈன்றும், யுத்தகாலத்தில் ஆதித்யஹிருதயத்தை அவருக்கு உபதேசித்தும், சிவகீதை என்னும் சாஸ்திரத்தையும் விளக்கினார். இம்மாதிரி அநேகம் முனிவரது சரித்திரசங்கிரகமும் இவ்வித பரமயோகியாகிய இவரது திவ்ய சரித்திரமும் எல்லோரும் கேட்கப்பாலது.

# பாலர் நீதி.

1. அரைப்படிப்பு அகந்தைக்கிருப்பு.
2. ஆதரவின்றி வாதாடாதே.
3. இறப்பதை நினைத்து யசஸ்ஸையுயர்த்து.
4. ஈந்துணாச்செல்வம் இருந்தென்னபலன்.
5. உள்ளதைக்கொண்டு உள்ளந்திருத்திக்கொள்.
6. ஊக்கஞ்செலுத்தி யுழைப்பதுபுத்தி.
7. என்னகொடுப்பினும் இன்சொல்லொடுகொடு.
8. ஏற்றவேலையை நேர்த்தியாய்ச்செய்.
9. ஐசுவரியம் அநித்தியபோகம்.
10. ஒருதொழிலாவது ஊர்ச்சிதப்படுத்து.
11. ஓரஞ்சொல்பவன் சோரன்போன்றவன்.
12. ஔஷதசுகத்திலும் ஆகமநேறின்சுகம்.
13. கற்றவர்க்கெவரும் உற்றவராவர்.
14. சற்குருவணக்கம் சர்வசிலாக்கியம்.
15. ஞயமாய்நடந்தால் பயமேயில்லை.
16. டம்பக்கூத்தாம் வம்பர்வார்த்தை.
17. தம்பிக்குத்தமையன் தந்தைசமானன்.
18. நம்பினபெயர்க்கு நயமுண்டாக்கு.
19. பகைஞரைவைப்பது பக்கத்தீயது.
20. மனோநிச்சயம் மகான்கள்பாக்கியம்.
21. யந்திரம்போல யாக்கையைப்பெறு.

22. ரகசியச்சொல்லை அகத்திலடக்கிவை.
23. லட்சியத்தோடு லட்சணங்கற்றறி.
24. வருந்தியழைத்து அரும்பசியாற்று.
25. கல்வியில்லாதவன் கண்ணில்லாதவன்.
26. கால்துட்டாகிலும் காலத்தேகொடு.
27. கிளைக்கிறபோதே களையைக்கிளறு.
28. கீர்த்திக்கழிவு கிஞ்சித்துமில்லை.
29. குடிவெறிக்காரன் குலத்தைக்கெடுப்பான்.
30. கூட்டங்குமிசரைக் கூடியிராதே.
31. கெடுப்படிக்கடனைக் கொடுப்பதுமேன்மை.
32. கேள்விச்சொல்லையே கேட்டுமுடியேல்.
33. கைப்பொருள்போகுங் கட்சிமேற்பட்டால்.
34. கொஞ்சஞ்சொல்லினும் கோர்வையாய்சொல்லு.
35. கோபியைக்காட்டிலும் லோபிகுணவான்.
36. கௌத்துவஞ்செய்வது களவுக்கொப்பது.
37. சத்துருவாகிலும் மித்திரனுக்கு.
38. சாக்குச்சொல்வது யோக்கியப்பழுது.
39. சிட்சைசெய்யுமுன் எச்சரிப்பதுநலம்.
40. சீர்திருத்தத்திற் சிந்தையைசெலுத்து.
41. சுருதிவாக்கியம் சுகத்துக்குயோக்கியம்.
42. சூனியனானவன் ஞானசூனியன்.
43. செய்வதைத்திருந்தச் செய்வதுதகுதி.
44. சோர்ச்சேர்க்கை சேதம்விளைக்கும்.
45. சைத்தியங்கொள்ளச் சற்றுமிடங்கொடேல்.
46. சொற்கேளாதவன் சுகங்கெட்டலைவன்.
47. சோதித்தறிந்து போதிக்கத்தொடங்கு.
48. சௌபாக்கியத்திலும் சன்மார்க்கம்நலம்.
49. ஞானமில்லையோ மானமுமில்லை.
50. தன்சம்பாத்தியம் தனக்குச்சிலாக்கியம்.

# சேஷப்பய்யர்.

உடனே லக்ஷ்மிக்கு தேகம் படபடத்து, அவள் "அடே பாவி, நான் பிறந்ததுமுதல் இதுவரையில் ஒருவரும் என்பேரில் விரல்போட்டதில்லையே, அப்படிப்பட்ட என்னை நீ கைநீட்டும்படியாக ஏற்பட்டுவிட்டது. உனது நெஞ்சு ஆழ்மையை ஸ்வாமியாகவே பார்த்து அடக்கிவிடுவார்" என்றாள்.

மறுபடியும் பிச்சுவய்யன் அவளுடைய கூந்தலைப் பிடித்து கீழே தள்ளி அவளை அவ்வரைக்குள்ளேயே நாலாபக்கத்திலும் இழுத்து மேன்மேலும் அடித்து உதைத்துக்கொண்டே 'இனி ஐயாவய்யன் வீட்டுவழி போகாதே. என்னை கலியாணம் செய்துகொள்ளுகிறேன் என்று சொல்லு. இல்லாவிடில் இன்னமும் ஹிம்ஸிப்பேன். அதற்கும் படியாவிட்டால் உன் உயிர்போகுமளவும் ஒரு கைபார்த்துத்தான் விடுவேன். என்ன சொல்லுகிறாய்' என்றான்.

லக்ஷ்:—'அடே கொலைகாரா! நீ என்னை தொட்டு அடிக்கும்படி ஏற்பட்டபிறகு என் உயிர் இருந்தாலென்ன போனாலென்ன. நான் அதை ஒரு பெரிதாக மதித்திருக்கிறேன் என்று நினையாதே. இன்னமும் உன்னாலானதை செய்துபார். ஒரு நாயிடத்தில் அகஸ்மாத்தாய் ஒரு முழு தேங்காய் அகப்பட்டால் அதை அந்நாய் என்ன செய்யக்கூடும். அது அதை முதலில் மோந்துபார்க்கும். பிறகு உள்ளே ஒரு இனிப்பான வஸ்து இருக்கிறதென கண்டுபிடித்து அதை தின்கவேணுமென்கிற ஆவலின்பேரில் தன் நகங்களினாலும் பற்களினாலும் உரிக்க யத்தனிக்கும். அவ்வித யத்தனங்களினால் அதன் நகங்கள் பற்கள் இரண்டிற்கும் வேதனை உண்டாவதைத்தவிர வேறு

யாதொரு பிரயோசனத்தையும் அடையமாட்டாது. அதைப் போலவே நீ என்னை எவ்விதத் துன்பப்படுத்தியபோதிலும் உனது எண்ணம் ஒருபோதும் நிறைவேறப்போகிறதேயில்லை. ஆகையினல் இனியாவது நீ யாரென்றும் உன்னுடைய நிலைமை இன்னதென்றும் நீ செய்துவரும் காரியங்கள் உனக்கு பலிக்குமாவென்றும் இத்துர்ப்புத்தியினல் பிந்தி உனக்கு நேரக்கூடிய கெடுதல்கள் இன்னதென்றும் செம்மையாய் ஆலோசித்து பார்த்துப்புத்தியாய்ப் பிழை' என்ருள்.

உடனே அவன் மறுபடியும் அந்த லக்ஷ்மியை தன் பலம் கொண்டமட்டும் காலால் ஒரு உதை உதைத்து ஒரு மூலையில் தள்ளி, அவ்வறையைவிட்டு வெளியேவந்து, அதன் கதவை வெளிப்புறம் இழுத்துத் தாழ்ப்பாளிட்டு பூட்டிக்கொண்டு தான் படுத்துக் கொள்ளும் இடத்திற்கு வந்து படுத்துக்கொண்டான்.

மறுநாள் பொழுதுவிடிந்து வெய்யல் புறபட்ட பிறகு தான் சேஷப்பய்யர் மெத்தையை விட்டு கீழே வந்தார். அவருடைய வரவை மிக ஆவலாய் எதிர்பார்த்துக் கொண்டிருந்த பிச்சுவய்யன் அவரைக் கண்டவுடனே 'ஐயோ மாமா, நமது கோரிக்கைகள் எல்லாம் கெட்டுப்போய் விட்டது. இவ்வளவு நாளாகப் பாடுபட்டு ஒரு வழியில் கொண்டுவந்து வைத்திருந்த லக்ஷ்மி இப்பொழுது அடியோடு மாறிவிட்டாள். நேற்று சாயங்காலம் வரையில் எனக்கு கட்டுப்பட்டே பதில் சொல்லிவந்த அவள் நேற்று விளக்கு வைத்தது முதல் அதைப்பற்றி இனி நினைக்காத விதமாய்ப் பேசிவிட்டாள். பிறகு தாங்கள் உத்திரவிட்ட பிரகாரம் கொஞ்சம் கை நீட்டியும் பார்த்தேன். அதற்கும் அவள் அசங்கவில்லை. கடைசியாக நான் அவளை அவளுடைய அரையிலேயே வைத்து அக்கதவை இழுத்துப் பூட்டி அதன் சாவியை என்னிடம் வைத்துக்கொண்டிருக்கிறேன்' என்று சொல்லி வாய் மூடுமுன், கிழவர் 'அடே பிச்சு! அந்த நெஞ்சழுத்த முள்ள தடைகாலியை என்ன பாடு படுத்துகிறேன் பார். "விறை ஒன்றுபோட சுறை ஒன்று முளைக்குமா" என்பதற்கிணங்க அவளுடைய தாயாரின் குணங்கள் எல்லாம் அவளுக்கும் படிந்திருக்கிறது நல்லது, அவளிடம் போவோம். வா' என்று சொல்லி இருவருமாக லக்ஷ்மியினுடைய அரைக்கு சமீபத்தில போனர்கள். அவள் தனது

பாட்டனாரைப் பார்த்தவுடனே 'ஐயோ! தாதா! இந்தப் பாவி என்னைக் கல்வியாணம் செய்துகொள்ள வேணுமாம். அதற்காக இவன் என்னை கொஞ்சநெஞ்ச பாடா படுத்தியிருக்கிறான். உங்கள் புத்திக் கேர்க்க அவன் கேட்பது நியாயமா. கேவலம் பொங்கலாண்டியாகிய அவனுக்கு அவ்வளவு துணிகரம் உதவுமா. அப்படிப்பட்டவனை இனி இங்கே அரை நிமிஷம் கூட வைத்திருக்கலாமா?' என்று கூக்குறல் இட்டு அழுதாள். அதற்குக் கிழவர், 'அடியே, மெள்ளப் பேசு. உன்னுடைய வாய்ப்பட்டித்தனத்தை என்னிடம் காட்டாதே. இவனும் ஒரு ஆண்பிள்ளை தானே. இவனைக் கலியாணம் செய்துகொள்வதினால் உனக்குண்டாகும் நஷ்டமென்ன. அப்படித்தான் இவனுக்கு இப்பொழுது என்ன அதிக வயதாய்விட்டது. நான் ஆராய்ந்தவரையில் இவனை விட வேறு யோக்கியமான புருஷன் அகப்படுவான் என்பதை சொப்பனத்திலும் நினையாதே. உன்னைக் கலியாணம் செய்துகொள்ளும்படி நானாகவே இவனை வலுவில் கேட்டுக்கொண்டேனே தவிர இவனாக அதைப்பற்றி நினைக்கவாவது பிரஸ்தாபிக்கவாவதில்லை. அவ்விதமாக நான் கேட்டுக்கொள்ளாதவரையில் இவன் உன்னை ஒருக்காலும் லக்ஷ்யம் செய்யவே மாட்டான். காலம் இருக்கிற நீதியோ பெரும்பாலும் ஒருவன் பால்யமாயும் இரண்டு எழுத்து கற்றுக்கொண்டவனாயும் வாட்டசாட்டமுள்ளதும் அங்க ஈனமில்லாததுமான சரீரமும் அதற்குத் தகுந்த அழகும் பொருந்தியவனாயும் தன் தகப்பன் பாட்டன் நாளில் சம்பாதித்து வைக்கப்பட்டிருக்கும் சொற்ப சொத்துக்களை உடையவனாயும் இருப்பானேயாகில் அவன் தான் கலியாணம் செய்துகொண்ட பெண்சாதியை எறிட்டு பார்க்கிறதேயில்லை. அதோடு கூட அவன் அப்பெண்சாதியை ஒரு அடிமைபோலவே நடத்தி வருவான். கையில் இருந்த காசும் தேகத்தில் இரத்த நிமிரும் உள்ளவரையில் அவனுடைய புத்தியானது துன்மார்க்கத்திலேயே செலவழிந்துகொண்டிருக்கும். பிறகு ஆடி ஓடி நாடியில் வந்தவுடனே அவன் அம்மாடி அப்பாடி என்று புலம்பிக்கொண்டு பெண்சாதி கழுத்தை அறக்கவருவான். போனாலும் போகிறது அப்படிப்பட்டவனாகவே ஒருவனைப் பார்த்து பிடிப்போமென்றாலும் நமது வடமசாதியில் அரைவயத்துக் கஞ்சிக்கும் இருந்து கோண எழுத்தாகிய இங்கிலீஷும் கொஞ்சம் படிப்பவனாக ஒரு பையன் இருந்து

விட்டால் அவனுடைய பெற்றோர்கள், பினல்கோடில் அபராதம் விதிப்பதுபோல் ஆயிரம் கொடுப்பாயா அல்லது இரண்டாயிரம் கொடுப்பாயா என்று இரக்கமன்னியில் கேட்கத் தலைப்படுகிறார்கள். நானே தினப்படி காலக்ஷேபம் செய்வதே திண்டாட்டமாயிருக்கையில் உனக்காக நான் எங்கே போய் பணம் தேடக்கூடும். இப்பிச்சுவய்யன் விஷயத்திலோ அப்படிப்பட்ட தொந்திரவுகள் ஒன்றுமில்லை. ஆகையினால் எல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்க்கையில் இந்தப் பிச்சுவய்யன் தான் என் மனதிற்குப் பிடித்தவனாக இருக்கிறான். இவனுக்கு ஒரு கண்ணும் ஒரு காலும் ஊனமாயிருந்தாலும் இவன் பார்வை நடை இரண்டிலும் மற்றவர்களுக்குப் பின் வாங்குகிறானா. இவனை நீ கலியாணம் செய்துகொள்ளாதவரையில் உன்னை லேசாக விட்டுவிடுவேனென்று மாத்திரம் நினைக்காதே.'

லக்ஷ்:—தாதா! கதவைத் திறவுங்கள். மற்ற விஷயங்களைப் பிந்தி பேசிக்கொள்வோம்.

சேஷ:—பிச்சு! கதவைத்திறடா.

என்று சொன்னவுடன் அவன் தன் இடுப்பில் இருந்த சாவியை எடுத்து பூட்டியிருந்த கதவைத் திறந்தான். பிறகு கிழவரும் அவனும் அவ்வறைக்குள் போனார்கள். உடனே

சேஷ:—லக்ஷ்மி நான் சொன்ன விஷயத்திற்கு என்ன முடிவு சொல்லுகிறாய்?

லக்ஷ்:—என்னுடைய இஷ்டமும் உங்களுடைய அபிப்பிராயமும் ஒன்றுக்கொன்று வித்தியாசப்படுகிறதே.

சேஷ:—உன் இஷ்டத்தைத் தான் சொல்லு பார்ப்போம்.

லக்ஷ்:—நான் அம்மணியம்மாளினுடைய செல்வப் புதல்வரைத் தான் என் கணவராக குறிப்பிட்டிருக்க

சேஷ:—(விசுவாமித்திரர் மூர்த்தீகரித்ததுபோல்), அடி, சண்டாளி! உன் புத்தி இப்படியேன் கெட்டுபோய் விட்டது? அச்சொள்ளைப்புதரை நான் ஒரு பொருட்டாக மதித்திருக்கிறேனா? அவன் எந்த வகையில் சேர்ந்தவன்? அயோக்கியனுக்கெல்லாம் அவன் தான் முதல்பாதம். அவன் பேருக்கு மாத்திரம் ஐயாவய்யனுடைய பிள்ளை என்று வழங்குகிறானே தவிர

உண்மையில் அவன் ஐயாவய்யனுக்குப் பிறந்தவனே அல்ல. அதையும் தவிர இறந்துபோன உன் தாயார் இந்த வீட்டை விட்டு வெளிக்கிளம்பும் காலத்தில் அந்த அம்மணியம்மாள் தான் அவளுக்கு உடந்தையாயிருந்து எங்கேயாவது ஓடிப்போய் பிராணனை விடு என்று துர்ப்போதனை செய்தாள். அதற்கு சில நாளைக்குப் பின் அவளை உன் தாயார் எங்கேயென்று கேட்டதற்கு அவள் போனது தனக்கு தெரியாதென்றே சாதித்து விட்டாள். அப்படிப் பட்டவளுடைய பேச்சை எடுத்தாலே எனக்குப் பத்தி எறிகிறது. இங்கிருந்து கிளம்பிய உன் தாயார் அம்மணியம்மாள் வீட்டில் இரண்டு நாள் வரையில் தங்கியிருந்ததாகத்தெரியவந்தது. அப்படிக்கிருக்க உன் தாயார் அவளிடத்தில் தான் இன்னது செய்யப்போகிறேன் என்பதைப் பற்றி ஒன்றும் சொல்லாமலா போயிருப்பாள். அவ்வம்மணியம்மாளுடைய பிள்ளையாகிய தடிப்பாலனுக்கா உன்னை கலியாணம் செய்து கொடுக்கச் சொல்லுகிறுய்? ஏற்கனவே நான் அந்தப் பயலே என் வீட்டுவழி வராதே என்று கண்டித்திருக்கும் விஷயமும் உனக்கு தெரியுமல்லவா? அப்படிபட்ட தத்தாரி, அயோக்கியன், போக்கிறி, காலாடி, உருப்படாதவன் ஆகிய அவ்வற்பாயுள்காரனையா நீ உன் கணவனாகக்குறிப்பிட்டிருக்கிறுய்?

லக்ஷ்:—(தன் தாயாரைப் பற்றிய பிரஸ்தாபம் வந்ததுமுதல் அவளைப்பற்றி மனம் உருகி) தாதா! என் தாயார் இவ்விதமாய் இருப்பாள் என்பது கூட எனக்கு தெரியாதே. பெற்ற பெண்ணுகிய என்னை விட்டுப் பிரிய அவள் எப்படி மனம் துணிந்தாள்? இவ்வீட்டை விட்டு விலகும்படியாக அவளுக்குண்டாகிய மனவருத்தமென்ன? நீங்கள் அவளைப்பற்றி பேச ஆரம்பிக்கையில் இறந்துபோன உன் தாயார் என்று சொன்னீர்களே. அவள் எப்போ எவ்விடத்தில் இறந்தாள். நான் அந்த விருத்தாந்தங்களை அறிந்துகொள்ள மிக ஆவலுள்ளவளாக இருக்கிறேன். தயவு செய்து அதைச் சொல்லவேணும் என்று கேட்டுக்கொண்டாள்.

சேஷ:—கெட்டுப்போன அக்கழுதையின் பேச்சை பேசவும் வேண்டுமா? உன் தகப்பனர் இறந்து சுமார் ஒருவருஷம் வரையில்

அவள் இந்த வீட்டிலேயே இருந்துவந்தாள். பார்வைக்கு ஒரு பதிவிரதைபோல் நடித்து வந்த அவள் உள்வயணத்தில் நடத்தைப் பிசகாயிருந்துவந்ததாக எனக்குத் தெரியவந்தது. அதன்பேரில் நான் அவளைக் கொஞ்சம் கண்டிக்கத் தலைபட்டேன். அதனால் தான் அவள் இவ்வீட்டை விட்டு வெளிக்கிளம்பி விட்டாள். அவள் எக்கேடு கெட்டுப்போனாலும் போகட்டும் என்று பேசாமலிருந்து வரவேண்டிய நான் வினைத் தெரியாத குழந்தையாயிருந்த உன் நிமித்தியம் அவளை பல இடங்களிலும் தேடச்சொன்னேன். அவள் ஒரு இடத்திலும் அகப்படவேயில்லை. கடைசியாக அவள் தன்னை இனி தேடவேண்டாமென்றும் தான் இறந்துவிட்டதாகவே கணக்கிட்டு விடுங்கள் என்றும் ஒரு கடிதம் அனுப்பினாள். பிறகு வெகுநாள் வரையில் அவளுடைய தகவல் ஒன்றும் தெரியாததால், அவளுக்காக நடத்தவேண்டிய உத்தரக்கிரியைகளை எல்லாம் ஒழுங்காய் நடத்திப்போட்டேன். அப்பாவி இக்குடும்பத்தை விட்டுக் கிளம்பிய அன்றுமுதல் இன்றுவரையில் உன்னை ஆயிரம் பாடு அரும்பாடுபட்டு வளர்த்திருக்கிறேன். அவ்வளவு பிரயாசையுடன் மனுவாக்கப்பட்டிருக்கும் நீ இப்பொழுது என் வார்த்தைக்கே பிரத்தியுத்ரம் சொல்லுகிறாய். நல்லது, உன் பிடிவாதம் எம்மட்டும் செல்லுகிறது என்பதைத் தான் பார்க்கவேணும்.

லக்ஷ்:— தாத்தா, தங்களுக்கு என்பேரில் எவ்வளவு வருத்தம் உண்டானபோதிலும் என் சங்கல்பத்தை மாற்றப் போகிறதில்லை. ஆனால் அது விஷயத்தில் தெய்வத்திற்கே சம்மதமில்லாதவரையில் என் பிராணனைப் போக்கிக் கொள்ளுகிறதே தவிர மற்றவர்களை ஏறிட்டுக் கூடப்பார்க்கமாட்டேன்.

சேஷ:—இவள் ஒரு பெரிய சண்டியாயிருக்கிறாள். நீ இன்றுமுதல் இவளை இவ்வீட்டை விட்டு வெளியே விடாதே. இவளுக்கு தினம் ஒன்றுக்கு ஒருவேளை மாத்திரம் சாதம்போடு. அவள் அவசியமாய் வெளியே போய்வரவேண்டிய காலங்களில் நீயும் கூடவே போய் திரும்பவும் அழைத்துவந்து காபந்தாய் பார்த்துக்கொள். அக்காலங்களைத் தவிர மற்ற காலங்களில் இவ

ளை இந்த அரையிலேயே சிறைப்படுத்திவை. இவள் என்றைய தினம் உன்னையே கலியாணம் செய்துகொள்ளுகிறேனென்று சொல்லுகிறாளோ அன்றையதினம் வரையில் இவள் இந்த நிர்ப்பந்தத்தில் தான் இருக்கவேண்டும். அப்படியும் இவள் இணங்காதவரையில் அதற்குமேல் வேறு சிலவழிகளைக்கொண்டு இவளை உனக்கு மனைவியாக்கிவிடுகிறேன். நான் உன்னிடம் ஏற்கனவே சொல்லியிருக்கும் விஷயங்களெல்லாம் ஞாபகமிருக்கட்டும்.

பிச்சு:—மாமா! எனக்கு நீங்கள் அதிகமாக ஒன்றும் சொல்லவேண்டாம். தாங்களோ என்னுடையவும் இந்த லக்ஷ்மியினுடையவும் நன்மையை உத்தேசித்து இவ்வளவு பிரயாசை எடுத்துக் கொள்ளுகிறீர்கள் என்பதை நான் அறியாதவன் அல்ல. இவளும் அதை அறியாமலா இருந்து வருவாள்.

சேஷ:—இவள் அதை கண்டுபிடிக்கக் கூடியவளாயிருந்தால் என் வார்த்தைக்கு சரிசொல்ல தடையென்ன? இவள் இவ்வளவு தூரம் பேசும்படி இடம் உண்டானதற்கு காரணங்கள் எல்லாம் கூடி இவள் அடிக்கடி பக்கத்துத் தெருவிற்குப் போகும் காலங்களில் தடை செய்யாமலிருந்த குற்றமே தவிர வேறில்லை. கடைசியாக இவளும் இவளுடைய தாயாரைப்போல் கெட்டழிந்து போவாள்போல் தோணுகிறது, என்று சொல்லிவிட்டு மெத்தைக்குப் போய்விட்டார்.

லக்ஷ்மியோ, சிறைச்சாலையில் இருப்பதுபோல் அவளுடைய அரையிலேயே பலவித நிர்ப்பந்தத்தில வைக்கப்பட்டிருந்தாள். கிழவர் உத்திரவு பிரகாரம் அவளுக்கு தினம் ஒன்றுக்கு ஒருவேளை சாப்பாடு தான் போடப்பட்டு வந்தது. அதுவும் காலாகாலத்தில் கிடைக்கிறதில்லை. பிச்சுவய்யனே தனக்கு எப்பொழுது இஷ்டப்பட்டதோ அப்பொழுதுதான் அவளுக்கு இரண்டு சோற்றைக் கொண்டுவந்து போடுவான். மற்றவை முன்பின் நடந்தாலும் அவளை தினப்படி அடிப்பது அல்லது தொந்திரவு செய்வது முதலிய விஷயங்களில் அவன் கொஞ்சம் கூட தவறுகிறதே இல்லை. கிழவனே அவளைக் கண்டால் ஏதாவது வார்த்தை கொள்ளும் என்கிற எண்ணம் கொண்டு அவள் இருக்குமிடத்திற்கே வருகிறதில்லை. அவர்கள் இரு

ந்துவந்தவீடோ மகா விஸ்தீர்ணமுள்ளதென்றும் ஒருவர் அதன் மெத்தையிலிருந்து கூப்பிட்டால் சமயல் கட்டிலுள்ளவர்களுக்குக் கேட்காதென்றும் முதல் அத்தியாயத்தில் சொல்லியிருக்கிறோமல்லவா? அந்த லக்ஷ்மியினுடைய அரையானது அச்சமயல்கட்டிற்குப்போகிற வழியில் அதற்கு பத்து அடி தூரத்தில் இருந்துகொண்டிருக்கிறது. இங்கே இவளை பிச்சுவய்யன் அடித்து தொந்திரவு செய்யுங் காலங்களில் இவள் எவ்வளவு உறக்க சத்தமிட்டழுதாலும் அது மெத்தையிலுள்ள கிழவர் காதிலேயே விழாதிருக்க கூடிய நிலைமையில் அதற்கு சுமார் ஒரு பர்லாங்கு தூரத்தில் இருக்கும் இரஸ்தாவில் நடமாடுகிறவர்களா அதை அறிந்துகொள்ளக் கூடும். அப்பாழும் கட்டடத்தில் அடிப்பது மாத்திரமல்ல கொலை செய்தபோதிலும் அதைபற்றி கேட்பார் ஒருவருமில்லை. இவ்வளவு நிர்ப்பந்தமான ஸ்திதியில் இருந்துவரும் லக்ஷ்மியினுடைய நிலைமை எப்படி இருக்குமென்பதை நாமே நிதானித்துக் கொள்ளலாம். அவள் ஒரு சமயமல்ல பல சமயம் பிராணனை விட்டு விடுவோமா என்று யோசித்தாள். அக்காலங்களில் அவளுடைய புத்தியில் இது சாச்வத தண்டனை யல்ல. இதற்கெல்லாம் கடவுள் ஒரு வழிவிடாமல் இருக்கமாட்டார் என்கிற தோற்றம் ஏற்பட்டுகொண்டே வந்ததால் அவ்விதம் செய்யவிடாமல் தடுத்துக்கொண்டே வந்தது. அதன் பேரில் அவள் அவளுக்குத் தெரிந்தவரையில் கடவுளுடைய மகிமைகளையும் அவருடைய தயாள குணங்களையும் பற்றி நினைத்து கசிந்துருகி அவரையே தியானம் செய்துகொண்டிருந்தாள்.

இவளுக்கு இவ்விதமாக காவல் ஏற்பட்டு சுமார் 15 நாளைக்குப் பிறகு ஒருநாள் சேஷப்பய்யர் பிச்சுவைய்யனைப் பார்த்து லக்ஷ்மி எம்மட்டுமிருக்கிருள் என்று கேட்க அதற்கவன், ‘மாமா அதைப்பற்றி இனிப் பேசி பிரயோசனமில்லை. அவள் மனதைத் திருப்பவேண்டிய விஷயத்தில் நான் என்னுல் கூடிய சாமர்த்தியங்களை எல்லாம் காட்டி பார்த்தேன். அவள் படிகிறவழியாகக் காணவில்லை. ஒருக்கால் உங்களுக்கு எங்கே மனஸ்தாபம் வரப்போகிறதோ என்பதைப் பற்றி மாத்திரம் அவளை இன்னமும் அடைத்து வைத்திருக்கவேண்டியிருக்கிறதே தவிர இல்லாவிடில் அவள் எக்கேடு கெட்டுப்போனுலும் போகிருளென்று விட்டுத் தூத்தியிருப்பேன். ஒருவாறு அவள் தங்களுடைய கட்டாயத்திற்காக எனக்கு வாழ்க்கைப் பட்டபோதி

லும் பிறகு அவள் அம்மணியம்மாள் பிள்ளையினிடம் தான் போய்ச் சேர்ந்துவருவாளே தவிர என்னிடமிருந்து குடித்தனம் செய்வாள் என்று எனக்கு நம்பிக்கையேயில்லை. ஆகிலும் தங்களுக்காக நான் அதில் இன்னமும் முயற்சி செய்து பார்க்கிறேன்' என்றான். அதற்குக் கிழவர் 'பிச்சு, இப்பொழுது எனக்கு ஒரு யுக்தி தோணுகிறது. அது யாதெனில்:—இந்த லக்ஷ்மியின் மனதைத் திருப்பவேண்டிய விஷயத்தில் நம்மைப்போலொத்த ஆண்பிள்ளைகள் போதனை செய்வதைப் பார்க்கிலும் பெண்டுகளில் யாராவது முயற்சி செய்து பார்த்தால் அது கட்டாயம் பலிதத்திற்கு வந்துவிடும். ஆகையினால் நீ இப்பொழுதே அம்மணியம்மாள் வீட்டிற்குப் போய் அங்குள்ளவர்களுக்கெல்லாம் லக்ஷ்மி ஸௌக்கியமாய் இருக்கிறாளென்றும் அவளுக்கு விவாகம் ஆகவேண்டிய விஷயத்தில் நான் மெத்தவும் கவலைப் பட்டுக்கொண்டிருக்கிறேனென்றும், அவளுக்காக நான் குறிப்பிட்டிருக்கும் மாப்பிள்ளை இவ்வூரிலேயே இருக்கிறானென்றும் அக்கலியாணம் முடியும் வரையில் லக்ஷ்மியை வீட்டைவிட்டுப் போகவேண்டாமென்று சொல்லியிருக்கிறேனென்றும் அவள் அங்கே வரத்துப்போக்காயில்லாததைப் பற்றி வித்தியாசம் பாராட்டாமலிருக்கும்படி அம்மணியம்மாளை நான் கேட்டுக்கொண்டேனென்றும் தெரிவித்துவிட்டு அக்கலியாண காரியங்களை கவனிப்பதற்கும் மற்றும் லக்ஷ்மிக்கு தாய்போலிருந்து ஸகலத்தையும் நடத்துவதற்கும் பெண்பிள்ளையாக ஒருவர் இருந்தால் சிலாக்கியமாயிருக்கும் என்கிற காரணம் பற்றி அங்கே வந்திருக்கும் தர்மியம்மாளை நான் அழைத்துவரச் சொன்னதாகவும் அவ்வம்மணியம்மாளிடம் சொல்லி அழைத்து வா. இது சம்பந்தமாய் இன்னும் எவ்வளவு பேசவேண்டுமோ அந்தப்படி எல்லாம் பேசி காரியத்தை முடித்துக்கொண்டு வரவேண்டிய விஷயத்தில் உனக்குத் தெரியாததற்கு நான் என்ன அதிகமாய்ச் சொல்லப்போகுறேன்.' அதற்கு அப்பிச்சுவய்யன் 'எஜமானே, உங்களுடைய யுக்திக்கு மதிப்பிட்டு முடியாது. தாங்கள் சொல்லிவந்தது போலவே அத்தர்மியம்மாள் மனது வைத்தால் நமது லக்ஷ்மி அதிசீக்கிரம் வசப்பட்டுவிடுவாள். நான் அந்தம்மாளை எப்படியாவது கொண்டுவந்து விடுகிறேன்' என்று சொல்லிக் கொண்டு கிளம்பிவிட்டான். ஆனால் குற்றமுள்ள நெஞ்சு குருகுறென்று வாதிக்குமானதால் அவன் போகும்பொழுது தான் செய்தி

ருக்கும் கொடுமைகளும் நிர்நிமித்தியமாய் அம்மணியம்மாளை தூஷித்ததும் அவனைத் தொந்திரவு செய்துகொண்டேயிருந்தது. ஆகிலும் அவன் அதைக் காட்டிக்கொள்ளாமலே அம்மணியம்மாள் வீட்டிற்குள் நுழைந்தான். அவனைக் கண்டவுடனே அங்குள்ள அனைவரும் அவனைச்சூழ்ந்துகொண்டுகிழவர் லக்ஷ்மி இவர்களுடைய யோகக்ஷேமங்களை விசாரித்தார்கள். பிறகு அம்மணியம்மாள் 'ஐயா! வாரும் உட்காரும். என்ன கார்த்திகை பிறை கண்டதுபோலிருக்கிறதே.'

பிச்சு:—அப்படிக்கெல்லாம் இல்லை யம்மா? அவ்விடத்திய வேலை தொந்திரவுகளோ அரை நிமிஷம் கூட ஒழியவேயில்லை.

அம்மணி:—எப்போதைப் பார்க்கிலும் இப்பொழுது என்ன அதிக வேலையோ தெரியவில்லை.

பிச்சு:—அதையேன் கேட்கிறீர்கள். வரப்போகிற சித்திரை அல்லது வைகாசி மாதத்திற்குள்லக்ஷ்மிக்கு கலியாணம் செய்துவிடவேண்டுமாம். அதற்கோ இப்பொழுதுமுதல் வேலை நடக்கிறது. வீடெல்லாம் மணியாசை செய்து பொக்கை போறைகளை எல்லாம் மூடவேண்டுமாம். சுயம்பாகிகள் பரிசாரகர்கள் முதலியவர்கள் சமைக்கும்படியான இடமும் அதில் ஒரு கோட்டை அடுப்பும் தயார் செய்யவேண்டுமாம். தெருப்புறம் முதல் கொல்லைப்புறம் வரையில் பந்தல் போடவேண்டுமாம். அடுப்புக்கு வேண்டிய எரிதுரும்புகளை ஜாக்கிரதை செய்து வைக்கவேண்டுமாம். சமயலுக்கு வேண்டிய அரிசிமுதல் சகல சாமான்களையும் தயார் படுத்தவேண்டுமாம். இன்னும் எத்தனையோ காரியங்கள் ஆகவேண்டியிருக்கின்றன. அவைகளை எல்லாம் எனக்கு சரியாய்த்தான் சொல்லத்தெரிகிறதா? சென்ற 20, 25 நாளாக சமயல் சாப்பாடு நேரம் போக பாக்கி நேரத்தில் கிழவரும் நானுமாக கொல்லைப்புறம் இருக்கும் தென்னந்தோப்புக்குப்போய் அதிலுள்ள பழுப்புகளை எல்லாம் பொருக்கிவந்து குட்டையில் ஊரப்போட்டு எடுத்து கலியாணப்பந்தலுக்காக வேண்டிய கீத்துகள் முடைந்து கொண்டிருக்கிறோம்.

அம்மணி:—உங்களைப்போல் லக்ஷ்மிக்கும் ஏதோ வேலைகள் இருந்ததினால் தான் இந்த வழிகூட எட்டிப்பார்க்கவில்லைபோல் தோணுகிறது.

பிச்சு:—அதைப்பற்றியல்லவா நான் முந்தி தெரிவிக்கவேண்டும். கிழவரோ அவளை கலியாணம் ஆகும் வரையில் வீட்டைவிட்டு வெளியே போகக் கூடாதென்று உத்திரவு கொடுத்திருக்கிறார்.

அம்மணி:—அவளை யாருக்குக் கலியாணம் செய்துகொடுப்பதாக நிச்சயித்திருக்கிறது?

பிச்சு:—இந்த ஊரிலேதான் வரன் பார்த்திருப்பதாக மட்டும் சொன்னாரே தவிர அது இன்னாரென்றும் இன்ன இடத்திலென்றும் விபரம் சொல்லவில்லை.

இதைக் கேட்டவுடனே அம்மணியம்மாளுக்குண்டான சந்தோஷம் சொல்லி முடியாது. ஏனெனில் அவ்வீரராசபுர அக்கிரஹாரத்திற்குள் ஐந்தாறு வடமாள் வீட்டிற்குமேல் கிடையாது. அவ்வீடுகளுக்குள் அவளுடைய குமாரனாகிய பாலகிருஷ்ணனைத் தவிர மற்ற வீட்டுப் பிள்ளைகளுக்கெல்லாம் கலியாணம் ஆய்விட்டது. மேலும் ஏற்கனவே அதாவது அந்தம்மாளினுடைய புருஷன் இருக்கும் காலத்தில் பிரஸ்தாபம் லக்ஷ்மியை அவளுடைய பிள்ளைக்கு கொடுக்கிறதாக ஒருபேச்சு நடந்தது. அச்சமயம் அவ்விரு சிறுவர்களுடைய ஜாதகங்களையும் பரிசோதித்துப் பார்த்ததில் பொருத்த நிமித்தியம் சகுனம் முதலியன சுபகரமாகவே இருக்கின்றனவென நிச்சயிக்கப்பட்டிருந்தது. அதையும் தவிர இக்கதையின் பூர்வாங்கங்களில் சொல்லியிருக்கிறபடி லக்ஷ்மியினுடைய தாயாரும் பாலனுடைய தகப்பனாரும் இறந்துபோகாமலிருந்தால் இப்பொழுது பிரஸ்தாபித்து வரும் கலியாணம் முந்தியே ஒரு சமயம் முடிந்திருக்கவும் கூடும். அவ்வம்மணியம்மாள் இது விஷயங்களையெல்லாம் யோசித்துப் பார்த்ததினால்தான் மேற் சொன்னவிதமாக அவளுக்கு ஒரு சந்தோஷம் உண்டாயிற்று. அச்சந்தோஷக் கடலில் மூழ்கியிருந்த அவள் மறுபடியும் பிச்சுவய்யரைப் பார்த்து "ஐயா, நீர் சொல்லுவதைப் பார்த்தால் கலியாணம் பலமாய் நடக்கும்போல் காணப்படுகிறதே. அப்படிக்கிருக்க அதற்குவேண்டிய காரியங்களையெல்லாம் முந்தியே ஜாக்கிரதை செய்யவேண்டாமா? கிழவரோ தள்ளாதவர். அவர் வாயால் அதைச்செய், இதைச்செய் என்று மாத்திரம் உத்திரவு கொடுக்கக் கூடுமேயொழிய மற்றப்படி அவரால் ஒன்றும் செய்யமுடியாது. உமக்கோ சமயல் முதலிய நடமுதல் குடித்தனக் காரியங்களை கவ

னிப்பதற்கு மாத்திரந்தான் சரியாயிருக்கும். பெரிய வேலைகளாகிய கலியாணக் காரியங்களைப் பார்ப்பதற்கோ உமக்கு சாவகாசம் ஏற்படாது. லக்ஷ்மியோ அதிபால்யம். அவள் உமக்கு ஏதாவது உதவி ஒத்தாசையாய் மாத்திரம் இருக்கக் கூடுமே யன்னியில் குருவியின் தலையில் பனங்காயைக் கட்டுவது என்னும் பழமொழிக் கிணங்க பெரிய காரியங்களை அவளிடம் ஒப்படைத்தால் அதையவள் எப்படி நிர்வகிப்பாள். ஆகிலும் சகலமும் தெரிந்தவரும் வெகுநாள் அனுபோகசாலியுமான கிழவர் இதைப்பற்றியெல்லாம் யோஜிக்காமலா ஒரு பெரிய காரியாகாரியத்தை யத்தனிப்பார்.

**பிச்சு:**—அம்மா நான் இன்று இங்கே எதற்காக வந்தேன் என்பதை முந்தியே தெரிவித்திருந்தால் நீங்கள் இப்பொழுது சொல்லிவந்த விஷயங்களையெல்லாம் கேட்டிருக்கமாட்டீர்கள். கிழவர் தான் யத்தனம் செய்திருக்கும் அக்கல்யாணத்தை பூர்த்தி செய்து வைக்கவேண்டிய விஷயத்தில் உங்களைத்தான் நம்பியிருக்கிறார். அதில் ஏற இருந்தாலும் தாழயிருந்தாலும் அவைகள் எல்லாவற்றையும் மூடிக்கொண்டு போகவேண்டியது உங்களுடைய பொறுப்பென்று சொல்லச் சொன்னார். அவருடைய அபிப்பிராயத்தில் எல்லாக் காரியங்களையும் ஒழுங்கிட்டு வைத்துக்கொண்டு தான் முகூர்த்தம் குறிப்பிடவேண்டுமென்று எண்ணங்கொண்டிருக்கிறார். நேற்று நான் அவர் லக்ஷ்மி ஆகிய மூவரும் பேசிக்கொண்டிருக்கையில் லக்ஷ்மி இங்கிருக்கும் தர்மியம்மாள் அங்கே வந்திருந்தால் அக்கல்யாண சம்பந்தமாக எல்லாக் காரியங்களும் ஒழுங்காய் நடைபெறுமென்றும் பிறகு அதைப்பற்றி ஒருவரும் கவலைப்படவேண்டியதில்லையென்றும் தெரிவித்தாள். கிழவரும் அப்படியானால் அந்தம்மாளை அழைத்துக்கொண்டு வரத் தடை என்னவென்று சொல்லிவிட்டு என்னைப்பார்த்து 'பிச்சு! நாளையதினமே பக்கத்துத் தெருவுக்குப்போய் அம்மணியம்மாளிடம் இவ்விடத்திய சங்கதிகளைச் சொல்லி அவர்கள் வீட்டிலிருக்கும் புது அம்மாளை இங்கே யனுப்பும்படி நான் கேட்டுக்கொண்டதாகத் தெரிவித்து விட்டுவா' என்று உத்திரவு கொடுத்தார். அந்தப்படியே நான் இன்று புறப்பட்டு வரும்பொழுது ல

க்ஷமீ என்னைக் கூப்பிட்டு அத்தையாகிய உங்களை தான் பல முறை விசாரித்ததாகவும் கிழவருடைய கட்டளைப்படி தற்காலம் வீட்டைவிட்டு வெளியே புறப்படக் கூடவில்லையென்றும் தெரிவிக்கச் சொன்னதுடன் உங்களைக்கொண்டு இத்தருமியம்மாளை அனுப்பிவிக்க வேணுமென்றும கேட்டுக்கொண்டாள்.'

அதன்பேரில் அம்மணியம்மாள் கூடவிருந்த தர்மியம்மாளைப் பார்த்து புன்சிரிப்புடன் 'அம்மா இப்பிச்சுவய்யருக்குத் தாங்கள் தான் பதில் சொல்லவேணும். சென்ற 8, 9 வருஷமாய் அதாவது அக்கிழவர் இந்த ஊருக்கு வந்தது முதல் அவர் வீடு வேறு இந்த வீடு வேறு என்கிற பேச்மன்னியில் இருந்துவருகிரேும். அவர் சொல்லியனுப்பியிருக்கிறபடி அங்கே யாராவது பெண்டுகள் இருந்து சகல வேலைகளையும் முந்தி முடித்து வைத்துக்கொண்டால் தான் அவர் உத்தேசித்திருக்கும் கல்யாணம் சிறப்பாய் நடக்கும். அக்குடும்பமோ எனக்குத் தெரிந்தவரையில் புருஷக்குடித்தனமாகவே இருந்து வருகிறது. ஆண்பிள்ளைகள் ஆயிரம் கெட்டிக்காரர்களாய் இருந்தாலும் பெண்களைப்போல் வேலைகளைப் பார்க்கமுடியாது. ஆகையினுல் நீங்கள் அங்கே போய் சிலநாள் வரையில் இருந்து அவ்விடத்திய வேலைகளை கண்காணித்து வருவது உசிதமாயிருக்குமெனத் தோன்றுகிறது' என்றுள். அதற்கு தர்மியம்மாள் 'தாயே லக்ஷ்மி விஷயத்தில் தங்களுக்கு எவ்வளவு அபிமானம் இருக்கிறதோ அதைப்போலவே எனக்கும் அவள்பேரில் அளவற்ற பற்றுதல் உண்டென்பதைத் தாங்கள் அறியாததல்லவே. அவள் கொஞ்ச நாளாக இங்கே வராததைப்பற்றி எனக்கிருந்த கவலை அளவு சங்கையில்லை. ஈச்வரனுடைய கிருபையினுல் அவளுக்கு சீக்கிரம் கல்யாணம் ஆகி அவள் க்ஷேமமாயும் சந்தோஷமாயும் இருக்கவேணுமென்று சதா கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டேயிருக்கிறேன். தங்களுடைய உத்திரவுப் படிக்கும் அவளுடையவும் அவளுடைய பாட்டனுருடையவும் அபிப்பிராயப்படிக்கும் நான் அங்கே சிலநாள் இருந்து எனக்கு தெரிந்தவரையில் அவ்விடத்து காரியங்களை சீரிட்டு வைக்கக்கார்த்திருக்கிறேன். இன்றையதினம் அவ்வீட்டிற்குப்போவதற்கு நேர்குலமானதால் நாளை அதிகாலையில் போவதைப்பற்றி கொஞ்சம் கூட தடையில்லை. இது சங்கதியை இப்பிச்சுவைய்யரைக்கொண்டு நமது

லக்ஷ்மிக்கும் அவளுடைய பாட்டனருக்கும் தெரிவித்துவிடச் சொல்லுங்கள்' என்முள்.

உடனே அம்மணியம்மாள் 'ஐயா கேட்டுக்கொண்டீரா? நாளை பொழுது விடிந்தவுடன் இந்தம்மாளை அங்கே அனுப்பிவிட்டு மறு வேலை பார்க்கிறேன். நான் கண்டுபிடித்த வரையில் இந்தம்மா செல்வாக்கான குடும்பத்தில் இருந்தவர்களாகத்தெரியவருகிறது. மேலும் இவர்கள் அங்கு ஆகவேண்டியதாக இருக்கும் வேலைகளை நாம் சொல்லித்தான் நடத்தவேணுமென்று எதிர்பாராமல் தனக்குத் தானே செய்து முடிப்பார்கள். இது சங்கதிகளைக்கிழவரிடம்சொல்லி இந்தம்மாளினுடைய மனம் கோணுமல் பார்த்துக்கொள்ளும்படி நான் கேட்டுக்கொண்டதாகத் தெரிவித்துவிடும்' என்று சொல்லி அவரை அனுப்பிவிட்டாள்.

பிச்சுவய்யனே தான் கோரிவந்த காரியம் பலித்துவிட்டது என்கிற சந்தோஷ சமாசாரத்தை சேஷப்பய்யரிடம் போய் ஆதியோடந்தமாகத் தெரிவித்தான். அவரும் அவனைப்பலவிதமாய் ஸ்தோத்திரம் செய்துவிட்டு பிறகு அவனை நோக்கி, 'அப்பா நீ லக்ஷ்மியிடம் போய் நாளையதினம் காலமே தர்மியம்மாள் இங்கே வருவாள் என்றும் அவளிடத்தில் இங்கே நடந்திருக்கும் சங்கதிகளைக் காட்டிக்கொள்ளவேண்டாமென்றும் கலியாண காரியங்களை நடத்துவதற்காகத் தான் அந்தம்மாளை வரச்சொல்லியிருக்கிறதென்றும் தெரிவித்துவிடு. அதோடு கூட லக்ஷ்மியை நாம் இது வரையில் நிர்ப்பந்தித்து வந்த சங்கதிகளை அத்தர்மியம்மாள் அறியாத விதமாகப்பார்த்துக்கொள். இன்றுமுதல் லக்ஷ்மியை எப்போதும்போல் சுயேச்சையாய் இருந்துவரும்படி விட்டுவிடு' என்முர்.

பிச்சுவய்யனும் அந்தப்படியே லக்ஷ்மியிடம் போய் அவளை விடுவித்து அவளிடம் சொல்லவேண்டியதை எல்லாம் பக்குவமாய் சொல்லிவிட்டான். ஆனல் ஒரு சமயம் அவள் அம்மணியம்மாள் வீட்டிற்கு ஓடிப்போய் விடுவாள் என்கிற அச்சம் உண்டானதால் அது விஷயத்திலும் அவன் எச்சரிக்கையாகத் தான் இருந்துவந்தான். தனிக்காவலைப்பார்க்கிலும் அதிக துன்பத்தில் இருந்துவந்த

லக்ஷ்மியோ தான் விடுதலை யடைந்த சந்தோஷத்தை ஒரு பங்காகவும் தன் தாயைப் பார்க்கிலும் பதின்மடங்கு அன்புபாராட்டிய தர்மியம்மாள் வரப்போகிறுள் என்கிற சந்தோஷத்தை ஆயிரம் மடங்காகவும் அனுபவித்துக்கொண்டிருந்தாள்.

(இன்னும் வரும்.)

எம். எஸ். சுப்ரமணியய்யர்.



# அன்பின் வலிமை.

## X. புலி கிளம்புதல்.



சுப்பிரமணிய அய்யர் சுந்தரமய்யருடன் தமது வீட்டுக்குள் நுழைந்தார். அவர் சென்னைக்கு வந்து சில நாட்கள் தானாகின்றன. ஹேதுரையின் சகாயத்தால் அவர் சென்னையில் உத்தியோகமடைந்து சீக்கிரத்தில் பங்களூருக்கு மாற்றப்படுவாரென்றும் வாக்களிக்கப்பட்டார். சென்னையில் இருக்கும் வரை தமது நண்பரான சுந்தரமய்யருடன் காலம் கழித்தார். அன்று மாலை இருவரும் வீட்டிற்சென்று தமது நாற்காலிகளில் உட்கார்ந்துகொண்டு பற்பல விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"ஆகவே உன் கலியாணம் இப்பொழுது நிறுத்தப் பட்டிருக்கிறது."

"ஆம். ஆனால் அவர்கள் வருத்தப்படுவார்கள்."

"அவர்களிடம் சொல்லாமல் வந்துவிட்டாயல்லவா"

"ஆம். பெண்ணும் வருத்தப்படுவாள். ;என்மேல் அதிக விருப்பமுடையவள். அவளை யவ்விதம் விட்டுவரக் கூடாது. ஆனால் என்ன செய்கிறது"

"இப்பொழுதுதான் வேலையில் அமர்ந்துவிட்டாயே. அவர்களுக்குக் கடிதம் அனுப்புகிறது. உன் இருப்பிடத்தைத் தெரிவி."

"செய்யவேண்டியதே. ஆனால், இன்னமொரு பத்து நாட்களுக்குள் பங்களூருக்கே மாற்றப்படுவேன். அதனால் முன்னிருந்த ஸ்திதியிலே அங்குபோய் அவர்கள் முன் நிற்கவேண்டும் என்பது என் கருத்து."

"உன் கடனையெல்லாம் ஒழித்துவிட வேண்டாமா?"

"வேண்டியதுதான். பாதிக்கடனை யொருவாறு ஒழித்துவிட்டேன்."

"ஆனால் அவர்கள் உன்னிருப்பிடத்தைத் தெரிவிக்க மாட்டார்களா?"

"மாட்டார்கள். தெரிவிக்காமலிருக்கும்படி கேட்டுக் கொண்டிருக்கிறேன்."

"அப்படி நீ மறைந்திருப்பதனால் என்[illegible] யோஜனம்?"

"நான் அவர்களை மோசம் செய்ய எண்ணி ஓடிவிட்டதாக நினைத்திருக்கிறார்கள். அப்படியல்ல என்று ரூபிக்கத்தான்."

"சரி. இன்று இரவு வேடிக்கையாக எங்கேயாவது போகலாமென்று எண்ணுகிறேன். இரண்டொருநாள் கவலையில்லாமல் கழிக்கவேண்டும். இன்று 'ஹிந்து' இருக்கிறதா. எடு"

சுப்பிரமணிய அய்யர் பத்திரிகையை எடுத்தார். பக்

கங்களைத் திருப்பும்போது 'பங்களூர் விஷயங்கள்' என்ற தலைப்பின் கீழ் சில விஷயங்கள் எழுதப்பட்டிருந்தன. அந்தத் தாளைமாத்திரம் வைத்துக்கொண்டு மற்றவற்றை சுந்தரமய்யர் கையில் கொடுத்தார். சுந்தரமய்யர் நாற்காலியில் சாய்ந்துகொண்டு பத்திரிகையைப் பார்த்துக்கொண்டிருந்தார். சுப்பிரமணிய அய்யரோ தாம் வாசிக்கவென்று எடுத்தவற்றை வாசிக்கவே அவர் முகம் விசனமாயிற்று. கை நடுங்கிற்று. மெய் சிலிர்த்தது. தேகம் எல்லாம் வியர்த்தது. 'அடடா மோசம்போயிற்றே! இனி என்ன செய்வேன்' என்று மூர்ச்சித்து விழுந்தார். சுந்தரமய்யர் திடுக்கிட்டு எழுந்து, சுப்பிரமணிய அய்யரைப் பிடித்து சரியாய் உட்காரவைத்து 'என்னடா விசேஷம். என்ன அவ்வளவு துக்ககரமா?' என்று சொல்லியவரைக் குலுக்கினர். சுப்பிரமணிய அய்யர் அவர் முகத்தைப் பார்த்தார். பதில் சொல்லமுடியவில்லை. பத்திரிகையைக் கையில் கொடுத்தார். 'இதைப் பார்' என்று கஷ்டத்துடன் சொல்லி ஒரு வரியைக் காண்பித்தார். பின்வருமாறு அதில் எழுதியிருந்தது.

ஆச்சரியம். ஒரு பெண் காணாமற் போய்விட்டாள்.

பங்களூர் பேட்டையில்———தெருவில் குடியிருக்கும் கிளர்க்கு குப்புசாமி அய்யருடைய 13 வயதுள்ள பெண் இம்மாதம் 3-ம் வ யன்று இன்னவிடம் சென்றாள் என்பது தெரியாமல் மறைந்தாள். அன்று பகலில் அப்பெண்ணின் தந்தை அவளைக் கூப்பிட அவள் குரல் கேளாமையால் அவளைத் தேடினார். அவருடைய பந்துக்கள் வீட்டிலும் நண்பர் வீட்டிலும் தேடியும் காணப்படவில்லை. போலீஸார் தங்களாலான முயற்சிகள் எடுத்துக்கொண்டும் யாதொரு பயனும் அடையவில்லை. அப்பெண் கலியாணம் செய்யப்படும் தருணத்தில் மறைந்துபோனது தகப்

பனுருக்கு மிகுந்த வருத்தத்தை விளைவிக்கத் தக்கது. அவள் தன் தந்தைக்கு ஓரே பெண். அத்துக்கம் அவள் தந்தையின் சுகத்தைக் கெடுத்து அவரை நோயாளியாய்ச் செய்திருக்கிறது.

இதை வாசித்தானதும் சுந்தரமய்யர், 'சரி நாம் இருவரும் சேர்ந்து பிரயத்தனப்பட்டால் அப்பெண்ணைக் கண்டுபிடித்துவிடலாம். நான் இன்று ஊருக்குப்போகவில்லை. நான் பங்களூருக்குப் போகிறேன். குப்புஸாமி அய்யரைப் பார்க்கிறேன். நீ ஒரு கடிதம் அவருக்கு எழுதிக்கொடு. மற்றவைகளை நான் பார்த்துக்கொள்ளுகிறேன்.' என்றார்.

சுப்பிரமணிய அய்யர் குழந்தைபோல் அழுதுகொண்டு. 'நிச்சயமாய் அவளைத் தேடிப்பிடிக்க முடியுமா. அவள் என் உயிராய் இருந்தாளே. அவளையிழந்து நான் எப்படியிருப்பேன். அவளுக்காகவன்றோ என மானத்தைக் காக்க இவ்வளவு சிரமப்பட்டது. லக்ஷ்மி, லக்ஷ்மி. எங்கு சென்றாயோ' என்று கதறினார். சுந்தரமய்யர் சிறிது வெறுப்புடன். 'ஏய் மணீ, என்னடா இவ்வளவு சலித்துக் கொள்கிறாய். நீ ஒரு ஆண்பிள்ளையா. ஆண்பிள்ளையென்றால் அறுத்த கைம்பெண்டாட்டிபோல் அழுகிறாயே. உன் தைரியமெங்கே. உன் சாமர்த்தியமெங்கே. உன் பொறுமையெங்கே. உன் யோஜனையெங்கே. இவற்றையெல்லாம் விட்டுவிட்டு கேவலம் ஒரு பெண்ணுக்காக வருத்தப்படுகிறாயே. நம்முடைய புத்தியால் துக்கத்தை சுகமாக மாற்ற வேண்டியிருக்க துக்கத்தை யதிகப்படுத்தலாமா.' என்று கடிந்து கூறினார். ஆனால் அவர் சொல்லுவதைக் கேட்டவரல்ல. பெருமூச்சுவிட்டார். கைகள் நடுங்கிற்று. 'அய்யா' என்று நாற்காலியில் சாய்ந்தார். 'பணத்துக்கு என்ன செய்கிறாய். எவ்வளவு வேண்டும்' என்றார்.

சுந்தரம் 'மணி. நான் எப்படியாவது பார்த்துக்கொள்ளுகிறேன். நீ எழுந்திரு வெளியில் போவோம். இங்கிருந்தால் துக்கமதிகரிக்கும். வேடிக்கையாய்க் கடற்கரைக்குப் போய்விடுவோம்.' என்று சொல்லி யவர் கையைப் பிடித்திழுத்துக்கொண்டு வெளியில் வந்து கதவைப் பூட்டிக்கொண்டு வீதியில் போய் ஒரு வண்டியில் ஏறி உலாவச் சொன்னார்.

கடற்கரையில் உலாவினது அவ்வளவு திருப்திகரமாயில்லை. சுப்பிரமணிய அய்யர் பேசிக்கொண்டிருக்கும் போதே திடீரென்று லக்ஷ்மியின் ஞாபகம் வந்து பிதற்றுவார். ஆசைமொழிகளைக் கூறுவார். சுந்தரமய்யரை லக்ஷ்மியைக் கண்டுபிடிக்கும் விஷயமாய்க் குழந்தைபோல் பற்பல கேள்விகளைக் கேட்பார். சுந்தரமய்யர் கூடியவரையில் அவரை அடக்கியே வந்தார். இல்லாவிடில் சுப்பிரமணிய அய்யர் சித்தம் கலங்கியிருப்பார். அவர்மேல் குற்றமில்லை. இதுவரையில் தன் மனத்தை யொருவரிடமும் கொள்ளை கொடாமல் மிகுந்த ஜாக்கிரதையாயிருந்து பின்பும் ஜாக்கிரதையுடன் ஒரு பெண்ணைத் தேர்ந்து அவளை அன்புடன் நேசித்தாராகையால் அவளை யிழந்தது அவரால் பொறுக்கமுடியவில்லை.

கடற்கரையிலிருந்து புறப்பட்டு வீட்டுக்குச் செல்லும்போது சுந்தரம்: 'மணி. நான் உன்னுடைய அன்பான லக்ஷ்மி விஷயமாய் வேலை செய்கிறேன். என்னுடைய புத்தி, யுக்தி, சாமர்த்தியம், வலிமை என்னுடைய ஸ்நேகிதர்கள் ஆகிய எல்லா சௌகரியங்களையும் ஒன்றாகச் சேர்த்துப் பிரயத்தனப்படுகிறேன். எல்லாத் தடவையிலும் நான் ஜயமடைந்திருக்கிறேன். இதில் நான் தோற்றுவிடுவேனென்றெண்ணாதே. நீ இன்று இருந்தமாதிரி இன்னும் இரண்டு நாளிருந்தால் உன்னுடைய லக்ஷ்மி உன்னைப் பார்

க்கமாட்டாள். அவளும் துக்கப்படவேண்டியது தான். இருவரும் சுகப்படவேண்டுமென்றால் நீ சந்தோஷமாக விரு. இன்றைய எட்டாம்நாள் பார். தவறினால் பதினைந்தாம நாள் உன் பக்கத்தில் லக்ஷ்மி நிற்பாள். உன் கையால் அணையப்படுவாள். ஆனால் ஒன்றுமாத்திரம் ஜாக்கிரதை, துக்கப்படவேண்டாம், துக்கம் காட்டவேண்டாம். நான் உனக்காக வேலை செய்வதாகப் பிறருடன் சொல்லவேண்டாம். உனக்கும் லக்ஷ்மிக்கும் சம்பந்தமிருப்பதாகக் காட்டவேண்டாம். ஏனென்றால் உனக்காக நான் முயற்சி செய்வதாகத் தெரிந்துவிடும். தெரிந்தால் உன் எதிரிகள் அதிக ஜாக்கிரதையாக விருப்பார்கள்' என்று சொல்லித் தாம் ஒரு தனிவண்டி வைத்துக்கொண்டு நகரத்தின் நடுவில் புகுந்தார்.

மறுநாட் காலையில் சுந்தரமய்யர் வண்டியிலிருந்து இறங்கினர். ஒரு கையில ஒரு குடையும் மற்ற கையில் ஒரு சிறிய தோற்பெட்டியும் உடையவராய் தலையில் ஒரு வெண்மையான தலைப்பாகையும் உடம்பில் ஒரு கருப்புச் சட்டையும் காலில் ஒரு சத்தமில்லாத ரப்பர் பூட்ஸும் பூண்டு அழகான தேஜஸுடன் விளங்கினர். உதடுகளில் புன்சிரிப்பு தவழ்ந்துகொண்டிருந்தது. ஸ்டேஷனைவிட்டு வந்து காத்துக்கொண்டிருந்த வண்டிகளில் ஒன்றில் உட்கார்ந்து குறித்த விடத்திற்கு ஓட்டச் சொன்னர். வண்டி வந்து நின்றதும் அவர் கீழேயிரங்கி வாடகையைக் கொடுத்துவிட்டுத் தமது சட்டைப்பையிலிருந்து ஒரு 'கார்டை எடுத்து எதிரில் இருந்த வீட்டில் சென்று நின்றார். வீட்டு வேலைக்காரி தன் தொழிலைவிட்டு நிமிர்ந்து பார்த்தாள். 'அம்மா இந்த கார்டை வீட்டு யஜமானனிடம் கொடுத்து வருவாயா. ஒருவர் பார்க்க வந்திருப்பதாகச் சொல்' என்று கல்லு முருகும்படியான மெல்லிய குரலால் கூறினர்.

அவள் அதை மெதுவாய் வாங்கிக்கொண்டு குப்புஸாமி அய்யரிடம் கொடுத்தாள். குப்புஸாமி அய்யர் அதை வாங்கி வாசித்தார்.

இ. ஸுந்தரம் அய்யர்

சென்னை துப்பறிபவர்.

'ஸுந்தரமய்யர், நல்லது. அவரை என்னறைக்கு வரச் சொல்' என்று சொல்லிக்கொண்டே தமது அறைக்குள் சென்றார். சென்றதும் சுந்தரமயயரும் நுழைந்தார்.

'சுந்தரமய்யர். சென்னை துப்பறிபவர்' என்று சொல்லிக்கொண்டே அவரைப் பார்த்தார் குப்புஸாமி அய்யர்.

'ஆம். தங்களைப் பார்க்கலாமென்று எண்ணிவந்தேன். தாங்கள் தானே குப்புஸாமி அய்யர்.'

'ஆம். உட்காருங்கள்.'

இருவரும் உட்கார்ந்தார்கள். ஒரு நிமிஷம் வரை மௌனமாயிருந்து, 'தங்களைப் பார்க்கலாமென்று வந்தேன். தங்கள் பெண் காணுமற்போனதாகக் கேள்விப்பட்டேன். நான் துப்பறியும் உத்தியோகஸ்தர். கார்டினால் தெரியவரும். தங்களுக்கு உதவியாயிருக்கலாமோ என்று எண்ணிவந்தேன்.'

'ஜான்ஸன் அன்ஸன்ஸில் பணநஷ்டம் நேர்ந்தபோது உதவினவர் நீங்கள் தானே.'

'ஆம்.'

'உங்களுடைய பிரதாபங்களைக் கேள்விப்பட்டிருக்கிறேன். தங்களுக்கு இஷ்டமானால் எனக்கும் உதவி செய்யலாம்.'

'உதவி செய்யத்தான் கேட்டது. அதற்காகத்தான் உங்களிடம் வந்தது. பெண் காணுமற்போன விஷயத்தை

முழுவதும் கூறவேண்டும். ஒன்றும் விடக்கூடாது. அன்று அதாவது பெண் காணமற் போனவன்று நடந்தவனைத்தையும் கூறவேண்டும்.'

குப்புஸாமி அய்யருக்கு மிகவும் சந்தோஷமாயிற்று. மிகுந்த கீர்த்திபெற்ற ஒரு உத்தியோகஸ்தர் தனக்காக சிரமப்படுவார் என்று எண்ண அவர் முகம் பிரகாசம் பெற்றது.

'எப்படியாவது என் பெண்ணைக் கண்டுபிடித்துத் தரவேண்டும். என்னாலான சம்மானம் செய்கிறேன். அது விஷயம் கவலைப்படவேண்டாம்'

'கவலையென்ன. பணத்தைப்பற்றி யான் முன்னால் பேசுவதேயில்லை. இவ்விடத்திலேயும் பேசமாட்டேன். சீக்கிரம் சொல்லுங்கள்.'

'சொல்லுகிறேன். இந்தமாதம் மூன்றாம் தேதி என் வீட்டில் விருந்து நடத்த உத்தேசித்தோம். ஆனால் அது நடைபெறவில்லை. அதனால் நான் சிறிது வருத்தப்பட்டுக் கொண்டிருந்தேன்.'

'மன்னிக்கவும், எதற்காக விருந்து?'

'எனது நண்பர் சுப்பிரமணிய அய்டர் வ... ாகச் சொன்னார்கள். அவருக்காக விருந்து தயாரித்தோம். ஆனால் அவர் வரவில்லை.'

'ஏன் வரவில்லை.'

'தெரியாது. யாரோ அவர் ஊரில் வந்திருந்ததாகச் சொன்னார்கள்.'

'எங்கு போயிருந்தார்.'

'தெரியாது. இருபது நாளாக அவர் சென்றவிடம் தெரியவில்லை. வீடு பூட்டினது பூட்டினபடியே இருக்கிறது.'

'மேலே சொல்லுங்கள்.'

'விருந்து தயாரித்ததும் அவர் வராமையால் எங்களுக்கு வருத்தமாயிருந்தது. நாங்கள் சாப்பிட்டானதும் நான் எனது அறையில் தூங்கிக்கொண்டிருந்தேன். எழுந்ததும் காபி குடிக்கப் போகையில் பெண்ணைக் கூப்பிட்டேன். அவளைக் காணவில்லை. அவளுடைய மாமன் வீட்டில் இருப்பாளோ என்று அங்கும் தேடினோம். ஊரெல்லாம் தேடினோம். காணவில்லை. போலீஸில் எழுதிவைத்தோம். ஒன்றும் பயன்படவில்லை.'

சுந்தரமய்யர் சிறிதுநேரம் யோஜித்தார். பின்பு திடீரென்று கேட்டார். 'பெண் காணமற் போனதற்கு அநேக காரணங்கள் இருக்கலாம். எது உங்கள் மனதிற்குப் பிடித்திருக்கிறதோ அதைச் சொல்லுங்கள். முதலாவது தாய் தந்தையரிடத்தில் வெறுப்புக்கொண்டு தனது பந்துக்கள் வீட்டிலிருக்கலாம். அல்லது தன் ஜீவனிடம் வெறுப்புக் கொண்டிருக்கலாம். இரண்டாவது, அவள் மேலிருக்கிற நகைகளை எவனுவது களவாடியவளைக் கொலை செய்திருக்கலாம். அப்படியானுல் அவள் பிரேதமாவது நகையாவது சீக்கிரம் வெளிவரும். பெண்ணைக் கெடுக்க யாராவது முயற்சி செய்திருக்கலாம். பெண்ணுக்குக் கலியாணம் ஆகவில்லை போலும்.'

'ஆகவில்லை.'

'ஆகையால் இப்பெண்ணைக் கலியாணம் செய்ய யாராவது முயற்சிக்கவேண்டும். அல்லது இப்பெண்ணே தனக்கு இஷ்டமான ஒருவனுடன் ஓடியிருக்கலாம். உங்கள் அபிப்பிராயம் என்ன?'

'எனது நண்பர் சுப்பிரமணிய அய்யர்மேல் எனக்கு சந்தேகம். ஒருகால் அவர் இப்பெண்ணுடன் எங்கேயா

வது ஓடிவிட்டாரோ என்னவோ. அன்று காலை வந்தாரென்று சொன்னார்கள். இருவரும் மனம் ஒப்பிக் காரியத்தைச் செய்திருக்கலாம்.'

'அதாவது இருவருடைய கலியாணத்திற்கு நீங்கள் தடையாயிருந்தீர்கள். உங்கள் தடையை நீக்க இருவரும் ஓடிவிட்டார்கள்.'

'நான் அப்படித் தடையாயில்லையே. இம்மாதம் முகூர்த்தம் கூட வைத்திருக்கிறேனே.'

'பின் அப்படியானால் நீங்களறியாமல் ஏன் ஓடினார்கள். நீங்களும் சம்மதப்பட்டிருக்கும்போது அவர்கள் ஓடிப்போவானேன்? தடையிருந்தால் அல்லவா ஓடவேண்டும். அது சரியாய்த் தோன்றவில்லையே.'

குப்புஸாமி அய்யர் சிறிதுநேரம் யோஜித்தார். 'சரியில்லைதான். ஆனால் என் மைத்துனன் தான் அவ்விதம் சொன்னது.'

'சரி, வேறு யாராவது பெண்ணைக் கொண்டுபோய்க் கலியாணம் செய்ய விரும்புவார்களா?'

'அப்படி ஒருவரையும் காணோம்.'

'யாருக்காவது முன்பு கலியாணத்திற்கு வாக்குக் கொடுத்தீர்களோ?'

'கொடுத்தேன். என் மைத்துனன் பிள்ளைக்குக் கொடுப்பதாக. ஆனால் அவன் யோக்கியனல்ல. படிப்பும் போதாது. சுத்த போக்கிரி.'

'தங்களுக்கு எத்தனை பெண்?'

'ஒரே பெண்தான்.'

'எத்தனை பையன்கள்?'

'பையன்களுமில்லை.'

'ஆகவே உமது மைத்துனருக்கு ஒரு பெரிய அபகாரம் செய்தீர்கள்.'

'எப்படி?'

'உமது பெண்ணைக் கொடுத்தால் பாந்தவ்யம் விட்டுப் போகாமல் இருக்கும். அன்றியும் பெண்ணுக்குத் தக்க சீர்கள் செய்வீர்கள்.'

'அதுமாத்திரமா. என் ஆஸ்தியெல்லாம் அவளுக்கே சேரும்.'

'பின் ஏன் கொடுத்துவிடுகிறது தானே.'

'அவன் நடத்தை கெடுதல். எல்லாருக்கும் பொல்லாதவன்.'

சிறிதுநேரம் வீட்டுச் சமாசாரங்களைப் பற்றியும் சுப்பிரமணிய அய்யரையும் பற்றிப் பேசினார்கள்.

'உங்கள் சுப்பிரமணிய அய்யரைக் கண்டேன். சௌக்கியமாயிருக்கிறார். உங்களைப்பற்றி மிகவும் விசாரித்தார்.' என்று சொல்லிக்கொண்டே ஒரு கடிதத்தை நீட்டினார். அதில் பின்வருமாறு எழுதியிருந்தது.

ஐயா, நான் இதுவரையில் என்னிருப்பிடத்தைக் கூறாமல் இருந்ததைப்பற்றி மன்னிக்கவும். என் பழைய ஸ்திதியை அடையப்பிரயத்தினப்பட்டு அநேகமாய் சௌகரியமடைந்தேன். சீக்கிரம் அவ்வூருக்கே வருவேன். நேற்று தங்கள் புத்திரியும் எனது அன்புக்குரியவளுமான லக்ஷ்மி காணாமலிருப்பதைக் கேள்விப்பட்டு மிக துக்கமடைந்தேன். எனது நண்பர் சுந்திரமய்யர் அதிக சாமர்த்திய சாலியாகையால் அவரை இது விஷயமாய் பிரயத்தினம் செய்யக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அவருக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்யவும்.

உமது விசுவாசமுள்ள

சுப்பிரமணிய அய்யர்.

இதை வாசித்ததும் குப்புஸாமி அய்யர் மிகுந்த ஆச்சரியமடைந்தார். 'தேடாமல் கிடைத்த செல்வம். அவர் எப்போதும் மிக உண்மையான ஸ்நேகிதர். அவன் பேச்சை நம்பி அவர்மேல் சந்தேகப்பட்டேன்.'

'சரி நான் போய்வருகிறேன். நான் வந்தது ஒருவரும் அறியவேண்டாம்.'

அன்று பகல் முழுதும் சுந்தரமய்யர் மிக சுறுசுறுப்பாய் இருந்தார். அதே உடையில் போகவேண்டிய இடங்களுக்கெல்லாம் சென்றார். இரண்டொரு தட்டார்கள், நகை வியாபாரிகள், போக்கிரிகள், போலீஸ் கான்ஸ்டபில்கள் என அநேகரைப் போய்ப் பார்த்தார். சாயங்கிரம் ஒரு ஹோட்டலில் வந்தபோது அவர் முகம் தெரியவில்லை, களைப்படைந்திருந்தார். அன்றையதினத்து அலைச்சலால் ஒரு பிரயோஜனமும் அடைந்ததாகத் தோன்றவில்லை. சாப்பிட்டானதும் உட்கார்ந்துகொண்டிருந்தார். அப்பொழுது ஒரு கிழவர் வெகு வேகமாய் வந்து அவருடைய பக்கத்தில் உட்கார்ந்தார்.

சுந்தரம்:—என்ன விசேஷம். போன சங்கதியென்ன?

கிழவர்:—போன விஷயம் பிரயோஜனமில்லை. எத்தனையோவிடங்களில் விசாரித்தேன். நீங்கள் கேட்ட நகையகப்படவில்லை. அதற்குப்பதில் வேறொன்று இருக்கிறது. நல்லமாதிரி. அதுவும் முன் சொன்னமாதிரிதான். அதை யழிப்பதாக உத்தேசம் செய்திருக்கிறார்கள். இனிமேல் அப்படியே வைத்திருந்தால் மோசம்போய்விடும் என்று எண்ணுகிறார்கள்.

சுந்த:—நான் கேட்ட நகை யினிமேல் அகப்படாதோ?

கிழவ:—ஏது, எனக்குத்தோன்றவில்லை. எங்களையறியாமல் வெளியில் வருமா. அப்படி நகை காணாமல் போயி

ருந்தால் முன்னமேயே எங்களுக்குத் தெரிந்திருக்குமே. இந்த ஒரு மாதமாய் மேற்படி நகைகள் வரவு இல்லை. இப்பொழுது எல்லாரும் தூங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

சுந்த:—குப்புஸாமி அய்யர் பெண் நகைகள் அகப்படலாமே.

கிழவ:—அப்படியொன்றும் வரக்காணோமே. அவளைப்பற்றி எங்களுக்கு சங்கதியே தெரியாது.

சுந்த:—சரி நீங்கள் போய் வருக. நாளைக்குத் தகவல் சொல்லுகிறேன்.

கிழவர் புறப்பட்டுப்போனார். சுந்தரமய்யர் யோஜனை செய்துகொண்டே தூங்கிவிட்டார்.

## XI. கலியாணப் பேச்சு.

ஒரு வைதீகப் பிராமணர் போய்க்கொண்டிருந்தார். அவருக்கு வயது நாற்பதிருக்கலாம். ஆனால் உற்றுப்பார்க்காதவர்கள் ஐம்பதை எட்டுவார் என்று சொல்லுவார்கள். தலைமயிர் வெளுக்கவில்லை. கழுத்தில் ஒரு ருத்திராக்ஷமாலையும் இடுப்பில் ஒரு பொடிடப்பியும் இருந்தன. அவர் அதிக சுறுசுறுப்பாய்க் காணப்படவில்லை. எருமைபோல் மெதுவாய் ஊர்ந்துகொண்டு போனார். கையில் ஒரு தடி விளங்கிற்று. அதற்கு வெள்ளிப்பிடி கட்டப்பட்டிருந்தது. மற்றொரு கையில் ஒரு சிறிய துணி மூட்டையிருந்தது. அவரைப் பார்க்கையிலேயே பணக்காரரென்று விளங்கிற்று. அவருடைய பஞ்சகச்சமும் மேலே யோகவேஷ்டியும் நெற்றியில் உள்ள சந்தனமும் அவரைச் சோளதேசத்தாரென்று காட்டின.

தெருவில் விசாரித்துக்கொண்டே சென்றார். கடைசியில் அவர் விரும்பின வீடு வந்தது. தெரிந்துகொண்டு

உள்ளே சென்றார். ஒரு சிறு பையன் வெளியில் வந்தான். 'சங்கர அய்யர் வீடு இதுதானா?' பையன் 'ஆம்' என்றான். 'அவர் உள்ளேயிருக்கிறாரோ' என 'இருக்கிறார்' என்று சொல்லி அவன் போய்விட்டான். பிராமணர் மெதுவாய் உள்ளே நுழைந்தார். சங்கர அய்யர் உள்ளே உட்கார்ந்து கொண்டிருந்தார். நுழைந்துகொண்டே 'சங்கர அய்யர் உள்ளேயிருக்கிறாரோ' என்று அவரைக் கேட்டார். உட்கார்ந்திருந்தவர் உடனே எழுந்து 'ஏன். நான் தான் அவர். வருக' என்று உபசரித்தார். கூடத்தில் ஒரு விசுபலகையில் இருவரும் உட்கார்ந்துகொண்டார்கள்.

அய்யர்:—ஏது. இவ்வளவு சிரமப்பட்டு இவ்விடம் வந்தது.

பிராமணர்:—இல்லை. தங்களைப்பற்றிக் கேள்விப்பட்டேன். அதனால் தங்களைப் பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்தேன்.

அய்யர்:—ஏது விசேஷம்.

பிராமணர்:—தங்களுக்கு ஒரு பையனிருக்கிறான் என்று சொன்னார்கள். இன்னம் விவாகம் ஆகவில்லையென்று கேள்விப்பட்டேன். நானிருப்பது தஞ்சாவூர் பக்கம் வல்லம். தங்களுடைய சம்மந்தி குப்புஸாமி அய்யருடைய பந்துக்கள் எல்லோரையும் தெரியும். அவர்கள் தான் சொன்னார்கள், இவ்விடம் ஒருவரன் இருக்கிறான் என்பதாக; உங்கள் கோத்திரமென்ன !

அய்ய:—காசியப கோத்திரம். தங்கள் கோத்திரம்?

பிராம:—கௌசிக கோத்திரம். பெண்ணுக்கு நாலைந்திடத்தில் பார்த்தேன். சிலவிடங்களில் ஜாதகமிசையவில்லை. சிலவிடங்களில் பையன் சரிப்படவில்லை. சிலவிடங்களில் குலம் சரியாயில்லை. என்ன செய்வதென்று தெரியாமலிருந்தபோது ஒருவர் இந்தவிடத்தைச்

சொன்னார். இந்தவூருக்கு வேறு காரியமாய் வர வேண்டியதாயிருந்தது. அப்படியே பார்த்துவிட்டுப் போகலாம் என்றெண்ணி வந்தேன். சிறிது தீர்த்தம் வரவழையுங்கள்.

அய்யர் உடனே தீர்த்தம் வரவழைத்தார். இருவரும் சிறிது குடித்தானதும்,

**பிராம:**—குலம் கோத்திரத்தைப்பற்றி விசாரிக்கவேண்டாம். அவை எனக்கு முன்னமேயே தெரியும். தங்கள் சம்மந்தியை நானறிவேன். பையன் என்ன வாசிக்கிறான்?

**அய்ய:**—மெட்ரிகுலேஷன்.

**பிராம:**—சரிதான். மேலேயும் படிக்கவைக்கலாம். பையனுடைய ஜாதகமிருக்கிறதா. தரமுடியுமா.

என்று சொல்லிக்கொண்டே தமது மூட்டையையவிழ்த்து ஒரு சிறிய கடிதத்தையெடுத்து 'இதுதான் பெண் ஜாதகம். பார்க்கலாம்' என்றார். அய்யர் அதை வாங்கிப் பார்த்தார்.

**பிராம:**—பாருங்கள். ஜாதகமும் மனதிற்குப் பிடித்ததாயிருந்து பெண்ணும் பையனுக்குப் பிடித்திருந்தால் பார்ப்போம். என்னைப்பற்றி உங்களுக்குத் தெரிய வேண்டுமானால் தஞ்சாவூர் ஸால்ட் ஆபீஸ் கிளார்க்கு கோபால அய்யர், திருச்சினப்பள்ளி கலெக்டராபீஸ் கிளார்க்கு சீதாராம அய்யர் இவர்களைக் கேட்கலாம். இருவரும் குப்புஸாமி அய்யருடைய பந்துக்கள் தான். அவர் மூலமாய் விசாரிக்கலாம்.

அய்யர் உண்மையில் சிறிது ஜ்யோதிஷமறிந்தவர். அவர் எழுந்து உள்ளே சென்று தம் பையனுடைய ஜாதகத்தைக் கொண்டுவந்து இரண்டையும் ஒத்துப்பார்த்தார்.

உடனே ஒரு நகல் எழுதி பிராமணரிடம் கொடுத்து 'ஜாதகம் நன்றாயிருக்கிறது.' என்றார்.

பிராமணர் அதை வாங்கித் தாமும் பார்த்தார். 'சரிதான். நன்றாகத்தானிருக்கின்றன. பையனெங்கே பார்க்கவேண்டும்.'

'கோவிந்தா' என்று கூப்பிட வெளியிலிருந்து பையன் வந்தான். பிராமணர் முன் வந்து நின்றான். 'இவன்தானே, பையன் லக்ஷணமாயிருக்கிறான். முகத்தில் புத்திசாலித்தனம் விளங்குகிறது. உட்கார்.'

அய்ய:—சரி. நான் குப்புஸாமி அய்யரோடு கலந்து பேசுகிறேன். இரண்டு நாளில் தகவல் கொடுக்கிறேன். பெண்ணைப் பார்க்கவேண்டுமென்றால்?

பிராம:—வேண்டுமென்றால் வரவழைக்கிறேன். எதற்கும் சௌகரியமாக (சொல்லிக்கொண்டே மூட்டையிலிருந்து ஒரு அட்டையை எடுத்தார்) பெண்ணினுடைய புகைப்படம் கொண்டுவந்திருக்கிறேன். எடுத்து மூன்று மாதமாகின்றன—(படத்தைத் துடைத்துக்கொண்டே)—ஹார்மோனியம் வாசிக்கும் நிலைமையில் எடுத்தது.'—(அவர் கையில் கொடுத்தார்.)

பெண்ணின் உருவமும் மிக அழகாயிருந்தது. பார்ப்பதற்கு லக்ஷணமாயும் புத்திசாலியாயும் காணப்பட்டாள். அய்யருக்கு அதிக சந்தோஷமுண்டாயிற்று. உடனே அதை தம் பையன் கையில் கொடுத்தார். கோவிந்தன் வாங்கிப்பார்த்தான். இரண்டு நிமிஷம் அப்படியே பார்த்துக்கொண்டிருந்தான். பிராமணர், 'என்ன பெண் உனக்குப் பிடித்திருக்கிறாளா? என்று சிரித்துக்கொண்டே பையனைக் கேட்டார். பையன் நிமிர்ந்து அவரைப் பார்த்துப் புன்சிரிப்புக் கொண்டான்.

'பெண்ணுக்கென்ன அழகாய்த்தானிருக்கிருள்' என்ருன்.

'அவளுக்குத் தமிழ் நன்ருய் வரும். தெலுங்கும் சிறிது வாசிப்பாள். சங்கீதம் ரொம்பத் தெரியும். ஒரு பாடகரை தினம் வந்து கற்பிக்கும்படி திட்டம் செய்திருக்கிறேன். நன்ருய்ப் பாடுவாள். பிடிலும் அப்பியாசம் செய்கிருள்.

'பெண்ணின் வயதென்ன?' என அய்யர் கேட்டார்.

'பதின்மூன்று வயதாயிற்று சென்ற கார்த்திகைக்கு.'

'பையன் சம்மதம் கேட்டால் சரி.'

'உனக்குப் பெண் பிடித்திருக்கிறதா.' என பிராமணர் கோவிந்தனைக்கேட்டார். அவன் பதில் சொல்லவில்லை.

'அப்பொழுதேதான் சொல்லிவிட்டானே. அழகாய்த்தானிருக்கிருள் என்ருல் வேறு என்ன சொல்லுவான். பெரியவர்களிடத்தில் சொல்லக் கூச்சமாயிருக்காதா?'

'சரி, அப்படியானல் உங்கள் சம்மதம்தான்வேண்டியது. யோஜித்துச்சொல்லுங்கள். குப்புஸாமி அய்யரைக் கேளுங்கள். உங்களுக்குப்பிடித்திருந்தால் லௌகீக விஷயம் பேசலாம்.'

'ஏன் இப்பொழுதே பேசிவிடலாம்.'

லௌகீக விஷயமாய் அரைமணிநேரம் பேசினர்கள். முதலில் பிராமணர் ஐந்நூறு ரூபாய் பணமாகவும் முன்னூறு ரூபாய் சீர்வகையருவிலும் செலவு செய்வதாகச் சொன்னர். கடைசியில் அதிக சிரமத்தின்பேரில் 800 ரூபாய் ரொக்கமாகவும் 400 ரூபாய் சீர் நகை முதலியவைகளாகவும் கொடுக்கச்சம்மதப்பட்டார்.

'ஏன், நான்கு நாளுக்குமுன் சென்னையிலிருந்து ஒருவர் வந்தார். 600 ரூபாய் கொடுப்பதாகச்சொன்னார் நான் 800 வரை கேட்டேன். அவர் சம்மதிக்கவில்லை. அதற்குக் குறையக்கூடாது. இது விஷயத்தில் கண்டிப்பாய் இருக்கவேண்டியிருக்கிறது. பணம் முன்னால் கொடுக்கவேண்டும். ஏனென்றால் அநேகர் ஏமாந்துபோயிருக்கிறார்கள். ஆகையினால் ஜாக்கிரதையாகவிருக்கவேண்டியிருக்கிறது.'

'அதைப்பற்றிச் சந்தேகப்படவேண்டியதில்லை. நிச்சயதார்த்தத்தின்போது எண்ணிவிடுகிறேன். இப்பொழுதே வேண்டுமானால் வரவழைக்கிறேன். ஏமாற்றிவிட்டால் நாளைக்கு மனுஷியாள் வேண்டாமா? சம்மந்தம் செய்யும்போது மனவருத்தம் எதற்கு? அதைப்பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம். உங்கள் கவலையெல்லாம் குலம் கோத்திரம் குப்புஸாமி அய்யரைக்கொண்டு விசாரிப்பதும் வீட்டில் சம்மதத்தைக் கேட்பதும்தான்.

'பிள்ளையாண்டான்தான் சம்மதப்பட்டுவிட்டானே. அவனைப் பற்றிக்கவலை என்ன. நான் நிச்சயம் செய்துவிட்டால்அதனோடு இன்றைய அலுவல் முடிந்தது.'

அய்யர் முகத்தில் சந்தோஷம் கூத்தாடிற்று. அவர் அதையடக்கமுடியவில்லை. மனிதர்தானே. சதா சிரித்த முகமாய் விளங்கினார். பணம் அதிகம் வருவதாய்க்கண்டதும் அவருக்குண்டான உவப்பிற்கு அளவில்லை.

வீட்டில் இஷ்டத்தைக் கேட்கும்படி சொன்னதும் பையன் கோவிந்தன் எழுந்து உள்ளே சென்றான். அவன் சென்ற இரண்டு நிமிஷத்திற்கெல்லாம் அய்யரும் எழுந்து 'உள்ளேபோய்க் கேட்டுவருகிறேன்' என்று சொல்லிச் சென்றார். அவருடைய குரல் இரண்டொரு வீட்டுக்கப்புறம் அமர்ந்திருக்கும் செவிட்டுக்கிழவிக்கும் காது கேட்

கும். அதனால் கதாசிரியரான நாமும் உள்ளே செல்லாமல் வரன் பார்க்கவந்த பிராமணருடன் இருந்துவிட்டோம். நமக்கு எங்கும் செல்ல சுவதந்திரம் உண்டென்றாலும் இச்சமயம் அதை உபயோகித்துக்கொள்ள இஷ்டமில்லை. அவசியமுமில்லை. வந்த பிராமணர் தமது காரியத்தில் திருப்தியடைந்ததாகக் காணப்படவில்லை. அது அவர் உதட்டின் நிலைமையாலும் அவர் முகத்தின் மாறுபாட்டாலும் தெரியவரும். ஆயிரத்து இருநூறு ரூபாய் ஒரு பையனுக்குக் கொட்டுவதென்றால் அவர் மனம் எப்படியிருந்திருக்குமோ. நாம் இஷ்டப்பட்டிருந்தால் அவர் மனத்தையும் சோதித்திருக்கலாம். ஆனால் நமக்கு மிகச் சிரமமாயிருந்தபடியால் அப்படிச்செய்யவில்லை.

உள்ளே சென்ற அய்யர் அன்றயதினமென்று மெதுவாய்ப்பேசினார். என்றாலும் வெளியில் உட்கார்ந்திருந்தவர்க்கு நன்றாய் காது கேட்டது.

அய்யர் :—நீதான் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்தாயே. உன் அபிப்பிராயத்தைச்சொல். எனக்கு அந்த சம்மந்தம் பிடித்திருக்கிறது.

மனைவி :— எப்படியும் பெண்ணைப் பார்க்கவேண்டாமா? பிறகு அல்லவா சொல்லவேண்டும். பெண் சமீபத்தில் இங்கு வருவாளா?

அய்யர் :— ஏன், பெண்ணினுடைய படம் இருக்கிறது. அழகாயிருக்கிறாள். கோவிந்தனுக்கு ஏற்ற பெண் தான். இதோ பார். [கையில் படத்தைக்கொடுத்தார்.]

அவர் மனைவி ஒரு நிமிஷம் பார்த்தாள். 'படத்தில் நன்றாய்த்தானிருக்கிறாள். உங்களுக் கிஷ்டமானால் எனக்குமிஷ்டந்தான். குலம் கோத்திரம் விசாரித்தபிறகு சொல்லலாமே. எப்படியும் உங்கள் மாப்பிள்ளையைக் கேட்போம்.'

அய்யர் :— சரி, அவரைக்கேளாமலா உன்னிஷ்டம் என்னவென்று கேட்டேன்? கோவிந்தனுக்கு என்ன அபிப்பிராயம்? சொல்லேண்டா.

கோவிந்தன் சிறிது நேரம் மௌனமாயிருந்தான். தாயைப்பார்த்தான்.

"எனக்கு இஷ்டமில்லை. நேரில் பெண்ணைப்பார்த்துத்தான் சொல்லுவேன்."

"அதுதான் படத்தில் பார்த்தாயே. இதில் நன்றாயிருந்தால் நேரில் பார்த்தால் இன்னும் அழகாயிருக்கமாட்டாளா!"

"எப்படியிருந்தாலும் இவ்வருஷம் வேண்டாமென்று எண்ணுகிறேன்."

"ஏன் உனக்கு வயதாகவில்லையா? போனவருஷமே உன் தாயார் கட்டாயப்படுத்தினளே."

" இன்னமொருவருஷம் போகட்டுமே. இப்பொழுதே முதல் என்ன கால்கட்டு."

"சென்ற வருஷம் நான் வேண்டாமென்றேன். பெண்ணே காணமல் போய்விட்டாள். இந்த வருஷமும் வேண்டாமென்று சொல்."

"எனக்கென்ன நான் பெண்ணு? நீங்கள் வருத்தப்படவேண்டாம்."

அய்யர் சிறிது மெதுவாய்ப்பேசினர். ஆனலும் நமக்கு காதில் பட்டது.

"ஆயிரத்து இருநூறு ரூபாய் யாருக்குண்டு யாருக்கில்லை. எப்படியாவது இதைவிடாமல் பார்க்கவேண்டும்."

"எனக்கு சம்மதமில்லை. எனக்கு இஷ்டப்பட்டபோது நான் சொல்லுகிறேன். அப்பொழுது பார்த்துக் கொள்வோம்."

"ஏன் சம்மதமில்லையென்கிறாய்? என்ன ஆக்ஷேபணை? நீதான் சொல்லேன்.

" இன்னும் சிலநாள் பொருத்தால் அதிக பணம் கிடைக்கிறது.

"இந்த ஆயிரத்து இருநூற்றைவிடவா? என்ன உனக்குப் பயித்தியமா?"

"எல்லாம் கிடைக்கும். அத்தம்பியார் பெண்ணைக்கலியாணம் செய்திருந்தால் கிடைத்திருக்காதா? இன்னும் சில மாதம் பொருப்போமே.

" அத்தம்பியார் பெண்தான் கிடைக்காதபடி போயிற்றே. சுப்பிரமணியஅய்யருக்கு நிச்சயம் செய்தார்கள். அவனையும் காணவேயில்லை. சென்றவிடம் தெரியவேயில்லை."

"அது மாதிரி வேறு ஏதாவது கிடைக்கிறது. அவசரப்படுவானேன்."

"போடா உனக்குப் புத்தியென்பதே கிடையாது. வந்ததை விடலாமா! எல்லாவற்றிற்கும் இரண்டுநாள் கழித்துப்பதில் சொல்லுவதாகச் சொல்லுவோம்."

மனைவி :— ஏண்டா கோவிந்தா பிடிவாதமாயிருக்கிறாய்? எல்லாவற்றிற்கும் அப்படியே பதில் சொல்லுங்கள். அதற்குள் கோவிந்தன் படிமானத்திற்கு வந்துவிடுவான்." என்றாள்.

அய்யர் வெளியில் வந்து பிராமணரிடம் புகைப்படத்தைக்கொடுத்து தக்க பதிலுமளித்தார். பிராமணர் இரண்டுநாள் சென்றதும் வருவதாகச் சொல்லிச்சென்றார்.

(இன்னும் வரும்)

எம். எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யர்

# ஓர் இரவின் ஸம்பவங்கள்.

## அங்கம் IV.

### களம் I.

நாகலிங்கமும் ருக்மணியும் பிரவேசித்தல்.

**நாகலிங்கம்:**—நீ சொல்வது ரொம்பவும் எனக்கு ஆச்சரியத்தைத் தருகின்றதே. கோபாலனின் தந்தையரான சுப்பிரமணிய அய்யர் இன்றைய இரவு இங்கு வருவதாம்! இந்த சங்கதி உனக்கெப்படிக் கிடைத்தது?

**ருக்மணி:**—நான் சொல்வதை நீங்கள் நம்பாமலிருக்கவேண்டாம். அவர் இராமய்யருக்கு எழுதியிருந்த காகிதத்தை இப்போதுதான் பார்த்துவிட்டு வருகிறேன். இன்று இங்கு வருவது நிச்சயம். ஒரு சிறிதும் சந்தேகமில்லை. சொன்னேன். பிறகு, உங்களிஷ்டம். நான் என்ன செய்யக்கூடும்!

**நாகலி:**—அப்படியானால், என்னருமைக் காதலி, ருக்மணீ, அவன் இங்கு வருவதற்குள் நம்முடைய காரியமெல்லாம் நிறைவேறிவிடவேண்டும். அவன் என்னை நன்றாக அறிவான்; அவன் என்னை இங்கே பார்த்துவிட்

டாலோ என் பேரைத் தெரிந்துகொள்வதோடு, நான் எதற்காக இங்கு வந்திருக்கின்றேனென்பதையும் தெரிந்துகொள்ளுவான்.

ருக்:—நான் தங்களிடம் கொடுத்த நகைகள் எல்லாம் பத்திரமாய் இருக்கின்றன வன்றோ? நான் அதற்காகப் பட்டபாடு தங்களுக்கே தெரியும். நான் அதிகமாய்ச் சொல்லவேண்டுவதில்லை.

நாகலி:—ஆமாம். அவைகளைக் கோபாலனிடம் பத்திரமாய் வைத்துக்கொள்ளும்படி கொடுத்தனுப்பினேன். கலியாணத்திற்கு வேண்டியவைகளைச் சேகரிப்பதற்கு நான் செல்லுகிறேன். நமக்கோ சாவகாசமில்லை.

ருக்:—இதோ என்னை யாரோ உள்ளே அழைக்கின்றார்கள். நான் போகவேண்டும். சீதம்மாளிடம் சென்று ஏதோ அவள் மகனை விவாகம் செய்துகொள்ள இஷ்டம்போல் நடித்துக் காட்டுகிறேன்.

[போதல்]

கோபாலன் வருதல்.

கோபா:—என்ன நாகலிங்கம், ஏது அந்தக் கூடையைக் கொடுத்தனுப்பினது?

நாகலி:—நகைகளைப் பத்திரமாய் வைத்திருக்காயன்றோ!

கோபா:—ஆம், ஆம், ரொம்ப பத்திரமாய் இருக்கு. என்னிடத்தில் வைத்துக்கொள்வதற்கு என்ன இருக்கிறதென்று நீ அந்த நகைகளை கொடுத்தனுப்பினாய்?

நாகலி:—நீ அவைகளை எங்கே வைத்திருக்கின்றாய்?

கோபா:—இவ்வீட்டு எஜமானி யாரோ சீத்தாவாமே! அவளிடம் பத்திரமாக வைத்துக்கொள்ளும்படி சொல்லி அனுப்பினேன்.

நாகலி:—எஜமானியிடமா?

**கோபா:**—ஆம், அவளிடம் தான். நான் செய்தது நல்ல யோசனையேயன்றோ? வேறு நான் எங்கு வைத்திருக்கக்கூடும்?

**நாகலி:**—[தனக்குள்] அடடா கெடுத்தானே காரியத்தை.

**கோபா:**—உன் முகம் மாறுபட்டிருப்பதென்னே; விசனக்குறி இருக்கின்றதே.

**நாகலி:**—ஒன்றுமில்லை.

**கோபா:**—நகைகளைப் பற்றிய கவலை இனி உனக்கு வேண்டியதில்லை.

**நாகலி:**—ஆமாம் உண்மையே (தனக்குள்) சரி, இனி நகைகளைப்பற்றி நாம் ஒன்றும் நினைக்கக்கூடாது. சும்மா ருக்மணியோடு போகவேண்டுவதுதான்.

**கோபா:**—ஏ நாகலிங்கம், அது போகட்டும். இந்த ஹோட்டலின் வேலைக்காரி ஒருத்தி வெகு அழகாயிருக்கின்றாளன்றோ. அதோ அங்கு போகிறாள். வா போவோம்.

**நாகலி:**—[தனக்குள்] அடடா, இவன் இவ்வீட்டை ஹோட்டலென்று இன்னமும் நினைத்திருப்பதோடு ஜானகியை இவ்விடத்திலுள்ள வேலைக்காரியென்றல்லவோ நினைத்திருக்கின்றான். பேஷ், நல்லவேடிக்கை. எதற்கும் நாம் ஒன்றும் சொல்லப்படாது. கடைசிவரையில் வேடிக்கை பார்ப்போம்.

[நாகலிங்கம் போதல்.]

இராமய்யர் வருதல்.

**இராம:**—இது என்னுடைய வீடுதானோவென்று எனக்குத் தெரியவில்லையே. எல்லாம் குழப்பமாயல்லவா இருக்கின்றது. இவனுடைய வேலைக்காரர்கள் நன்றாகக் குடித்துவிட்டு மயக்கங்கொண்டிருக்கிறார்கள். இனி

மேல் இந்த ஸ்திதியில் என்னாலிருக்கமுடியாது. ஆனாலும் இவன் தகப்பனின் முகத்துக்காக சும்மாயிருக்கவேண்டியிருக்கிறது. [கோபாலனிடம்] ஏ! கோபாலா! இதோ உன்னடிமையாகிய நான் இங்கு வந்திருக்கின்றேன். என்ன யஜமானே! உங்களுக்கு எது வேண்டுமோ அதைத் தங்களுக்காகக் காத்துக்கொண்டிருக்கும் அடியேனிடம் சொல்லியருளட்படாதா? [கோபத்தோடு தலைகுனிந்து நிற்றல்.]

கோபா:— [தனக்குள்] அடடா, ஏது இவன் ரொம்ப மரியாதையாயிருக்கிறானே! ஏது சேரிடுமோ தெரியவில்லையே. எதற்கும் சற்று நிதானித்துப்பார்ப்போம்.

இராம:— நீங்கள் எங்கே வந்தாலும் ரொம்ப மரியாதையாய்ப் பிறருன்மை உபசரிக்கவேண்டுமென்று நீர் நினைத்திருக்கின்றீரல்லவா?

கோபா:— ஆம் ஐயா, நானாக எங்கும்போய் கெஞ்சிக்கேட்டுக்கொள்வதில்லை. என்னைக்கண்டாலே பிறர் தாமே என்னை வலிய உபசரிக்கும் விதமாக நான் நடந்துகொள்ளுவேன். எங்கு போகினும் சரியே.

இராம:— ஓ ஓ! அப்படியா! ரொம்ப சரி, பேஷ்! உம்முடைய நடத்தையைப்பற்றி நான் ஒன்றும் சொல்லாமற்போகினும், உம்முடைய வேலைக்காரர்கள் குடித்து வெறிகொண்டிருப்பதைப் பார்க்க இனி ஒரு கணமும் தரியேன். அவர்கள் இங்ஙனம் செய்தால் இவ்வீட்டிலுள்ளவர்களுமல்லவா கெட்டுப்போவார்கள்!

கோபா:— என்ன ஐயா, நான்தான் சொல்கின்றேனே: அவர்கள் அங்ஙனம் குடித்தால் அது என்னுடைய குற்றமல்லவே! அவர்கள் எவ்வளவு குடிக்கவேண்டுமோ

அவ்வளவு குடிக்காவிட்டால் அவர்கள் மீதன்றோ நீர் குற்றம் பாராட்டவேண்டும். அவர்களுக்குப் பீப்பாயைக் காலிசெய்யச்சொன்னது நான் தான் ஒப்புக்கொள்ளுகின்றேனே! (பின் பக்கத்தில் திரும்பி) ஏ! யாராவது ஒருவன் இங்குவா [இராமய்யலைப்பார்த்து] நான் சிறிதும் குடிக்கவில்லையாதலால், என்னுடைய பாகத்தையும் சேர்த்துக் குடித்துவிடும்படி என் சேவகர்களுக்கு நானே உத்திரவு அளித்தேன். அதனால் நீர் என்னை என்ன செய்யவேண்டுமென்கிறீர்?

இராம:—சரி, நீர் சொல்லித்தானா அவர்கள் இங்ஙனம் செய்வது! பேஷ், வெகு நன்றாயிருக்கிறது. ரொம்பவும் சந்தோஷம், ஐயா!

கோபா:— ஆம், நான் தான் சொன்னேன். வேண்டுமானால் இதோ வருகின்ற என் சேவகனிடம் நீரே கேட்டுத்தெளிந்துகொள்ளும்.

[ஒரு சேவகன் குடிவெறிகொண்டு வருதல்.]

கோபா:— ஏ முத்தா! இங்கே என் பக்கத்தில் வா. நான் உங்களுக்கிட்ட கட்டளையென்ன? உங்கள் மனதாரக் குடித்து களிப்படையுமாறு நான் சொன்னது உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா? இல்லை, அதற்குள் எல்லாம் மறந்துவிட்டீர்களா? சொல்லடா!

இராம:— [தனக்குள்] இனிமேலும் நான் பொறுமையோடிருப்பது முடியாதகாரியம். ஒருவன் எவ்வளவுநேரம் தான் பொறுத்துக்கொண்டிருக்கமுடியும்? சீச்சீ! வெட்கக்கேடு.

முத்து:—அடியேன், சுவாமிகளுக்கு ரொம்ப வந்தனம்! நான் ஒரு வேலைக்காரனானாலும் உம்மைப்போல மனிதன் தான். எனக்கு எவ்வளவு குடித்தாலும் மயக்கம்

வராது. என் புத்தி சுவாதீனமாகவேயிருக்கும். சிலர் தம் உதட்டை இரண்டு மூன்று துளிகளால் நனைத்துக்கொண்டு ஏதோ இரண்டு காலன் காலிசெய்தவர்கள் போல நினைத்து இல்லாத சேஷ்டையெல்லாம் செய்வார்கள்—அடியேன்—உம், உம்-சாமி, அப்படி ஒருக்காலத்திலும்—எங்கேயும் இருந்ததில்லை.

கோபா:—என்ன! ஓய் அய்யரவாள், அவன் சொல்வதைக் கேட்டீரா? அவன் இப்போது வயிறு நிறைய குடித்திருந்தாலும், இன்னம் இரண்டு பீப்பாய் சாப்பிடுவான் போலிருக்கிறது. ஆம், ஐயா.

இராம:—சீ, இனி நான் ஒன்றும் சொல்லாமலிருந்தால் இவன் தலைக்குமேல் ஏறிவிடுவான் போலிருக்கிறது. எனக்குக் கோபமும் அளவு மீறி வரவர அதிகரித்துக்கொண்டே வருகிறது.—ஓய், கோபாலய்யரவாள்! என்னமோ இந்த நாலுமணி காலமாக நீர் செய்யும் வம்புக்கெல்லாம் பதில் ஒன்றும் சொல்லாது பொறுத்துக்கொண்டிருந்தேன். நீர் சிறிதும் வழிக்கு வருவதாகக் காணோம். ஆகையால் நான் இனிமேல் என் எஜமானத்தனத்தை இங்கே காட்டவேண்டும் போலிருக்கிறது. சரி, நீரும் உம்முடைய சேவகர்களும் இக்கணத்திலேயே இவ்விடத்தைவிட்டு வெளியே சென்றுவிடுங்கள். நீங்கள் இங்கு இருப்பதற்கு யோக்கியதையுடையவர்களல்ல. இவ்வீட்டை விட்டு வெளியே போய் உங்கள் மனதின்படி குடித்து வெறிகொண்டு பிரளலாம். சீக்கிரம் இதைவிட்டு ஓடிப்போய்விடுங்கள், போதும் உங்கள் சகவாஸம்.

கோபா:—உம்முடைய வீட்டை விட்டு வெளியே போவதா!—ஏதோ நீர் வேடிக்கை செய்கிறீரென்று

நினைக்கின்றேன்! இதென்ன? உம்முடைய இஷ்டத்தின்படி நான் செய்கின்றபொழுது நீர்—

இராம:—ஐயா, நான் சொல்கிறேன், நீர் செய்வது கொஞ்சமும் எனக்குப் பிடிக்கவில்லை. ஆகையால் நீரிங்கிருப்பதில் எனக்குப் பிரியமில்லை, உடனே வெளியே போய்விடுங்கள்.

கோபா:—என்ன, நீர் உண்மையில் அப்படிச்சொல்கிறீரா? ஏது அப்படியிருக்குமென்று நான் நினைக்கவில்லை.—இந்தவேளை, நடுநிசிப்பொழுதிலா வெளியே போவது? போதும் ஐயா, என்னமோ ரொம்பவும் வேடிக்கை பண்ணுகின்றீர்.

இராம:—நான் சொல்வது உண்மைதான். நீங்களெல்லாரும் இங்கே இருக்கப்படாதென்றால் ஏதோ கேலி, உண்மையென்று விளையாடுகிறீரே. இனி என்னால் தாங்கமுடியாது. இந்த வீடு என்னுடையது; என்ன தெரிகின்றதா? இனி நீங்கள் ஒரு கணமும் இங்கு தங்கப்படாது: உடனே புறப்பட்டுப்போய்விடுங்கள்.

கோபா:—ஹா, ஹா, ஹா! நீங்கள் சொல்வது மிகவும் நன்றாயிருக்கின்றது, பேஷ், இவ்விடத்தைவிட்டு ஒரு அடி அப்புறம் எடுத்துவைக்கமாட்டேன். தெரியுமா? நீர் என்ன செய்வீர்? (கோபக்குரலோடு) இந்த வீடு, ஓய் என்னுடைய வீடாகும். இந்த வீடு என்னுடையது, நான் இங்கே இருக்கும் வரையில் என்னுடையதே. இதைவிட்டு வெளியே போகச்சொல்வதற்கு உனக்கென்ன ஐயா அதிகாரமிருக்கிறது. ஜாக்கிரதை. இவ்வளவு நாணக்கேடான விஷயம் நான் எங்குமே கண்டதில்லை. என்னமோ இவ்வளவு காலத்திற்கு இன்று தான் புதிதாகக் கேட்கலானேன்.

இராம:—நானும் இதைப்போல இன்று தான் பார்க்கின்றேன்! என்னுடைய வீட்டுக்கு வந்து, உம்முடைய இஷ்டப்படி பேரிரைச்சலிட்டதன்றி நான் உட்கார்ந்திருந்த இடத்தைவிட்டு என்னை அப்புறப்படுத்தியும், என் குடும்பத்தைப் பற்றிப் பலவாறு இகழ்ச்சியாகப் பேசியும், உம்முடைய வேலைக்காரர்களை அளவின்றி குடித்து மதவெறிகொள்ளச் செய்ததும் போதாமல், என்னை நோக்கி, 'இந்த வீடு என்னுடையது, ஐயா" என்று பயமின்றிச்சொல்வதும் இன்றுதான் கேட்டேன். இவையனைத்தும் நினைக்க எனக்கு ஒரு பக்கத்தில் அடக்கமுடியாத சிறிப்புண்டாகின்றது. ஹா! ஹா! ஹா! பேஷ்!

கோபா:—ரொம்ப பேசாதேயும். என்ன கணக்காகின்றது என்று பார்த்துச்சொல்லும். போதும் உம்முடைய சகவாஸம்.

இராம:—[தனக்குள்] இவன் சொல்லுகின்றது எனக்கு இன்னதெனத் தெரியவில்லையே! கணக்குப்பார்த்துச் சொல்லுவதாம். ஒருவேளை இவன் இந்தவீட்டை விலைக்கு வாங்க நினைத்திருப்பானே! ஒன்றும் தெரியவில்லையே.

கோபா:—ஓய் நான் சொல்வது உமக்குக் கேட்கவில்லையா? ஒரு பைசா பாக்கிவேண்டுவதில்லை. எல்லாவற்றிற்கும் எவ்வளவாகின்றது என்று ஒரே முடிவாய்ச் சொல்லிவிடும். போதும் போதும் நான் இங்குவந்தது. எல்லாம் பின்னால் போசிக்கொள்கின்றேன்.

இராம:—என்ன, எல்லா சாமான்களும் சேர்த்தா மொத்த கிரயம் சொல்லவேண்டும்?

கோபா:—நான் சொல்வது உமக்குக் கேட்கவில்லையா? காது செவிடா?

இராம:—எல்லாம் ரொம்ப விலையாகுமே. ஏதோ இலே சாக நினைத்துவிட்டீரா?

கோபா:—சீ. கணக்கைக் கொண்டுவாருமென்றால் ஏதோ இராமாயணம் சொல்கின்றீரே! போய்க் கொண்டு வாரும். பின்னால் உம்முடைய கதையைக் கேட்கிறேன்.

இராம:—ஏ, ஐயா, உன்னுடைய தந்தையின் கடிதத்தில் ஏதோ நீ மகா அடக்கமுடையவனென்றும், இங்கு கொஞ்சநாள் தங்கி இவ்வூரைப் பார்க்க வந்திருப்பதாகவும் ஏதோ பலவாறு எனக்கு எழுதியிருந்தாரே! அங்ஙனமின்றி, அவர் எழுதியிருந்ததற்கு முற்றும் மாறாக அல்லவா இங்கு காண்கிறேன். எதற்கும் அவர் இன்னும் கொஞ்சநேரத்திற்குள் இங்கு வந்து விடுவார். அவர் வந்தபின் எல்லாம் பார்த்துக்கொள்வோம் [போதல்]

கோபா:—இதென்ன, ஒன்றும் தெரியவில்லை. ஒருவேளை இது ஹோட்டலாயிருக்காதோ? சிச்சி! இது ஹோட்டலே, சந்தேகமில்லை. வேலைக்காரர்கள் அங்குமிங்கும் போவதும், இவ்வீட்டார் உபசரிக்கிற விதமும், முதலியவையெல்லாம் இதை ஹோட்டலென்று ரூபிக்கின்றனவே. ஆ, இதோ என் காதலியாகிய இந்த ஹோட்டலின் வேலைக்காரி போகிறாள். அவளிடம் கேட்டால், எல்லாம் தெளிவாகத் தெரியவரும்.—ஏ குழந்தாய், எங்கே இவ்வளவு விரைவாகப் போகின்றாய்? உன்னோடு ஒரு வார்த்தை பேசவேண்டியிருக்கிறது. சிறிது இங்கே நின்று கேட்கப்படாதா?

ஜானகி பிரவேசித்தல்

ஜான:—சீக்கிரம் சொல்லுங்கள். நான் அவசரமாகப் போக வேண்டியிருக்கின்றது. (தனக்குள்) இப்பொழுதுதான்

இவன் தன்னுடைய தப்பிதத்தைத் தெரிந்துகொண்டான் போலிருக்கிறது. இதற்குள் நாம் நம்மைப் பற்றி வெளிப்படுத்திவிடக்கூடாது.

**கோபா:**—ஏ குழந்தாய், இந்த ஒரு கேள்விக்குப் பதில் சொல்லுமாறு உன்னைக் கேட்டுக்கொள்கிறேன். நீ யார்? இந்த வீட்டில் உனக்கென்ன வேலை?

**ஜான:**—இவ்வீட்டாருக்கு நான் சொந்தம் ஐயா.

**கோபா:**—என்ன, ரொம்ப தூரத்து உறவோ?

**ஜான:**— ஆம் ஐயா! எனக்கிங்கு என்ன வேலையென்றால், இவ்வீட்டுச் சாவிகளையெல்லாம் என்னிடம் கொடுத்திருக்கிறார்கள். நான் யாருக்கு என்னென்ன வேண்டுமோ அவைகளை வீட்டிலிருந்து எடுத்துக்கொடுக்க வேண்டுவதுதான்.

**கோபா:**— ஓ ஓ சரிதான். அதாவது நீ இந்த ஹோட்டலுக்கு வேண்டிய சாமான்களையெல்லாம் பத்திரமாய் வைத்திருப்பவளோ?

**ஜான:**— ஹோட்டலா! பேஷ்!—நீங்கள் என்ன இதை அப்படி நினைத்துவிட்டீர்கள்! இக்கிராமத்து பெரிய பணக்காரர்களில் ஒருவராகிய இவர் ஹோட்டல் வைத்திருப்பதா! பலே, ஹா! ஹா! ஹா! வெகு நன்றாயிருக்கிறது. இராமய்யர் வீட்டை ஹோட்டலென்று நினைத்துவிட்டீர்கள்!——நல்ல ஹோட்டல்!

**கோபா:**— இது இராமய்யர் வீடா? உண்மைதானா குழந்தாய்?

**ஜான:**— உண்மையே. பின் இதை யார் வீடென்று நினைத்தீர்கள்?

**கோபா:**— அடடா, இப்போதல்லவா எல்லாம் எனக்குத் தெரிகின்றது, சிச்சீ என் புத்தியீனத்தனம் என்ன!

ஊர் முழுதும் தெரிந்தால் என்னைக்கேலி செய்வார்களே. இந்த வீட்டை ஹோட்டலென்றும், எனது தந்தையாரின் பழய நண்பரை இந்த ஹோட்டலதிகாரியென்றுமல்லவோ நினைத்திருந்தேன்! என்னை அவர் என்ன விதமாக நினைத்திருப்பார்! நான் செய்தது எனக்கே வெட்கமாயிருக்கின்றதே! நான் என்ன செய்வேன்! யாரை நோவேன்! அன்றியும், உன்னை நான் இந்தப் பெரியவீட்டின் வேலைக்காரியென நினைக்காமல், ஹோட்டலின் வேலைக்காரியென்றல்லவோ நினைக்கலானேன்!

ஜான:—என்னைப் பார்த்தால் ஹோட்டல் வேலைக்காரி போலத் தோன்றுகிறதா?

கோபா:—இல்லை, இல்லை. என் கண்மணீ, அப்படி ஒன்றுமில்லை. இங்கிருக்கும் ஒவ்வொருவரையும் நான் வேறுவிதமாக நினைத்துவிட்டேன். மன்னிப்பாய் கண்மணீ. இனி நான் இவ்வீட்டில் என் முகத்தைக் காட்டுதல் பழிப்புக்கிடமாகும். ஆதலால் நான் எங்கேனும் வெளியே போய்விடுகிறேன். எனக்கே சிரிப்புண்டாகின்றது நான் செய்த காரியம்.

ஜான:—உங்கள் மனது நோகும்படியாக நான் ஒன்றும் செய்யவில்லை என்பது தங்களுக்கே தெரியும். நீங்கள் இவ்விடத்தைவிட்டுப் போவதென்றால் என் மனது புண்ணுகின்றது. [அழுவதாகப் பாவனை செய்தல்] என் மனதார நான் ஒன்றும் செய்யவில்லையே. என்னைப் பற்றிப் பிறர் இகழ்ச்சியாகச் சொல்லப்படாது. ஏனெனில் என்னிடம் பணம் ஒன்றுமே கிடையாது. என்னைப் பிறர் மணந்துகொள்ளவேண்டுமானால் என் குணத்தையே விரும்பி செய்துகொள்ளவேண்டும்.

அங்ஙனமிருத்தலின் என்னைப்பற்றி ஒருவாறுகப் பிறர் கேள்விப்படின், என் கதி அதோகதிதான்.

கோபா :— [தனக்குள்] ஆ! தெய்வமே! அவள் அழுகின்றுளே. ஆகா என்மீது அவளுக்கிருக்கும் பிரியம் இவ்வளவவ்வளவல்ல போலிருக்கிறதே. நான் வெளியே போய்விடுகின்றேனென்று சொன்னதும் பிரிய நேரிடுகிறதே என்று வருத்தமுற்று கண்களில் நீர் சொரிய நிற்கின்றுளே. நான் இதை ஆற்றேன். [அவளிடம்] என்னருமைக்காதலியே, என்னை மன்னிப்பாய். இவ்வீட்டிலுள்ளவர்கள் எல்லாரிலும் உன்னைவிட்டுப்பிரியவேண்டியிருக்கிறதே என்றுதான் எனக்கு மிகவும் வருத்தமுண்டாகின்றது. உன்னிடம் நான் ஏன் மறைத்துப்பேசவேண்டும்? நம்மிருவருடைய குலம், கல்வி, செல்வம் முதலானவைகளைப் பார்க்குமிடத்து நாமிருவரும் விவாகஞ் செய்துகொள்ளலாமென்பது முடியாத காரியம். ஆகவே, என்னைக்கதியாக அடைந்த உன்னைப்போன்ற பேதையை நான் அநீதியாகக் கெடுத்தல் எனக்குத்தருமமல்ல. இனி நான் உனக்கு ஒன்றும் செய்யமாட்டேன். நான் முன்னே உன்னுடைய கையைப்பிடித்ததற்காக மிகவும் வருந்துகின்றேன். மன்னிப்பாய்.

ஜான :— (தனக்குள்) ஆகா! என்ன தயாளகுணம்! அவரை இப்போதுதான் நன்றாகத் தெரிந்துகொண்டேன். [அவனிடம்] ஜானகியினுடைய குலத்தைக்காட்டிலும் என்னுடைய குலம் எவ்விதத்திலும் தாழ்மைப்பட்டதன்று; நான் செல்வமில்லாதிருக்கும் விஷயத்தைப் பற்றி ஒன்றும் யோசிக்கவேண்டுவதில்லை. பணமில்லாதிருத்தல் கெட்டதென்று இப்போதுதான் தெரிந்துகொண்டேன். நான் பணத்தை இதுவரை ஒரு பொருளாக மதித்தவளல்ல,

கோபா:— அப்படியிருக்க இப்பொழுது மாத்திரம் பண மில்லையே என்று வருந்துவதென்னை?

ஜான:— என்னுயிரையொத்த நண்பரை நான் பெறாத வண்ணம் அது தடுக்கின்றபடியால்தான்.

கோபா:— (தனக்குள்) இவளுடைய பேதமைத் தன்மை என்னை மயக்குகின்றது. நான் இனி இவ்விடத்திலி ருந்தால் பெரிய துன்பம் நேரிடும். என் மனதைத் தளரவிடாது திடப்படுத்திக்கொண்டு இப்பெண்மணி யை இவ்விடத்திலேயே விட்டுவிட்டுச் சென்றுவிட வேண்டும். [அவளிடம்] நீ என்மீது கொண்டிருக்கும் பிரியத்தை நினைக்க என் மனது உருகுகின்றது. நான் மாத்திரம் என்னிஷ்டப்படி செய்வதாயிருப் பின், நான் உன்னையன்றி வேறு எந்தப்பெண்ணையும் விவாகம் செய்துகொள்ளவேமாட்டேன். ஆனால், நானாக ஒன்றும் செய்யமுடியாதே. என் தந்தை யார் எங்ஙனம் சொல்லுகின்றாரோ, அங்ஙனமே நான் கேட்கவேண்டியவன். எந்தையின் வாக்குக்கு எதிராக ஒன்றும் சொல்லும் வழக்கம் எனக்கு இல்லை.—ஆதலால் நான் என்ன செய்வேன்—உன் னைப்பார்க்க எனக்கு மிகுந்த வருத்தந்தருகிறது. நாமென்ன செய்யலாம். எதற்கும் போய்வருகி றேன். இறைவனுன்னைக் காப்பாராக. (போதல்.)

ஜான:— ஆகா! இப்போதே அவரின் உண்மைக்குணத்தை அறிந்தேன். நான் எப்படியாவது அவரை இவவி டம்விட்டுப்போகாமலிருக்கும்படி செய்யவேணும். இன்னமும் நான் அவரிடம் உண்மை சொல்லிவிடப் படாது. என்னை அவர் வேலைக்காரியென்றே நினைத் திருக்கட்டும். அது ஒருவிதமாக நன்மை பயப்பதே தான். [போதல்.]

(இன்னும் வரும்)

ஏ. ராஜா.

# சுருதிநிர்ணயம்.

இவ்விதமாய்க் கிடைத்த இருபது சுருதிகளையும் ஷட்ஜபஞ்சமபாவத்திற்குக் கொண்டுவரும்போது மதங்கீ என்பதற்கிணங்க தயாவதீ என்பதும் ப்ரீதி என்பதற்கிணங்க மந்தா என்பதும் கிடைக்கவே இருபத்திரண்டு சுருதிஸ்தானங்களும் கிடைப்பதற்குள்ள ஒழுங்கு இதுவேயாமென்பதும் வெளிப்படுகின்றது.

இந்தப்பிரகாரம் நமது ஸங்கீதத்திற்கு ஸாமவேதத்தினின்று பிறந்திருக்குந்தன்மை ஒரு பக்கம் ஒளிபெற்றுப் பிரகாசிக்க அந்தப் பிரகாசத்தில் நின்று நிர்வாஹஞ் செய்ய முடியாமலோ வேறு எக்காரணத்தாலோ தற்காலத்தில் தென்னிந்தியாவிலுள்ள ஸங்கீத வித்வான்கள் அதற்கு அஞ்சி அந்தகாரத்திற்குள் ஓடி ஒளிகின்றார்கள். அவர்களுள் யாரேனும் ஒருவன் தைரியத்துடன் பிரகாசத்திற்கு வருவதாயிருந்தாலும் அவன் அவர்களது திருஷ்டிக்குப் பைத்தியக்காரனாய்விடுகிறான். இவ்விதமாய்ப் பல பைத்தியக்காரர்கள் இந்நாட்டில் தலையெடுத்தாலன்றி நம்மைச் சூழ்ந்திருக்கிற இவ்விருள் நீங்குவதற்குத் தக்க வேறு உபாயமில்லை.

ஸங்கீதவித்யை என்பது மற்ற வித்யைகளைப்போல வரவர அபிவிர்த்திக்கு வந்துகொண்டே இருக்கின்றது.

ஆகவே செவிக்கு இனிமையான ஸ்வரவிந்யாஸங்கள் அப்போதைக்கப்போது புதிதுபுதிதாக உற்பத்தியாய்க்கொண்டுதானிருக்கும். தாமாய்க் கற்பித்துக்கொண்ட சாஸ்திரத்தால் அவற்றைக்கட்டுப்படுத்த யாருக்கும் ஸாத்தியமில்லை. அப்படிச்செய்ய யத்னப்படுகிறவர்கள் குல்லாவிற்கேற்றபடி தலையிருக்க வேண்டுமென்பவர்களாகிறார்கள். சுவரசிருஷ்டியில் அமைந்துகிடக்கின்ற ஸ்வரஸம்வாதத்தின் உண்மைமட்டிலும் எங்கு பார்த்தாலும் மாறாமல் ஓரே விதமாயிருக்கின்றது. அதை ஐரோப்பியர் மிக சிரத்தையுடன் ஆராய்ந்து வைத்திருக்கின்றனர். அவர்கள் குறித்திருக்கிற ஸ்வரஸம்வாத இடைவெளிகளைப்பற்றி வேறோரிடத்தில் நான் விவரித்திருக்கிறேன். இங்கு நாம் கண்ட சுருதிஸ்தானங்களைக் கைகொண்டிருக்கிற மார்க்கம் ஒரு ராஜவீதியைப்போன்றதாகும். அவ்வீதியில் ஆங்காங்கு பல சந்துகள் இருப்பதுபோல முக்கியமான ஓரோர் ஸ்தானத்திலிருந்து அந்த மார்க்கத்திற்குள்ளடங்காத மற்ற ஸ்தானங்களுக்கு ஏதேனும் ஒரு ஸம்வாதத்தை முன்னிட்டு ஸ்வரங்கள் பிரிந்து செல்வதும் உண்டு. ராகங்களை நாம் பாடும்போது சிற்சிலவிடங்களில் வேறு ஸ்தானங்கள் வருவதற்கு இதுதான் காரணம். ஸ்வரஸம்வாதத்தைப்பற்றிப் பேசும்போது ஷட்ஜமத்தியமபஞ்சமங்களைப்போல ப்ரஸாரிணி என்னும் சுருதியிலுள்ள அந்தர காந்தாரமும் முக்கியமானதாகும்.

வெகுநாளாய் இருபத்திரண்டு சுருதிகளைப்பற்றி விசாரணை செய்துவந்தவர்களான ஸ்ரீமான் கிருஷ்ணஜீ பல்லால் தேவல் அவர்கள் அநேகமாய் நமக்குக்கிடைக்கின்ற சுருதிஸ்தானங்களையே அங்கீகரிக்கிறார்கள். ஆனால் திரிசுருதிபஞ்சமஸ்தானத்தை அவர்கள் கவனியாமல் விட்டும் சதுர்சுருதி மத்தியமத்தின் கீழ் அநாவச்யிகமாய் ஒரு

ஸ்தானத்தைச் சேர்த்துமிருப்பதுதான் சாஸ்திரவசனங்களுக்கு விரோதப்படுகிறது. இதுவன்றிப்பல வித்வான்களைப்பாடச்சொல்லிக்கேட்டதில் இருபத்திரண்டு ஸ்தானங்களுள் அடங்காத சில இடங்கள் அபூர்வமாய் உபயோகிக்கப்படுவதாக அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அவற்றுள் ஸூசிருதா என்னும் 13-வது ஸ்தானத்தில் வருவதொன்று. இது மேற்குறித்த நியாயப்படி ப்ரஸாரிணி என்னும் ஒரு முக்கியமான ஸ்வரஸ்தானத்திற்கு அவரோஹணக்கிரமத்தில் துவிசுருதியென்னும் இடைவெளியுள்ளதாயிருக்கிறது. இதற்கு பஞ்சமசுருதியாக தௌநவீ என்னும் 44-வது ஸ்தானத்திலிருப்பது மற்றொன்றும். இதுவன்றி முக்கியமான சுத்தமத்தியமஸ்தானத்திற்கு ஐரோப்பியரது அளவுப்படி அவரோஹணத்தில் ஏகசுருதியாகத் தேடிகா என்னும் 20-வது ஸ்தானத்தில் வருவதும் அதற்கு பஞ்சம சுருதியிடைவெளியுடன் மாயிகா என்ற 51-வது ஸ்தானத்தில் வருவதும் அவர்களால் குறிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றையன்றிப் பஞ்சம ஸ்வரத்திற்கு மேற்படி ஏக சுருதிமுறையில் ஸம்பர்தப்பட்ட மைகா என்னும் 29-வது ஸ்தானமும் காணப்படுகின்றது. இவைகளையெல்லாம் சந்துபொந்துகளில் வைக்கவேண்டுமேயன்றி ராஜமார்க்கத்திற்குக் கொண்டுவர நியாயமில்லை. இந்த அபிப்பிராயத்தைக்கொண்டே அவர்கள் இவற்றை இருபத்திரண்டு சுருதிகளுடன் சேர்க்காமல் விட்டுவிட்டார்களென்று நினைக்கிறேன்.

ஸ்ரீமான் ராவ் பஹதூர் C. நாகோஜிராயரவர்கள் வெகு நாளாய் ஐரோப்பியரது ஆராய்ச்சியின் வழியே சென்று இருபத்திரண்டு சுருதிகளைப்பற்றி முடிவு செய்திருக்கிறார்கள். நமது வீணைப்படி அவர்களது ஆராய்ச்சியில் வருவன 1, 4, 6, 9, 10, 14, 15, 18, 20, 23, 24, 27,

29, 32, 35, 37, 40, 41, 45, 46, 49, 51, 54 ஆகிய இந்த ஸ்தானங்களாகும். இவர்களது அபிப்பிராயத்தில் சுத்த ஷட்ஜத்திற்கு மேலுள்ள மூன்று ரிஷபஸ்தானங்களுக்கும் சுத்தமத்தியமத்திற்கு மேலுள்ள மூன்று ப்ரதிமத்தியமஸ்தானங்களுக்கும் ஷட்ஜமத்தியமபாவமுறையில் ஸம்வாதமிருக்கவேண்டியது அநாவச்யிகமென்பதாகிறது. ஆனால் அது அவசியந்தானென்று யான் அபிப்பிராயப்படுவதற்குத்தக்க காரணங்களிருக்கின்றன. மத்தியமக் கிராமத்திய பஞ்சமம் திரிசுருதியாயிருக்கு மென்பதை யோசித்தால் மூன்றுவது ரிஷபமும் மூன்றுவது ப்ரதிமத்தியமமும் ஸம்வாதிகளா யிருக்கவேண்டுமென்பது விளங்கவில்லையா! இதுவன்றி 'சுத்தரிஷபத்துடன் வராளிமத்தியமம் ஸம்வாதியாயிருக்கிறது' என்று பொருள்கொள்ளுகின்ற ஶுத்தர்ஷபேண ஸம்வாதீ வராளீ மத்யம: என்னும் வேங்கடமகியின் வசனமும் இக்கருத்திற்கு இணங்கியிருக்கிறது. இவற்றையன்றி இவ்விஷயத்தை ஸ்தாபிக்க வேறொரு காரணமுமுண்டு. அதைத் தஞ்சை ஸங்கீதவித்யாமஹாஜன ஸங்கத்தின் மூன்றுவது ரிபோர்ட்டினுடைய 41-வது பக்கத்தில் காணலாம். ஆகவே அவர்களது ஸ்தானங்களுள் 24, 27, 29, என்னுமிவற்றைவிட்டு 26, 28, 31, என்னுமிவற்றை எடுத்துக்கொள்ளவேண்டுமென்பது எனது அபிப்பிராயமென்று யாரும் எளிதில் அறிந்துகொள்ளலாம்.

ஆதிகாலமுதல் வைதிக ஸம்பிரதாயமாய் வந்துகொண்டிருந்த கொள்கையைச் சிலர் கைநழுவவிட்டு சுத்தஸ்வரங்கள் இன்னவை என்பதையும் ஸ்வரங்களுக்கு இன்னக்கிரமத்தில் தீவ்ரா முதலிய இருபத்திரண்டு பெயர்கள் வந்தன என்பதையும் அடியோடு மறந்து அவ்விருபத்திரண்டு சுருதிகளின் பெயர்களையும் அம்முறையே 5, 6, 9, 10, 14, 15, 18, 19, 22, 23. 27, 28, 32, 36, 37, 40, 41,

45, 46, 49, 50, 54 என்னும் இவ்விருபத்திரண்டு இடங்களுக்குக்கொடுத்து அந்த ஸ்தானங்களில் தோன்றும் ஸ்வரங்களுக்கு (1) ப்ரதிசுத்தரிஷபம், (2) சுத்தரிஷபம், (3) ப்ரதிசதுர்சுருதிரிஷபம் அல்லது ப்ரதிசுத்தகாந்தாரம், (4) சதுர்சுருதிரிஷபம் அல்லது சுத்தகாந்தாரம், (5) ப்ரதிஷட்சுருதிரிஷபம் அல்லது ப்ரதிசாதாரணகாந்தாரம், (6) ஷட்சுருதிரிஷபம் அல்லது ஸாதாரணகாந்தாரம், (7) ப்ரதிஅந்தரகாந்தாரம், (8) அந்தரகாந்தாரம், (9) ப்ரதிசுத்தமத்தியமம், (10) சுத்தமத்தியமம், (11) ப்ரதிஅந்தரமத்தியமம், (12) ப்ரதிமத்தியமம், (13) பஞ்சமம், (14) ப்ரதிசுத்ததைவதம், (15) சுத்ததைவதம், (16) ப்ரதிசதுர்சுருதிதைவதம் அல்லது ப்ரதிசுத்தநிஷாதம், (17) சதுர்சுருதிதைவதம் அல்லது சுத்தநிஷாதம், (18) ப்ரதிஷட்சுருதிதைவதம் அல்லது ப்ரதிகைசிகநிஷாதம், (19) ஷட்சுருதிதைவதம் அல்லது கைசிகநிஷாதம், (20) ப்ரதிகாகலிநிஷாதம், (21) காகலிநிஷாதம், (22) ஷட்ஜம் என்றிவ்வாறு அம்முறையே பெயர் வைத்து வழங்கத்தலைப்பட்டனர். இவ்விடத்திய இருபத்திரண்டு ஸ்தானங்களுள் 9, 10, 14, 15 என்னுமிவைகளிலும் 37, 40, 41, 45 என்னுமிவைகளிலும் இரண்டிரண்டு ஸ்வரங்கள் பேசுவதற்கு இடமிருக்கின்றமையால் இவ்விருபத்திரண்டு ஸ்தானங்களிலும் முப்பது ஸ்வரங்கள் பேசுகின்றனவென்றும் அவைகளை முப்பது சுருதிகளென்றுகூடச் சொல்லலாமென்றும் இப்பரம்பரையைச்சேர்ந்தவர்கள் இப்பொழுதும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். சுருதிஸ்தானங்களைப்பற்றியமட்டில் இவர்களுக்கு ஆதிஸம்பிரதாயம் அடியோடு மறந்துபோகவில்லையென்பதையும் இவர்கள் கொடுத்திருக்கிற பெயர்கள் ஜோடி ஜோடியாய்ச்சேர்ந்து ஆங்காங்கு வருகிற ஸ்தானங்களை ஸம்சயத்திற்கிடமில்லாமல் குறித்துக்காட்டுகின்ற

னவென்பதையும் நாம் கண்டு மகிழவே வேண்டியிருக்கிறது. என்றாலும் தற்காலத்தில் ஸ்ரீமான் தேவல் அவர்கள் செய்திருக்கிற பிழையை இவர்கள் முன்னமேயே செய்துவிட்டனரென்ற ஒரு விஷயந்தான் பரிதபிக்கத்தக்கதாகும். இருபத்திரண்டாவது ஸ்தானத்திலுள்ள ப்ரதிசுத்தமத்தியமத்தை விலக்கி முப்பத்தோராவது ஸ்தானத்தில் ப்ரதிசுத்தபஞ்சமமென்ற ஒன்றை இவர்கள் வைத்திருந்தார்களானால் சுருதிஸ்தானங்களின் ஸங்கியை விஷயத்தில் அபிப்பிராயபேதமுண்டாவதற்கிடமில்லை.

ஸுமார் இருநூற்றைம்பது வருஷங்களுக்கு முன்னிருந்த வேங்கடமகி என்ற வித்வான் ஒருவர் இருபத்திரண்டு சுருதிகளைப்பற்றி மேற்காட்டிய அபிப்பிராயத்திலேயே வளர்ந்துவந்தவரெனத் தெரியவருகின்றது. வீணைக்குத்தற்காலத்திலுள்ள பன்னிரண்டு ஸ்தானங்களை முதன் முதல் ஏற்படுத்தியவர் அவர்தான். நமது மஹேசுவர வீணைப்படி அவர் எடுத்துக்கொண்ட ஸ்தானங்கள் 6, 10, 15, 19, 23, 28, 32, 37, 41, 46, 50, 54 என்னுமிவைகளாம். இவற்றில் தோன்றும் ஸ்வரங்களுக்கு மேற்கூறிய ஸம்பிரதாயப்படிக்கு (1) சுத்தரிஷபம், (2) சதுர்சுருதிரிஷபம் அல்லது சுத்தகாந்தாரம், (3) ஷட்சுருதிரிஷபம் அல்லது ஸாதாரணகாந்தாரம், (4) அந்தரகாந்தாரம், (5) சுத்தமத்தியமம், (6) ப்ரதிமத்தியமம், (7) பஞ்சமம், (8) சுத்ததைவதம், (9) சதுர்சுருதிதைவதம் அல்லது சுத்தநிஷாதம், (10) ஷட்சுருதிதைவதம் அல்லது கைசிகநிஷாதம், (11) காகலிநிஷாதம், (12) ஷட்ஜம் என்றிவ்வாறு பெயர்கள் அமைந்திருக்கின்றன. இக்காலத்திலும் இப்பெயர்களே நமது வியவஹாரத்திலுமிருக்கின்றன. இவற்றிற்கு வேங்கிடமகி என்பவர் (1) சுத்தரிஷபம், (2) பஞ்சசுருதிரிஷபம் அல்லது சுத்தகாந்தாரம், (3) ஷட்சுருதி

ரிஷபம் அல்லது ஸாதாரணகாந்தாரம், (4) அந்தரகாந்தாரம், (5) சுத்தமத்தியமம், (6) வராளிமத்தியம், (7) சுத்தபஞ்சமம், (8) சுத்ததைவதம், (9) பஞ்சசுருதிதைவதம் அல்லது சுத்தநிஷாதம், (10) ஷட்சுருதிதைவதம் அல்லது கைசிகநிஷாதம், (11) காகலிநிஷாதம், (12) சுத்தஷட்ஜம் என்றிவ்வாறு அம்முறையே பெயரிட்டிருக்கிறூர். சாஸ்திரப்படி துவிசுருதியாய் வருகின்ற ரிஷபத்தை இவர் திரிசுருதியென்று மலைத்து அதுவே சுத்தரிஷபமாகுமென்றும் நம்புகிறூர். ஆகையாற்றூன் உள்ளபடியே சதுர்சுருதியாகிய ரிஷபம் போலியான இவருடைய சாஸ்திரதிருஷ்டிக்குப்பஞ்சசுருதியாய்த் தோன்றிவிட்டது. இப்படியே மற்றும் சிலவிடங்களிலும் கண்டுகொள்ளவேண்டும். ஆனல் இவர் தனக்கு ஸுமார் நூற்றைம்பது வருஷங்களுக்கு முன் ஸ்வரமேளகலாநிதியென்னும் நூலில் ராமாமாத்தியரென்பவர் விகிருதிஸ்வரங்களென்று குறிப்பிட்டவைகளுள் ச்யுதமத்தியமகாந்தாரம் ச்யுதஷட்ஜநிஷாதம் என்னும் இரண்டு ஸ்வரங்களை அங்கீகரிக்காது விட்டது பிராசீன சாஸ்திர ஸம்பிரதாயத்திற்கு அநுகூலமாகுமென்பது கவனிக்கத்தக்கது. எப்படியெனில் ச்யுதபஞ்சமமத்தியமமென்பது பஞ்சமத்தின் மூன்றூவது சுருதியான ஸந்தீபனியிலிருப்பதுபோல ச்யுதமத்தியம காந்தாரமென்பது மத்தியமத்தின் மூன்றூவது சுருதியாக ப்ரீதியிலிருப்பதேயன்றி அதற்காகத்தனியே வேறொரு ஸ்தானம் கிடையாதென்பதும் ச்யுதஷட்ஜநிஷாதமென்பது ஷட்ஜத்தின் மூன்றூவது சுருதியாகிய மந்தாவிலிருப்பதேயன்றி அதற்காகவும் தனியே வேறொரு ஸ்தானம் கிடையாதென்பதும் அவரது கருத்தாகும். ஆகவே நாம் மேற்காட்டிய லௌகிகஸம்பிரதாயத்தைச் சேர்ந்த சுருதிஸ்தானங்களுள் இருபத்திரண்டாவது ஸ்தானம் எடுபட்டு முப்பத்தோராவது

ஸ்தானம் நிலைபெறலாயிற்றென்பதனுலென்க.

ஐரோப்பியரது ஸ்வரமேளத்தில் மதஸ, ஸகப, பநிரி, என்ற ஒருவகையான திரிகங்களும் தஸக, கபநி, ரிமத, என்ற வேறொரு வகையான திரிகங்களும் வருவதாகத்தெரிகின்றது. அவற்றுள் ரிமத, என்பது தன் வகையைச் சேர்ந்த மற்ற இரண்டு திரிகங்களைப்போல ஸ்வரஸம்வாத விஷயத்தில் ஒத்திராமையை அவர்களே ஒப்புக்கொள்வார்கள். அவர்களது ஸம்பிரதாயத்தில் ஒரு ஸ்தாயியில் எடுத்துக்கொள்ளப்பட்ட பன்னிரண்டு ஸ்தானங்களோ 1, 6, 10, 15, 18, 23, 27, 32, 37, 40, 46, 49, 54 என்னுமிவைகளாம். இவற்றுள் 54 என்பது வேறு ஸ்தாயியைச் சேர்ந்ததாகையால் அது பன்னிரண்டிலடங்காது.

வேங்கிடமகி என்பவர் தானெடுத்துக்கொண்ட பன்னிரண்டு ஸ்தானங்களில் மேற்கூறிய பதினாறு ஸ்வரபேதங்களைக்கற்பித்துக்கொண்டு மேருவிலுள்ள ஷட்ஜத்துடன் கூடிய ஸரிகம என்னும் முற்பாகத்தையும் பதநிஸ என்னும் பிற்பாகத்தையும் ஆறுறுபேதங்களாய்ப் பிரஸ்தரித்து சுத்தமத்தியம ராகங்கள் முப்பத்தாறு எனவும் வராளிமத்தியமராகங்கள் முப்பத்தாறு எனவும் வராளிமத்யம ராகங்கள் முப்பத்தாறு எனவும் கொண்டு வெகுகாலமாய் அநுபவத்திலிருந்த ராகங்களுக்கும் தனது கற்பனையில் வந்த ராகங்களுக்கும் கடபயாதிஸங்கியைப்படி கநகாம்பரி பேநத்யுதி காநஸாமவராளி முதலிய பெயர்களை வைத்திருந்தார். அவர் குறிப்பிட்ட பல ராகங்கள் ஆரோஹணம் அவரோஹணமாகிய இவ்விருமுறையிலும் ஸம்பூர்ணமாக இராமையை நோக்கி அதிருப்திகொண்டு அவ்விதம் ஸம்பூர்ணமான சுத்தமத்தியம ராகங்கள் முப்பத்தாறெனவும் ப்ரதிமத்தியம ராகங்கள் முப்பத்தாரெனவும் வகுத்து கநகாங்கி ரத்நாங்கி முதலிய பெயர்களை ஒருவாறு அந்த எழு

பத்திரண்டு பேதங்களுக்கும் கொடுத்து வேறு சிலர் வியவஹரிக்கத்தலைப்பட்டார்கள். தீரசங்கராபரணம் முதலிய சிலபெயர்களை இவர்கள் அவர் வைத்தபடியே வைத்துமிருக்கிறார்கள். இக்காலத்தில் அவைகளே முக்கியராகங்களாகவும் கநகாம்பரி பேநத்யுதி முதலிய சில ராகங்கள் அவற்றின் ஜந்ய ராகங்களாகவும் எண்ணப்படுகின்றன. ஆகவே வேங்கிடமகியவர்களால் ஏற்பட்ட கநகாம்பரி முதலிய ராகங்கள் பிரவஸித்தப்பட்ட பிறகுதான் கநகாங்கி முதலிய பெயர்கள் மேற்கூறிய ஸம்பூர்ணராகங்களுக்குப் புதிதாய் ஏற்பட்டிருக்கவேண்டும். எப்படியும் வெங்கிடமகியின் காலத்திற்குமுன் எழுபத்திரண்டு மேளகர்த்தாக்கள் என்கிற வியவஹாரமே கிடையாதென்று நாம் நிச்சயமாய்ச் சொல்லலாம்.

இந்தப்பிரகாரம் வைதிகஸம்பிரதாயத்திலுள்ள சுத்த ஸ்வரங்களின் ஸ்தானங்கள் மாறுபட்டிருப்பினும் ஒரு ஸ்தாயியிலுள்ள இருபத்திரண்டு சுருதிஸ்தானங்கள் மட்டிலும் ஒருவாறு நிலைத்துநிற்பதை உணராமலும் ராமாமாத்தியரது காலத்திலிருந்த கொள்கையை உள்ளபடி தெரிந்துகொள்ளாமலும் வேறு சிலர் ச்யுதமத்தியமகாந்தாரத்திற்காக 22-வது ஸ்தானத்தையும் ச்யுதஷட்ஜநிஷாதத்திற்காக 53-வது ஸ்தானத்தையும் சேர்த்து 5, 6, 9, 10, 14, 15, 18, 19, 22, 23, 27, 28, 31, 32, 36, 37, 40, 41, 45, 46, 49, 50, 53, 54, என்னும் இந்த இருபத்துநான்கு இடங்களையும் அத்தனை சுருதிஸ்தானங்களாக எடுத்துக்கொண்டனர். இவற்றிற்கு அவர்கள் அம்முறையே தீவ்ரா, குமுத்வதீ, மந்தா, சந்தோவதீ, தயாவதி, ரஞ்சனீ, ரக்திகா, ரௌத்ரீ, க்ரோதா, வஜ்ரிகா, ப்ரஸாரிணீ, ப்ரீதி, காந்தா, மார்ஜனீ, க்ஷிதி, ரக்தா, ஸந்தீபினீ, ஆலாபினீ, மதந்தீ, ரோஹிணீ, ரம்யா, உக்ரா, உத்தீபினீ, க்ஷோபி

84357



ணீ என்றிவ்வாறு பெயரிட்டிருக்கிறார்கள். இவற்றின் பெயர்களுள்ள இடங்களை நோக்கும்போது ஆதிகாலமுதல் வந்த ஸம்பிரதாயம் இவர்களுக்குத் தெரியவே தெரியாதென்பதும் மற்றவர்கள் செய்திருக்கிற மேற்காட்டிய பிழையை உணராமலே சுத்தபஞ்சமத்திற்குக் கீழ் காந்தா என்ற ஓர் ஸ்தானத்தையும் ஷட்ஜத்திற்குக்கீழ் உத்தீபினீ என்ற ஒரு ஸ்தானத்தையும் இவர்கள் புதிதாய்க் கற்பனை செய்து வைத்துக்கொண்டார்களென்பதும் விசதமாகின்றது. இந்த இருபத்துநான்கு ஸ்தானங்களைக் கற்பனை செய்தவர்களுக்கு அத்தனை அக்ஷரங்களுள்ள காயத்திரி மந்திரத்தின் ஞாபகமும் வந்துவிட்டது. அம்மந்திரத்தினின்று ஸப்தஸ்வரங்களுக்காக 2, 6, 10, 15, 21, 23, 7 என்னுமிவ்வேழு அக்ஷரங்களை உத்தாரஞ்செய்யப் புகுந்த அவர்களுக்கு தைவதஸ்வரத்தை ஸரியாய் உச்சரிக்கத் தெரியாதென்பதுதான் வெளியாயிற்று. க ச ட த ப ய ஸ என்னும் எட்டு வர்க்கங்களுள் 8ம் வர்க்கத்தின் மூன்றாவது வர்ணத்தை ஹரிபீஜமான அகாரத்துடன் கூட்டி ஸ என்பதும், 7ம் வர்க்கத்தின் இரண்டாவது வர்ணத்தை காமபீஜமான இகாரத்துடன் கூட்டி ரி என்பதும், 2ம் வர்க்கத்தின் மூன்றாவது வர்ணத்தை ஹரிபீஜத்துடன் கூட்டி ம என்பதும், 6ம் வர்க்கத்தின் ஐந்தாவது முதலாவது வர்ணங்களை ஹரிபீஜத்துடன் கூட்டி ம ப என்பவைகளும் 5ம் வர்க்கத்தின் நான்காவது ஐந்தாவது வர்ணங்களை ஹரிபீஜம் காமபீஜம் இவற்றுடன் கூட்டி ய நி என்பவைகளும் ஆகிய ஸப்தஸ்வரங்களும் உத்தரிக்கப்பட்டிருக்கின்றனவென்பது மதங்கமுனிவரது கொள்கையென்று பிராசீனகிரந்தங்களால் தெரியவருகிறது. ஷட்ஜம் முதலிய பெயர்களின் முதலெழுத்துக்களை அவைகளுக்கு ஸம்ஜ்ஞையாக எடுத்துக்கொண்டார்களென்பது தான் எல்

லோரும் ஒப்புக்கொள்ளக் கூடியதாகும். ஸத்தாகிய ஒரு வஸ்துவினிடமிருந்து உண்டாகியதென்ற பொருளில் ஸஜ்ஜமென்று முதலாவது ஸ்வரம் ஒருகாலத்தில் வியவஹரிக்கப்பட்டிருக்கலாம். பிறகு ஆறு ஸ்தானங்களினின்று உண்டாவதென்றும், மற்ற ஆறு ஸ்வரங்களும் இதனிடமிருந்து உண்டாவனவென்றும் கற்பனைசெய்து முன் சொல்லை மறந்து ஷட்ஜம் என்று மாற்றிவிட்டனர்போலும். எப்படியாயினும் ஸரிகமபதநி என்ற ஸம்ஜ்ஞைகள் மிகவும் பிராசீனமானவை என்பதுமட்டில் ஒருவருக்கும் ஸந்தேகமில்லை. இது நிற்க இந்த இருபத்துநான்கு ஸ்தானங்களுள்ள வீணைக்குப் பிரஹ்மவீணை என்று பெயராம். அவற்றுள் சுத்தஸ்வரஸ்தானங்கள் பதினான்கும் மிச்ரஸ்வரஸ்தானங்கள் பத்தும் இருக்கின்றனவாம். அப்பதினான்கு ஸ்தானங்களுள்ள வீணைக்கு ருத்ரவீணையென்றும் மீதியான பத்து ஸ்தானங்களை உடையதற்கு விஷ்ணுவீணையென்றும் பெயராம். இது விஷயத்தைப்பற்றி யான் ஆராய்ச்சி செய்யப்புகுந்தபொழுது தஞ்சை ஸரஸ்வதிமாவில் ராகப்பிரஸ்தாரமென்ற தலைப்பெயருடன் ஓலைச்சுவடி ஒன்று எனக்குப் பார்க்கக்கிடைத்தது. இதில் பிரஹ்மவீணையென்று சொல்வதின் ஸ்தானங்கள் இருபத்துநான்கையும் வைத்துக்கொண்டு ராகங்களைப் பிரஸ்தரித்திருக்கிறது. அவ்விருப்பத்துநான்கு ஸ்தானங்களின் பெயர்கள் பின்வருமாறும்:— (1) ப்ரதிசுத்தரிஷபம், (2) சுத்தரிஷபம் (3) ப்ரதிசதுர்சுருதிரிஷபம் அல்லது ப்ரதிசுத்தகாந்தாரம், (4) சதுர்சுருதிரிஷபம் அல்லது சுத்தகாந்தாரம், (5) ப்ரதிஷ்ட்சுருதிரிஷபம் அல்லது ப்ரதிஸாதாரணகாந்தாரம், (6) ஷட்சுருதிரிஷபம் அல்லது ஸாதாரணகாந்தாரம், (7) ப்ரதிஅந்தரகாந்தாரம் அல்லது ப்ரதிஅந்தரரிஷபம், (8) அந்தரகாந்தாரம், (9) ச்யுதமத்தியமகாந்தாரம், (10) சுத்தமத்தி

யமம், (11) ப்ரதிஅந்தரமத்தியமம், (12) ப்ரதிமத்தியமம், (13) ச்யுதபஞ்சமமத்தியமம், (14) சுத்தபஞ்சமம், (15) ப்ரதிசுத்ததைவதம், (16) சுத்ததைவதம், (17) ப்ரதிசதுர்சுருதிதைவதம் அல்லது ப்ரதிசுத்தநிஷாதம், (18) சதுர்சுருதிதைவதம் அல்லது சுத்தநிஷாதம், (19) ப்ரதிஷட்சுருதிதைவதம் அல்லது ப்ரதிகைசிகநிஷாதம், (20) ஷட்சுருதிதைவதம் அல்லது கைசிகநிஷாதம், (21) ப்ரதிகாகலிநிஷாதம் அல்லது ப்ரதிகாகலிதைவதம், (22) காகலிநிஷாதம், (23)ச்யுதஷட்ஜநிஷாதம், (24) சுத்தஷட்ஜம். இவற்றுள் இரண்டு பெயர்களுள்ள பத்துஸ்தானங்களையும் மிச்ரஸ்வரஸ்தானங்களென்றும் பாக்கியாயுள்ள பதினன்கு ஸ்தானங்களையும் சுத்தஸ்வரஸ்தானங்களென்றும் அவர்கள் நினைத்தனர்போலும். அந்த ஸ்தானங்களைமட்டிலும் வைத்திருக்கின்ற விஷ்ணுவீணை-ருத்ரவீணைகளை யாராகிலும் பார்த்ததுண்டா அல்லது கேட்டதுதானுண்டா? இந்த ராகப்பிரஸ்தாரத்தில் கண்டபடி ஒவ்வொரு சக்கரத்திற்கு முப்பத்துநான்கு ராகபேதங்களும், அந்தப்படியுள்ள முப்பத்துநான்கு சக்கரங்களுக்கும் $34 \times 34 = 1156$ ராகபேதங்களுமாகின்றன. ஒரு மத்திமத்திற்குமட்டிலும் இவ்வளவு பேதங்களானல் அப்படிப்பட்ட நான்கு மத்தியமபேதங்களுக்கும் $1156 \times 4 = 4624$ ராகபேதங்களாகின்றன. இந்த ராகப்பிரஸ்தாரத்திலுள்ள ஒவ்வொரு ராகத்திற்கும் ஒவ்வொரு பெயர் தனித்தனியே கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தப்பெயர்களில் கடபயாதிகளை அநுஸரித்து ஒரு சமத்காரத்தையும் காணேம். அவற்றின் இடையில் ஆங்காங்கு கநகாங்கிரத்நாங்கி முதலிய பெயர்கள் மேற்காட்டிய எழுபத்திரண்டு ராகங்களுள்ள அடையாளங்களுடன் புகுத்தியிருக்கிறது. அந்தப் பெயர்களோ வேங்கடமகியவர்களது காலத்திற்குப் பிறகுதான் உண்டாயினவென்று ஏற்கனவே

கண்டிருக்கிறோம். ஆகவே இருபத்துநான்கு ஸ்தானங்களுடைய பிரஹ்மவீணையின் கற்பனை ஸமீபகாலத்தில்தான் ஏற்பட்டிருக்கவேண்டுமென்று உள்ளங்கை நெல்லிக்கனி போல உங்களெல்லோருக்கும் இப்போது விளங்கவில்லையா?

இதையன்றி ஸங்கீதஸாரஸங்கிரஹம் என்ற ஓலைச்சுவடி ஒன்று என் பார்வைக்கு வந்து அதன் பிரதியொன்றும் இப்போது என் கையிலிருக்கிறது. இதிலும் இருபத்துநான்கு ஸ்தானங்களுள்ளது பிரஹ்ம வீணையென்றும் அதனின்று விஷ்ணுவீணையும் ருத்ரவீணையும் பிரிந்துவந்தனவென்றும் கண்டிருக்கிறது. ஆனால் இவ்விரண்டு வீணைகளைப்பற்றி மேற்சொன்ன கிரந்தத்தைப்போல அஸம்பாவிதமாக ஒன்றும் இதில் சொல்லப்படவில்லை. ஒருவேளை அதிலுள்ள அஸம்பவதோஷத்தைப் பரிஹரிக்கவே இந்தக் கிரந்தம் ஏற்பட்டிருந்தாலுமிருக்கலாம். இதில் மேற்கூறிய இருபத்துநான்கு ஸ்தானங்களுள் ஒற்றைப்படையான பன்னிரண்டும் விஷ்ணுவீணைக்கு உரியனவென்றும் இரட்டைப்படையான பன்னிரண்டும் ருத்ரவீணைக்கு உரியனவென்றும் கூறியிருக்கிறது. ருத்ரவீணையின் ஸ்தானங்களோ வேங்கடமகி முதலியவர்கள் கூறிய ஸ்தானங்களேயாகின்றன. அதன் பன்னிரண்டு ஸ்தானங்களில் சுத்தஸ்வரங்கள் எட்டும் மிச்ரஸ்வரஸ்தானங்கள் நான்கிலுள்ள மிச்ரஸ்வரங்கள் எட்டும் சேர்ந்து பதினாறு ஸ்வரங்கள் பேசுகின்றனவென்று அதில் கூறியிருக்கிறது. இப்பதினாறு ஸ்வரங்களின் பிரதிஸ்வரங்கள் பதினாறும் விஷ்ணுவீணைக்கு உரியனவென்பது இந்நூலாசிரியரது கருத்தெனவியக்தமாய்த் தோன்றுகிறது. ஆகவே மேற்கூறிய ராகப்பிரஸ்தாரத்தில் கண்ட ப்ரதி அந்தரரிஷபமும் ப்ரதிகாகலிதைவதமும் அஸம்பாவிதங்களாமென்று இவர் விலக்கிவிட்டாரெனத் தெரிகிறது. இக்கருத்தை வைத்துக்கொண்டு

பிரஹ்மவீணையைப்பார்த்தால் அதன் இருபத்துநான்கு ஸ்தானங்களிலும் சுத்தஸ்வரங்கள் பதினாறும் மிச்ரஸ்வரங்கள் பதினாறுமென முப்பத்திரண்டு ஸ்வரங்களே பேசுகின்றமையால் ஒவ்வொரு சக்கரத்திற்கும் முப்பத்திரண்டு ராகங்களாக முப்பத்திரண்டு சக்கரங்களுக்கும், 32×32 =1024 ராகங்களாகவே மேற்கூறிய நான்கு மத்தியமபேதங்களை நோக்க 4096 ராகங்கள்தாம் கிடைக்கின்றனவென்று ஏற்படுகின்றது. இக்கணக்கை நோக்கவே விஷ்ணு வீணைக்கும் பத்து ஸ்தானங்கள்தாமென்பதை நம்பி அதனின்று இருநூறு ராகங்கள் ஏற்படுமென்ற விவரம் ஸ்திரப்படாமையை எல்லோரும் காணலாம். ஒருவித வியவஸ்தையுமில்லாமல் நாம் பிரஸ்தரிப்பதாயிருந்தால் நாம் முதலில் எடுத்துக்கொண்ட மாஹேசுவர வீணையின் 53 ஸ்தானங்களை வைத்து ஏன் பிரஸ்தரிக்கக்கூடாது? அதன் பிரகாரம் ஸரிகம என்னும் முற்பகுதிக்கு இருநூற்றுப்பத்து பேதங்களும் பதநிஸ என்னும் பிற்பகுதிக்கு இருநூற்றுப்பத்துபேதங்களும் கிடைக்கின்றன. ஒரு மத்தியமஸ்தானத்துடன் அக்கணக்கை முன்னிட்டு வருகின்ற ராகபேதங்கள் 210×210=44100 ஆகும். ஆகவே அவ்விதமான ஒன்பது மத்தியமஸ்தானபேதங்களுக்கும் 44100× 9=396900 ராகபேதங்களாகின்றன. இவ்விதமான மாஹேசுவர வீணையில் ஸங்கீதப் பிரபஞ்சமெல்லாம் அடங்கிவிடுமென்று கூறுவதிலும் குற்றமேஇல்லை. இதுவுமன்றி இந்தக்கிரந்தத்தில் பதினாறு ஸ்வரபேதங்களை வைத்துக்கொண்டு கநகாங்கி முதலிய எழுபத்திரண்டு மேளங்களுக்கு வேண்டிய பிரஸ்தாரக்கிரமங்களும் தெலுங்கு பாஷையில் பத்தியங்களாலேயே எழுதப்பட்டிருக்கின்றன. கநகாங்கி முதலியவற்றிற்கு வேங்கிடமகியவர்களுக்குப் பிற்காலம் ஸம்ஸ்கிருத பாஷையில் எழுதப்பட்ட ஸங்கிரஹ

சூடாமணியென்ற ஓர் கிரந்தம் மூலமாயிருக்கலாமென்று சில ஹேதுக்களைக்கொண்டு அநுமானிக்கிறேன். அதைச் செய்தவர் காந்தா உத்தீபினி என்ற இரண்டு சுருதிகளை அங்கீகரித்தவரல்ல. அவைகள் எப்படிப்போனபோதிலும் இங்கு எடுத்துக்கொண்ட ருத்ர வீணையின் ஸ்வபாவத்திற்கு ஒரு கேடுமில்லையென்பதுமட்டும் நிச்சயம். ஸங்கிரஹசூடாமணிக்காரர் லௌகிக ஸம்பிரதாயத்தைச் சேர்ந்தவரென்றாலும் வைதிக ஸம்பிரதாயத்திலுள்ள இருபத்திரண்டு சுருதிகளின் வரம்பை மீறுதிருந்தார். இவரோ அந்தக்கிரமத்தையும் மீறினவராகின்றார். வைதிக ஸம்பிரதாயத்தைக் கைநழுவவிட்டவர்கள் எக்கேடு கெட்டால்தான் நமக்கென்னவென்று நாம் இதுவரையில் மௌனமாயிருந்தது நமக்கே அநர்த்தமாய் முடிந்தது பார்த்தீர்களா?

இதுவரையில் நாம் விசாரித்து வந்ததில் தென்னிந்தியாவின் ஸங்கீதத்தில் இருபத்திரண்டு சுருதிகளைப்பற்றிய மட்டில் வைதிகஸம்பிரதாயம் சேஷித்து நிற்கிறதென்றும் அவற்றின் வியவஸ்தையை அவைதிகஸம்பிரதாயமொன்று இடையில் கிளம்பிக் கெடுக்கப்பார்க்கிறதென்றும் தெரிந்துகொண்டோம். இதுவன்றி இத்தேசத்திலுள்ள ஸாமவேதிகளுள் சிலர் தாங்கள் பிரயாஸப்பட்டு அத்தியயனம் செய்திருக்கிற அவ்வேதத்தை வீணைமூலமாய் வாசித்துக் காட்ட முயல்கிறார்கள். நமது மாஹேசுவர வீணையில் நானெடுத்துக்காட்டியபடி இக்காலத்திய வீணைகளிலும் ஹார்மோனியங்களிலும் அவ்வேதத்திற்குரிய ஸ்தானங்களில்லாமையால் இருக்கிற வாத்தியங்களைக்கொண்டு வேதஸ்வரத்தை எங்கே கெடுத்துவிடுகிறார்களோ என்று பயமாயிருக்கிறது. ஆகவே வைதிகம் லௌகிகமென்ற இரண்டு ஸம்பிரதாயங்களுக்கும் இணங்கியதான ஓர் வீணையும் அதற்கேற்ற ஓர் ஹார்மோனியமும் இருந்தால் மிக்க நல

மாயிருக்கும். வேங்கடமகி முதலியவர்கள் லௌகிக ஸம்பிரதாயத்தைமாத்திரமனுஸரித்து சுத்தமத்தியம ஸ்தானத்திலிருந்து ஆரம்பித்து ஷட்ஜபஞ்சமபாவ முறையில் பன்னிரண்டு ஸ்தானங்களை வைத்துத் தங்களுக்குத்தோன்றிய பெயர்களை அவற்றிற்கு வைத்திருக்கிறார்களல்லவா? அவ்வாறின்றி அவ்விரண்டு ஸம்பிரதாயங்களுக்கும் அநுகூலமாக சுத்தபஞ்சம ஸ்தானத்திலிருந்து ஆரம்பித்து ஷட்ஜமத்தியமபாவ முறைப்படி பன்னிரண்டு ஸ்தானங்களை வீணைக்கு உபயோகப்படுத்தினால் யுக்தமாயிருப்பதுடன் தொன்று தொட்டு வழங்கிவருகிற ஸம்பிரதாயம் கத்தரித்துப்போகாமலுமிருக்குமென்று யான் நம்புகிறேன். அவற்றிற்கு மேருவிலிருந்து அம்முறையே ஷட்ஜம், ஏகசுருதிரிஷபம், சுத்தரிஷபம், சுத்தகாந்தாரம், அந்தரகாந்தாரம், சுத்தமத்யமம், தீவ்ரமத்யமம், பஞ்சமம், ஏகசுருதி தைவதம், சுத்ததைவதம், சுத்தநிஷாதம், காகலிநிஷாதம், ஷட்ஜம் என்றிவ்வாறு பெயர் கொடுப்பது முன்னோரது அபிப்பிராயத்திற்கு இணங்கியதாகவுமிருக்கும். அப்படியே துவிசுருதி ரிஷபம், சதுர்சுருதிரிஷபம், ஸாதாரண காந்தாரம், ச்யுதமத்தியமகாந்தாரம், தீவ்ரதரமத்தியமம், தீவ்ரதமமத்தியமம், துவிசுருதிதைவதம், சதுர்சுருதிதைவதம், கைசிகநிஷாதம், ச்யுதஷட்ஜநிஷாதம் என்றிவ்வாறு பெயரிடக்கூடிய மற்ற சுருதிஸ்தானங்கள் பத்தையும் அந்த வீணையிலேயே நாம் வாசித்துக்காண்பிப்பதற்கும் ஸௌகரியமிருக்கிறது. ஹார்மோனியத்திலோ மேற்கூறிய இருபத்திரண்டு சுருதி ஸ்தானங்களையும் வைத்துக்கொண்டால் தான் நமது ராகங்களை உள்ளதுள்ளபடி ஒருவாறு வெளிப்படுத்தக்கூடுமென்பது எனது அபிப்பிராயம்.

நம்மில் பலரும் வைதிக பரம்பரையைச்சேர்ந்தவர்களேயாதலால் இக்காலத்திற்கேற்றபடி ஒவ்வோர் காரணத்

தை முன்னிட்டு நாம் லௌகிகவிஷயத்தில் புகுந்திருப்பினும் அப்பரம்பரையை முற்றிலும் மறந்துவிடுவது நமக்கு அழகாகுமா? அப்படி மறந்து நடந்துகொள்ள மனப்பூர்வமாய் ஒருவருக்கும் தைரியம் வராது. நாம் எடுத்துக்கொண்ட சுருதிவிஷயம் லௌகிகத்திற்கும் விரோதப்படாமையைப் பக்ஷபாதமின்றிப் பார்ப்பவர்கள் எல்லோரும் உணராமலிருக்கமுடியாது. தம்மையறியாமல் பக்ஷபாத மார்க்கத்தில் விழுந்திருப்பவர்களும் கொஞ்சம் தனியேயிருந்து யோசனைசெய்வார்களானால் இங்கு காட்டிய ஸித்தாந்தத்திற்கே வந்துசேர்வார்கள். எடுத்துக்கொண்ட விஷயத்தின் உண்மையில்மாத்திரம் யான் திருஷ்டிவைத்திருக்கிறேனென்பதை எல்லோரும் நம்பலாம். ஆகவே இவ்விசாரத்தில் அவரவர்களுக்குத்தோன்றுகிற குற்றங்களையெடுத்துக் கூசாமல் யாரும் பேசலாம். அக்குற்றங்களைக் கண்டு களைந்துகொள்வதற்கே யான் பாடுபடுகின்றேன். போலிக்குற்றங்களைச் சாட்டுவதில்மட்டும் பிரயோஜனமில்லை. உள்ளதுள்ளபடி உண்மைகளை வெளிப்படுத்துவதன்றோ உயர்ந்ததோர் செயலாகும்.

S. சுப்பிரமணிய சாஸ்திரி.

## உத்தரராமசரிதம்.

**ராமன்:**—ஆனால் உண்மையாக ஸீதை இவ்விடத்தில் இல்லை; அப்படி இருந்தால் வாஸந்தி கண்ணுக்குத் தெரியாதோ; அல்லது இது ஒரு ஸ்வப்னமோ; நான் தூங்கவில்லையே. அப்படி இருக்க எப்படி ஸ்வப்னம் உண்டாகும். இவ்வளவு துக்கத்தை அனுபவிக்கிற எனக்குத் தூக்கமெங்கே வரப்போகிறது. ஆகையால் ஸீதையைப் பற்றிய துக்கத்தால் எனக்கு அடிக்கடி உண்டாகிற சித்தப்ரமமே ஒழிய இது வேறல்ல.

**ஸீதை:**—குரூர சித்தமுடையவளான என்னாலேயே என் பிராணநாதன் ஏமாற்றப் பட்டாரே யொழிய வேறல்ல.

**வாஸந்தீ:**—தேவா! இதோ இங்கே பாருங்கள். இவ்விடத்தில் தான் ராவணனுக்கும் பக்ஷிராஜனான ஜடாயுவுக்கும் சண்டை நடந்தது. இதோ பாருங்கள், இராவணனுடைய இரும்புத்தேர் ஜடாயுவினால் துண்டு துண்டாக உடைக்கப்பட்டுக் கிடக்கிறது. இதோ அவன் ரதத்தில் பூட்டப்பட்டிருந்த கோவேறுகழுதைகள் ஜடாயுவினால் கொல்லப்பட்டு வெகு காலமானதால் மாம்சம் முதலியவைகள் மக்கிப்போய் எலும்புகள் மட்டும் பாக்கியிருப்பதால் பார்ப்பதற்கு மிகவும் பயங்கரமாய்ப் பிசாசத்தினுடைய முகத்தைப்போலொத்த

முகத்தையுடையனவைகளாய் காணப்படுகின்றன. இதோ இராவணனுடைய கத்தியினால் வெட்டப்பட்ட ஜடாயுவின் இரக்கைகள் பூமியில் இங்கும் அங்கும் சிதறியிருக்கின்றன. இதோ இந்த இடத்தில்தான் பயத்தினால் நடுங்கின ஸீதையை தூக்கிக்கொண்டு மின்னல் கொடியோடு கூடிய நீருண்ட மேகம்போல் ராவணன் ஆகாசமார்க்கத்தில் கிளம்பி லங்கையை நோக்கிச் சென்றான்.

**ஸீதை:**—[பயத்துடன்] ஆர்யபுத்ரா! இதோ ஜடாயு கொல்லப்படுகிறார். அவரைக் காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள். இதோ நான் இராவணனால் அபகரிக்கப்படுகிறேன்.

**ராமன்:**—[வேகமாய் எழுந்து] ஜடாயுவைக் கொன்று ஸீதையைத் தூக்கிக்கொண்டுபோகிற துராத்மாவான லங்கேச்வரா! எங்கே போகப்போகிறாய். எங்குபோனாலும் நான் உன்னை விடமாட்டேன்.

**வாஸந்தீ:**—இராக்ஷஸ குலத்திற்கு தூமகேதுவான ராமபத்ரா! இராவணனிடத்தில் தங்களுக்குள்ள கோபம் இன்னும் போகவில்லைபோலும்.

**ஸீதை:**—அஹோ! நான் ப்ரமத்தையடைந்தேன்போலும்

**ராமன்:**—முந்தி எனக்கு ஏற்பட்ட ஸீதாவியோகத்தைக்காட்டிலும் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் விரஹமானது பொறுக்கமுடியாததாயிருக்கிறது. ஏனென்றால் முந்தி நான் ஸீதையைவிட்டுப் பிரிந்தபொழுது மறுபடியும் நான் அவளை அடைவதற்கு அநேகம் உபாயங்கள் செய்யப்பட்டிருந்தன. மேலும் அவளைவிட்டு நான் பிரிந்த துக்கத்தை ஒருவாறு மறக்கும்படி அடிக்கடி வீரர்கள்

ஒருவருடன் ஒருவர் போரிட்டு பரம அத்புதரஸத்தை உண்டுபண்ணினர்கள். தவிரவும் அந்த வியோகம் ராவணனை ஸம்ஹாரம் செய்யும் வரையில் தான் இருந்தது. இப்பொழுதோவென்றால் ஸீதையைவிட்டு நான் பிரிந்து என் ஆயுள்நாள்வரையில் மறுபடியும் நான் அவளை அடைய எவ்வித உபாயமுமில்லாமல் துக்கஸாகரத்தில் ஆழ்ந்து அத்துயரத்தைப் போக்கடித்துக்கொள்ள எவ்வித வழியுமில்லாமல் பரிதபிக்கிறேன்.

**ஸீதை:**—முந்தி நான் என் பிராணநாதனைவிட்டுப் பிரிந்தபோதிலும் மறுபடியும் அவரை அடைந்ததால் வெகுமானிக்கப்பட்டேன். இப்பொழுது ஏற்பட்டிருக்கும் விரகமோ என் மரணபரியந்தம் உள்ளது என்று நினைக்கும்பொழுது என் மனது பதைக்கிறது.

**ராமன்:**—கஷ்டம்! என் ஆசைமயிலே, ஜானகி! நீ எங்கே இருக்கிறாய். முந்தி நான் உன்னைவிட்டுப் பிரிந்தபொழுது மறுபடியும் நான் உன்னை அடையும்பொருட்டு ஏற்பட்ட ஸுக்ரீவஸக்யம், வானரர்களுடைய பராக்ரமம், ஜாம்பவானுடைய கூர்மையான புத்தி வாயு புத்திரனை ஹநுமான் சமுத்திரத்தை தாண்டினது, விச்வகர்மாவின் புத்ரனை நளன் ஸேதுபந்தனம் செய்தது லக்ஷ்மணனுடைய பராக்ரமம் முதலிய உபாயங்கள் பிரயோஜனமுள்ளவைகளாயிருந்தன. இப்பொழுது ஏற்பட்ட விரகத்திலோ வென்றால் அவைகள் ஒன்றும் பயன்படவில்லையே என்ன செய்வேன்.

**ஸீதை:**—முந்திய விரஹத்தில் நான் வெகுமானிக்கப்பட்டேன். இப்பொழுதோவென்றால் எவ்வித ஆசைக்கும் இடமில்லையே.

**ராமன்:**—ஸகீ, வாஸந்தி! ஸீதையைவிட்டுப் பிரிந்திருக்கும் இச்சமயத்தில் நான் என்னுடன் பழகினவர்களைப் பார்ப்பது அவர்களுக்கு இன்னும் அதிக துக்கத்தின் பொருட்டு ஆகிறதேயன்றி வேறல்ல. எவ்வளவு காலந்தான் நான் புலம்புவது போதாமல் உன்னையும் அழும்படி செய்துகொண்டிருப்பேன். ஆகையால் நான் போய்வருகிறேன். என்னை விடைகொடுத்து அனுப்பு.

**ஸீதை:**—(பயம், மோகம், இவைகளுடன் தமஸையைத் தழுவி) ஹா, பகவதீ தமஸே! இதோ என் பிராணநாதன் போகிறாரே; அவருடைய முகாரவிந்தத்தைப் பார்த்துக்கொண்டு கொஞ்சகாலமாவது நான் ஸுகமாயிருந்தேனே. அந்த பாக்யம் கூட எனக்கு இனிமேல் இல்லையே என்ன செய்வேன். [என்று மூர்ச்சையடைகிருள்]

**தமஸை:**—குழந்தாய், ஜானகீ! ஆச்வாஸமடைவாயாக. விதி உனக்கு அநுகூலமாய் முடியும். ஆகையால் சிரஞ்சீவிகளான குசலவர்களுக்கு இன்று ஆயுஷ்ய ஹோமம் செய்யவேண்டிய தினமானதால் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய கங்காதேவியின் சமீபத்திற்கே நாமிருவரும் போவோம் வா.

**ஸீதை:**—பகவதீ! கொஞ்சம் தயவுசெய். என் பிராணநாதனுடைய முகாரவிந்த தரிசனம் எனக்கு மறுபடியும் கிடைப்பது துர்லபம். ஆகையால் ஒரு க்ஷணமாவது என் கண்ணுற அவருடைய திருமுகமண்டலத்தைப் பார்த்து ஆநந்தமடைகிறேன்.

**ராமன்:**—இப்பொழுது எனக்கு அச்வமேதயாக சமயத்தில் பத்நி இருக்கிறாள்.

**ஸீதை:**—[ஆக்ஷேபத்துடன்] ஆர்யபுத்ரா! யாரவள்?

வாஸந்தீ:—தேவா! வேறு கல்யாணம் செய்துகொண்டு விட்டீர்களா என்ன?

ராமன்:—இல்லை. இல்லை. ஸ்வர்ணத்தினால் செய்யப்பட் ஸீதையின் பிரதிமையே.

ஸீதை:—(பெருமூச்சு, கண்ணீர் இவைகளுடன்) ஆர்யபுத்ரா! இப்பொழுதுதான் தாங்கள் என் பிராணநாதன் ஆகி றீர்கள். என்னைத்தாங்கள் யாதொரு காரணமுமில் லாமல் நடுக்காட்டில் விடுத்ததால் எனக்கு உண்டான துக்கம் போய்விட்டது.

ராமன்:—என்னுயிர்க் காதலியை நான் பார்க்காவிட்டா லும் அவளுடைய பிரதிமையையாவது பார்த்து என் துக்கத்தை ஒருவாறு தணித்துக்கொள்ளுகிறேன்.

ஸீதை:—ஆர்யபுத்ரர் என் பிரதிமையை இப்படி வெகுமா னிக்கவும், அதைப் பார்த்து அவர் என்னைவிட்டுப் பிரிந்த துக்கத்தைத் தணித்துக்கொள்ளவும், அவரு க்கு ஒரு ஆசையுண்டுபண்ணவும், அது பரமபாக்கிய சாலியாயிருக்கவேண்டும்.

தமஸை:—[புன்சிரிப்பு, அன்பு, இவைகளுடன் சீதையைத் தழுவி] அடி, குழந்தாய் நீ உன் பிரதிமையை ஸ்துதிப்பதால் உன்னையே ஸ்துதிப்பதுபோல் ஆகிறது.

ஸீதை:—[லஜ்ஜையுடன்] பகவதீ! என்னைப் பரிஹாஸம் பண்ணுகிறாய்போலும்.

வாஸந்தீ:—தேவா, ராமபத்ரா! ஏதோ நாமிருவருக்கும் இப்பொழுது ஏற்பட்ட சந்திப்பு என்பேரில் தங்க ளுக்கிருந்த பரமானுக்ரஹத்தின் பயனே. இப்பொ ழுது தங்களுக்கு எப்படி கார்யஹானி உண்டாகா தோ அப்படிச் செய்யலாம்.

ராமன்:—அப்படியே ஆகட்டும்.

ஸீதை:—வாஸந்தி இப்பொழுது எனக்குப் பிரதிகூலமான காரியத்தை செய்கிறவளாய் விட்டாள். ஏனென்றால் இன்னும் கொஞ்சநேரம் என் பிராணநாதனுடைய திருமுகமண்டலத்தை நான் கண்குளிரப் பார்த்து பரமானந்தத்தை அநுபவிக்காதபடி அவரை அவள் சீக்கிரம் விடைகொடுத்தனுப்புகிறாள்.

தமஸை:—குழந்தாய்! வா, நாம், இருவரும் போவோம்.

ஸீதை:—அப்படியே செய்வோம்.

தமஸை:—அடி என் கண்மணீ! போவதெப்படி. நீயோ, உன் பிராணநாதனுடைய முககமலத்தை ஆசையினால் மலர்ந்து இமை கொட்டாமலிருக்கும் உன் கண்ணால் பார்த்துக்கொண்டு அதிலிருந்து உன் கண்ணை எடுக்கமனமில்லாதவளாய் நின்றுகொண்டு பரமானந்தத்தை அநுபவிக்கிறாய். ஆகையால் நான் இப்பொழுது உன்னைக் கூப்பிடுவது உன் பிராணநாதனுடைய ஸந்நிதானத்தை விட்டு உன்னைப் பிரித்து உனக்கு துக்கத்தை உண்டுபண்ணுகிறதுபோலும்.

ஸீதை:—வெகு புண்யம் செய்தவர்களால் தரிசிக்கத்தகுந்த ஆர்யபுத்ரருடைய சரணகமலங்களுக்கு நமஸ்காரம். [என்று மூர்ச்சையடைகிறாள்.]

தமஸை:—குழந்தாய்! ஆச்வாஸமடைவாயாக.

ஸீதை:—(ஆச்வாஸமடைந்து) எவ்வளவு காலந்தான் மேகாவரணமில்லாமல் பூர்ண சந்திரமண்டலத்தை தரிசிக்க முடியும்.

தமஸை:—அஹோ! இந்த ஸந்தர்ப்பம் அபூர்வமானதாயும் ஆச்சரியத்தை உண்டுபண்ணுகிறதாயுமிருக்கிறது. இதில், ஒரே ஜலமானது நீர்ச்சுழலென்றும், நீர்க்குமிழி என்றும் அலை என்றும் பலவித விகாரங

களை அடைகிறதுபோல் ஒரே கருணை ரஸமானது பற்பல காரணங்களை ஒட்டி தனித்தனியான பற்பல ரஸங்களாக பரிணமிக்கிறது.

ராமன்:—விமானராஜனே! இதோ, இங்கே வா.

(எல்லோரும் எழுந்திருக்கிருர்கள்)

தமஸை, வாஸந்தீ ஆகிய இருவர்களும்—[ஸீதை, ராமன் ஆகிய இருவர்களையும் பார்த்து] பூமிதேவி, கங்காதேவி, எங்களைப்போன்றவர்கள், இக்ஷ்வாகு குலத்திற்கு கூடஸ்தரும், ஸகல வேதங்களையும் வெளியிட்டவருமான ஸூர்யபகவான், அருந்ததியோடு கூடிய வஸிஷ்டமுனிவர் ஆகிய எல்லோரும் உங்களுக்கு மேன்மேலும் மங்களத்தை உண்டுபண்ணுவார்களாக.

[என்று எல்லோரும் போகிருர்கள்]

(இன்னும் வரும்)

கே. எஸ். ஸேதுராமசர்மா.




## நிர்பாக்கிய வத்ஸலன்.

வத்ஸலன் துறவிகளிடத்து விடை பெற்றுக் கொண்டு கடிதத்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டான். வழியில் அஸ்தமிக்கவே இரவைக் கழிப்பதற்காக ஓர் குடிசையில் தங்கினான். அங்கு ஏற்கனவே மூன்று பிச்சைக்காரர்கள் தங்கியிருந்தனர்.

வத்ஸலனைக் கண்டதும் பிச்சைக்காரர்கள் அவனை நன்கு வரவேற்றி அவனுக்கு உணவும் கொடுத்து தங்குவதற்கு இடமும் தந்தார்கள். வத்ஸலனும் வெகுதூரம் பிரயாணஞ்செய்து வந்தபடியால் உண்டவுடன் அயர்ந்து நித்திரை போய்விட்டான். தூக்கத்தில் பின்வருமாறு விசித்திரமாய்க் கனவொன்று கண்டான். அம்மூன்று பிச்சைக்காரக் கிழவர்களும் பிச்சைக்காரர்களாய்த் தோன்றவில்லை. அவர்கள் உயர்ந்த உடை தரித்திருந்தனர். அவ

ர்கள் சிரங்களில் மணிமயமான கிரீடங்கள் துலங்கிக்கொண்டிருந்தன. அவர்கள் தேவதூதர்போல் விளங்கினர். அவர்கள் கையில் புத்தகங்களை வைத்துக்கொண்டு என்னவோ படித்துக்கொண்டிருந்தனர். அவர்களுக்குள் முதலாமவன், "சகோதரர்களே! இச்சிறுவன் எங்கு செல்கிறான்" என்றான். அதற்கு இரண்டாமவன், "இவன் சாளுவபுரியிலுள்ள நவகோடி நாராயணன் வீட்டுக்குச் செல்கிறான். நாராயணன் மனைவிக்கு அவள் கணவனிடமிருந்து ஓர் கடிதம் கொண்டுபோகிறான்" என்று பதிலுரைத்தான்.

முதலாமவன், "கடிதத்தில் வரையப்பட்டுள்ள விஷயம் யாது?" என்றான்.

இரண்டாமவன், "அதில் இவனை கொதிக்கும் ஜலத்தையுடைய கொப்பரையிற் போட்டுவிடுமாறு நாராயணன் மனைவிக்கு உத்தரவு செய்திருக்கிறான்" என்றான்.

மூன்றாமவன், "அந்த உத்தரவை நான் மாற்றிவிடுகிறேன்" என்று சொல்லிவிட்டு, அக்கடிதத்தை வத்ஸலன் மடியிலிருந்து எடுத்து அதை ஒருதரம் ஊதிவிட்டு, இருந்தவிடத்திலேயே அதை மறுபடியும் வைத்துவிட்டான்.

வத்ஸலன் தூக்கம் விழித்து எழுந்தான். தான் கண்டது கனவோ நனவோ என்றையுற்றான். கடைசியில் கடிதம் இருக்கிறதாவென்று மடியைத் தடவிப்பார்த்தான். அது அங்கேயே இருந்தது. தான் கண்டது கனவெனவே நிச்சயித்துக்கொண்டு எழுந்து தன் வழியே சென்றான்.

வத்ஸலன் சாளுவபுரியை யடைந்து நாராயணன் மனைவியிடத்தில் நிருபத்தைக் கொடுத்தான். அவள் அதைப் பிரித்துப்பார்க்கவே அதில் பின்வருமாறு வரையப்பெற்றிருந்தது.

"என் அன்பார்ந்த மனைவிக்கு: நினக்கு ஸர்வ மங்களமுண்டாகுக. இக்கடிதம் கொண்டுவருபவன் அங்கு வந்து சேர்ந்தவுடன் ஒரு பெரிய விருந்து தயார்செய். பந்துக்களையும் புரோகிதர்களையும் வரவழை. அவர்கள் வந்து கூடினவுடன் நமது மகளான அபிராமியை இவ்வாலிபனுக்குக் கன்னிகாதானஞ்செய்து கொடு. தவறாமற் செய். நான் வருமளவும் காத்திருக்கவேண்டாம். ஏனெனில் இச்சிறுவனே நமது ஆஸ்தியைப் பெறுபவன். இங்ஙனம்—

உன் பிரியமுள்ள

நாராயணன்.

கடிதத்தைப்படித்து முடிந்தவுடன் நாராயணன் மனைவி அபிராமியை ஆடையாபரணாதிகளாற் செவ்வனே சிங்காரித்தாள். உடனே பந்துக்களையும் புரோகிதர்களையும் வரவழைத்து அக்கினி ஸாக்ஷியாக அபிராமியை வத்ஸலனுக்குப் பாணிக்கிரகணஞ்செய்து கொடுத்தாள். அன்று முதல் அபிராமியும் வத்ஸலனும், ரதியும் மன்மதனும்போல் இன்புற்று வாழ்ந்து வந்தனர்.

ஒருநாள் நவகோடி நாராயணன் வியாபாரத்தினின்றும் திரும்பி வீட்டுக்கு வருகிறானென்ற சங்கதி எட்டிற்று. உடனே அவன் மனைவி தன் மகளையும் மருமகனையும் இட்டுக்கொண்டு, நாராயணனை எதிர் கொள்ளுமாறு துறைமுகஞ் சென்றனர். நாராயணன் கப்பலைவிட்டுக் கீழேயிறங்கியதும் தன் மகளுடன் கையைக்கோர்த்துக் கொண்டு வத்ஸலன் நிற்பதைக் கண்டான். உடனே அவனுக்கு மஹத்தான கோபம் வந்துவிட்டது. தன் மனைவியையொருபுறத்தே யழைத்து தன்னுடைய உத்தரவுக்கு விரோதம் செய்யக் காரணமென்னவென்று வினவினான்.

அவளும் கணவனுடைய உத்திரவின்படியேதான் நட

ந்ததாகச் சொல்லி அவன் எழுதியனுப்பிய நிரூபத்தையும் எடுத்து நீட்டினாள். நாராயணன் பார்த்தான். எழுத்து தன்னுடையதுபோலவேயிருந்தது. கையெழுத்தும் தன்னதாகவே இருந்தது. என்ன செய்வான் பாபம்! நினைக்க நினைக்க மனம் நெருப்பாயெரிந்தது. தன் பெண்ணுடைய ஸௌகத்தைக்கூடக் கவனியாமல் எவ்விதமாயாவது வத்ஸலனை தொலைத்துவிட்டுத்தான் மறுவேலை பார்க்கிறதென்று மனத்துள் சபதம் கூறிக்கொண்டான். இவ்வித எண்ணத்துடன் இதயத்தில் விஷம் நிரம்பியிருக்க, தேனொழுகும் வார்த்தையால் வத்ஸலனைப் பரிபாலித்து வந்தான்.

இப்படியிருந்து வருங்காலையில் ஒரு நாள் நாராயணன் தன் மருமகனையழைத்து, "பிள்ளாய் வத்ஸலா! எனக்கோ வயதாய்விட்டது. பாலியத்தில் செய்தது போல் இனி என்னால் ஓடியாடி வரமுடியாது. எனக்கு நிலுவையும் வெகுவாக பாக்கி நிற்கிறது. இனிமேல் நீ தான் போய் அவைகளை வசூலித்து வரவேண்டும். ஆதலால் நாளையே பயணப்பட்டு, மகமேரு பர்வதத்துக்கு வடக்கிலுள்ள மந்தலபட்டணஞ் சென்று, அந்நகரையாண்டுவரும் வல்லாளராஜனையடைந்து, அவன் எனக்குக் கொடுக்கவேண்டிய கடனையும், அதற்கு மூன்றரைப்பணச் சொச்சம் வீதம் எண்பத்தேழே முக்காலே மூணுவீசம் வருஷத்துக்கு வட்டியையும் வசூலித்து வருவதுந்தவிர, மூன்று வருஷங்களுக்கு முன் வியாபாரநிமித்தம் சென்ற எனது பனிரண்டு கப்பல்கள் அவன் துரைமுகத்தில் காணாமற்போனதற்குச் சமாதானமும் கேட்டுவா" என்று அனுப்பினான்.

வத்ஸலன் மறுநாள் உதயத்தில் எழுந்தான். பிரயாணத்துக்குச் சித்தஞ்செய்தான். மனைவியிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு, அசுவாரூடனாய்ப் புறப்பட்டான்.

குதிரையும் களைப்பின்றி நடந்து சென்றது. வழி தூரமோ, கிட்டவோ! "காடும் மலையும் கனவேக வாறுகளும், நாடு . . . லபொழிலும் நாளிரண்டிலே கடந்து" வந்தான் வல்லாள ராஜ்யத்துக்கு வஞ்சனையில்லா வத்ஸலன். ராஜ்யத்தின் எல்லையில் ஓர் நதி ஓடிக்கொண்டிருந்தது. அதில் ஒரு படவோட்டி படகுகளை ஓட்டிக்கொண்டு, ஜனங்களை ஓர் கரையிலிருந்து மற்றோர் கரைக்கு இட்டுச்சென்று கொண்டிருந்தான். வத்ஸலன் படகேறி அக்கரை சென்றவுடன் படகோட்டி, "யஜமானே! உங்கள் வரவு நல்ல வரவாகுக. நீங்கள் எங்கு செல்கிறீர்களோ?" என்று கேட்டான். அதற்கு வத்ஸலன், "பெரியவரே! நான் மந்தலபட்டணஞ்சென்று, அங்கு ஆண்டுவரும் வல்லாள ராஜனிடமிருந்து என் மாமனுருக்குச்சேரவேண்டிய பணத்தை வசூலிக்கச் செல்கிறேன்" என்றான்.

படவோட்டி :—"ஆனால் எனக்கோர் சமாசாரம் தெரிந்து கொண்டுவரமுடியுமா?"

வத்ஸலன் :—"கூடுமானால் தெரிந்துகொண்டுவருகிறேன்."

படவோட்டி :—"நான் இந்நதியில் வருவார் போவாருக்குப் படகு விட்டுக்கொண்டிருக்கிறேன். முப்பது வருஷங்களாயிற்று. அவ்வாறு அவன் சாபமிட்டு விட்டான். இன்னும் எவ்வளவு காலம் நான் படவு விட்டுக்கொண்டிருக்க வேண்டுமென்று வல்லாளராஜனைக்கேட்டுத்தெரிந்துவாரும்" என்றான்.

வத்ஸலனும் "அவ்விதமே" என்று சொல்லிவிட்டுத் தன் வழியே சென்றான். இடையில் ஒரு கடல் தென்பட்டது. அதில் ஒரு பெரிய திமிங்கிலம் அடைபட்டுக்கிடந்தது. அதன் வாயில் ஒரு அடர்த்தியான காடு வளர்ந்திருந்தது. அதன் முதுகில் ஒரு கிராமம் உண்டாகி, அதி

லுள்ள ஜனங்கள் அதன் உடம்பை உழுது தொந்தரவு செய்துகொண்டிருந்தனர். சிறு பிள்ளைகள் அதன் கண்களுக்கிடையிலுள்ள பிரதேசத்தை விளையாட்டு ஸ்தலமாகக் கொண்டிருந்தனர். வந்தவத்ஸலனும் தன் குதிரையின் குளம்புகள் அதன் முதுகிற்பதிய அதைக்கடந்து சென்றான். அவன் அக்கரை சேர்த்தவுடன் திமிங்கிலம் தன்னுடைய பிரம்மாண்டமான வாயைத்திறந்து, தேம்பித்தேம்பியழுதுகொண்டு, "சிறுவனே உன் வரவு நல்வரவாகுக. நீ எங்கு செல்கிறாயோ?" என்று கேட்டது. அதற்கு வத்ஸலன் "வல்லாளராஜனிடமிருந்து என் மாமனுக்குச் சேரவேண்டிய பணத்தை வசூலிக்கச் செல்கிறேன்" என்று விடையளித்தான்.

திமிங்கிலம்:—"ஆனால் எனக்கு ஒரு உபகாரம் செய்வாயா?" என்றது.

வத்ஸலன்:—"கூடுமானால் செய்கிறேன்" என்று விடையளித்தான்.

திமிங்கிலம்:—"நீ வல்லாளராஜனைக் காணுவையேல், நான் சென்ற மூன்றுவருஷகாலமாய் இவ்விடத்தில் அடைபட்டுக்கிடக்கிறேன். ஜனங்களும் என் முதுகின்மேல் குடியேறி, எனக்குப் பொறுக்கமுடியாத ஹிம்ஸை கொடுக்கிறார்கள். இந்த உபத்திரவத்தை இன்னம் நான் எவ்வளவு காலம் அநுபவிக்கவேண்டும் என்று தெரிந்துவரவேண்டும்" என்றது.

வத்ஸலன் "அவ்விதமே" என்று விடையளித்துவிட்டுத்தன் வழியே செல்லுகையில் ஒரு பெரிய மைதானத்தைக் கண்டான். அதில் வெண்சுதையாற் சமைக்கப்பட்டுள்ள ஒரு பெரும் அரண்மனையிருந்தது. அதன் வாசற்படியில் காவற்காரர்கள் ஒருவராவது இல்லை. உடனே

தன் குதிரையைப் புற்றரையில் மேயச்செய்துவிட்டு அரண்மனைக்குள் நுழைந்தான்.

மாளிகைக்குள் சப்தமின்மை குடிகொண்டிருந்தது. அரையரையாய்ப் புகுந்துபார்த்தான். ஒரு அரையிலாவது ஈ காக்கை கிடையாது. அரையோ ஒன்றைவிட மற்றொன்று வெகு ரம்யமாயிருந்தது. கடைசியில் ஒரு அரையில் அழகே உருவெடுத்து வந்ததுபோன்றதோர் பாலவனிதை அழுதகண்ணுஞ் சிந்தியமூக்குமாய் நாற்காலியில் வீற்றிருக்கக் கண்டான்

"இளம்பெண்ணே! உனக்கு மங்களமுண்டாகுக" என்றான் வத்ஸலன்.

"உனக்கும் அவ்விதமே!" என்று மறுமொழி கூறிவிட்டு, அத்தருணி "ஐயோ பாவம் நீ என்ன மனிதன்! இந்த அபாயகரமான அரண்மனைக்குள் ஏன் நுழைந்தாய்? மனிதர்களை விழுங்கும் வல்லாளராஜனுடைய அரண்மனையிதுவென்றறியாயோ நீ" என்றாள்.

வத்ஸலன் தான் வந்தகாரியத்தைச் சொன்னான். அன்னது கேட்டாண்மைமிகும் அவ்வனிதை, "நல்லவேளையாய் என்னை முதலில் பார்த்தாயே! அதுவே உனக்கு க்ஷேமகாரியம். உன் மாமனார் உன்னைப் பணம் வசூலிக்க அனுப்பவில்லை. இவ்விராக்ஷஸனுக்கு இரையாக அனுப்பியிருக்கிறான். என்னென்றாலும் உன்னை நான் காப்பாற்றுகிறேன். நல்லது எந்தவழியாய் வந்தாய்? வழியிற்கண்ட அதிசயங்கள் யாவை?" என்றாள்.

வத்ஸலன் வழியில் தான் கண்ட நாவிகனுடையவும், திமிங்கிலத்தினுடையவும் குறைகளைச் சொல்லி அதன் பரிகாரத்தையும் கேட்டான். இவர்கள் இவ்விதம் சம்பாஷித்துக்கொண்டிருக்கையில் அவ்வரண்மனை கிடுகிடுத்தது.

பூகம்பம் உண்டாகி, பூமியே அசைந்ததுபோல் தோன்றிற்று. உடனே அம்மாது, "என் கணவனுன ராக்ஷஸன் வந்துவிட்டான். நீ இப்பெட்டிக்குள் நுழைந்துகொள். ராக்ஷஸன் கூறும் ஒவ்வொரு மொழியையும் கவனமாய்க் கேட்டுவா" என்று சொல்லிவிட்டு ஒரு பெட்டியைக் காட்டினுள்.

வத்ஸலன் பெட்டிக்குள் புகுந்ததுதான் தாமதம். உடனே ராக்ஷஸன் உள் நுழைந்தான். அவன் தலை கரடியைப் போன்றிருந்தது. ஆனல் கொம்பு முளைத்திருந்தது. அவன் கோரப்பல்லைப் பார்த்தால் கர்ப்பம் கலங்கும். அவன் மதகுபோன்ற தன் வாயைத்திறந்து கோடியிடி இடித்தது போன்ற சப்தத்துடன் மனைவியை நோக்கி, "இங்கென்ன மனுஷ்யவாஸனை வீசுகின்றதே! இங்கு யார் வந்தது?" என்று வினவினன். அதற்கு அவள் "நான்தான் ஒரு மனுஷி. இருக்கிறேனே இல்லையோ! அந்த வாஸனைதான். வேணுமானல் என்னையும் எடுத்து விழுங்கிவிடு. விசாரமற்றிருக்கலாம்" என்றுள். அதுகேட்ட ராக்ஷஸன் எருமை மாடுபோல் பல்லையிளித்துக்கொண்டு "என் கண்மணியே! காதலியே! நாயகியே! உன்னையா எடுத்து விழுங்குவது? நான் மாட்டவே மாட்டேன். கிடக்கிறது, எனக்குத் தூக்கம் வருகிறது. என் காலைக் கொஞ்சம் பிடி" என்று சொல்லிவிட்டு அடியற்ற மரம்போல் படுக்கையில் விழுந்தான்.

அவளும் அவ்விதமே செய்தாள். பிறகு கொஞ்சநேரங்கழித்து, "நாதா! என்ன ஆச்சரியமான கனவு! நான் எங்கேயோ போவதுபோலிருக்கிறது. அங்கு ஒரு கடலில் பெரிய திமிங்கிலமொன்று அடைபட்டுக்கிடக்கிறது. அதன் முதுகில் ஜனங்கள் குடியேறிக்கொண்டு அதற்கு வெகுவாக ஹிம்ஸை செய்துவருகிறுர்கள். அத்திமிங்கிலம் என்

னைப் பார்த்து, 'இவ்விதம் கஷ்டப்படுகிற எனக்கு விமோசனம் எப்பொழுது' என்றது. அதற்கு எப்பொழுது வெடிவுகாலம் வரும்" என்றாள்.

ராக்ஷஸன் அரைத்தூக்கத்துடன் "மூன்றுவருஷங்களுக்குமுன் என்னுடைய உத்திரவில்லாமல் விழுங்கிய பணிரண்டு கப்பல்களையும் அது கக்கிவிடுமேயானால் அதற்கு விமோசனம் பிறக்கும். பிறகு அது இஷ்டப்பட்ட இடத்துக்குப் போகலாம்" என்றான்.

அம்மாது பின்னுங்கூறுவாள், "நாதா! என் ஸ்வப்னத்தில் இன்னம் எங்கேயோ செல்கிறேன. ஒரு ஆற்றைக் கடக்கவேண்டியிருந்தது. அதில் ஒரு படவோட்டியிருந்தான். அவன் என்னைப் பார்த்து, 'நான் வல்லாளராஜன் சாபத்தால் முப்பது வருஷமாய் இந்நதியில் படவு விட்டுக் கொண்டிருக்கிறேன். எனக்கு வெடிவுகாலம் எப்பொழுது' என்றான். அவனுக்கு எப்பொழுது கதிமோக்ஷம் பிறக்கும்" என்றாள்.

ராக்ஷஸனுக்கு முக்கால்தூக்கம். "அப்படவோட்டி படகில் ஏறும் எவனையாவது படவில் வைத்துவிட்டுத் தான் கரையில் குதித்து ஓடிவிடவேண்டும். பிறகு வந்தவன் தண்டுவலித்துக்கொண்டிருப்பான்" என்று சொல்லிவிட்டுப் பெருந்தூக்கம் தூங்கினன். அவன் இட்ட குறட்டையினல் பதினன்கு உலகமும் நடுங்கிற்று.

உடனே அப்பெண்மணி வத்ஸலனைப் பெட்டியினின்றும் வெளியே வரச்செய்து, "உன் ஸந்தேகங்களைத் தீர்த்துக்கொண்டாயல்லவா! சுகமே போய் வரலாம்" என்றாள். வத்ஸலனும் அவளுக்கு வெகுவாக வந்தனமளித்துவிட்டு, அவளிடம் விடைபெற்றுக்கொண்

டு புறப்பட்டான். வழியில் திமிங்கலம் தென்பட்டது. அது, "என் குறைக்குப் பரிகாரம் கிடைத்ததா?" என்றது. அதற்கு அவன் "கிடைத்தது சொல்கிறேன்" என்று கூறிவிட்டு, அதன் முதுகின்மீது உண்டான கிராமத்துக்குச் சென்று, அங்கிருப்பவர்களை நோக்கி "கிராமவாஸிகளே! நீங்கள் இவ்விடத்தைவிட்டு சீக்கிரம் சென்றுவிடுங்கள். ஏனெனில் இப்பூமியை சமுத்திரம் கவரப்போகின்றது" என்று எச்சரிக்கை செய்தான். அவர்கள் மனைவி குழந்தைகளுடனும், தட்டுமுட்டு ஸாமான்களுடனும் அக்கிராமத்தை விட்டு வெளிக்கிளம்பும்வரை காத்திருந்து, பிறகு திமிங்கலத்தை நோக்கி, "நீ மூன்று வருஷங்களுக்குமுன் வல்லாள ராஜனுடைய உத்திரவில்லாமல் விழுங்கிய பன்னிரண்டு கப்பல்களையும் கக்கிவிடுவையேல் உன் சாபம் தீரும்" என்று சொல்லிவிட்டு, அதன் முதுகினின்றும் ஒரே தாவலாய்த்தாவித் தரையிற் குதித்தான்.

உடனே பெரிய மலை புரளுவதுபோன்ற சப்தம் உண்டாயிற்று. சற்று நேரத்துக்கெல்லாம் திமிங்கலத்தின் வாயினின்றும் ஒன்றன்பின்னொன்றாய் பனிரண்டு கப்பல்கள் வெளிக்கிளம்பின. ஒவ்வொரு கப்பலிலுமுள்ள ஜனங்கள் வெகுநாளாய்ப் பார்த்திராத சூரியவெளிச்சத்தைக் கண்டவுடன் சந்தோஷத்தால் கூத்தாடினார்கள்.

தன் வயற்றில் அடங்கியிருந்த கப்பல்கள் வெளிக்கிளம்பினதும், திமிங்கலத்துக்கு தலையிலிருந்து ஒரு பெரிய சுமை இறங்கியதுபோலிருந்தது. அதற்குண்டான ஆனந்தத்துக்கு அளவேயில்லை. அது உடனே வத்ஸலனை நோக்கி, "ஐயா! நீர் செய்த பேருபகாரத்துக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன். உங்களுக்கு முத்துவேணுமா? அல்லது இரத்தினங்கள் வேணுமா"? என்

றது. அதற்கு வத்ஸலன் "இஷ்டம்போல் செய்" என்னலும் அது தண்ணீரில் மூழ்கி, ஒரு அழகிய சிறு பெட்டியை வாயில் கவ்விக்கொண்டு வெளியேவந்தது. அந்தப்பெட்டியிலுள்ள இரத்தினங்களின் ஒளியால் மூவுலகங்களும் பிரகாசித்தன. அவைகளின் மதிப்போ அளவிடக்கூடாததாயிருந்தது.

வத்ஸலன் கப்பல் தலைவர்களைக்கூப்பிட்டு, "இக்கப்பல்கள் யாருடையது? எங்கு செல்கின்றன?" என்று வினவினன். அதற்கு அவர்கள் "இக்கப்பல்கள் நவகோடிநாராயணருடையது. மூன்று வருஷங்களாக நாங்கள் இத்திமிங்கலத்தின் வயற்றில் அடைபட்டுக்கிடந்தோம்" என்றார்கள். அதுகேட்ட வத்ஸலன் "நான் அவருடைய மருமகன். இம்மணிப்பெட்டியை அவரிடத்து எடுத்துச் செல்லுங்கள்" என்று சொல்லி, அவர்கள் சமுத்திரத்தினூடேபோக, தான் கரைவழியே சென்றான்.

அவர்கள் அவனைக்கப்பலில் வரும்படிவேண்டினர்கள். அதற்கு அவன் தான் குதிரைசவாரி வருவதாயும், நதியின் முகப்பில் தனக்காக அவர்கள் காத்திருக்கவேண்டுமென்றும் உத்தரவளித்துவிட்டுப் புறப்பட்டான். வழியில் ஆறும் குறுக்கிட்டது. படவோட்டியும் இவனைக்கண்டு, "என் ஸமாசாரம் முடிந்ததா?" என்றான். அதற்கு வத்ஸலன் "நான் அக்கரை சென்றவுடன் சொல்கிறேன்." என்று சொல்லிவிட்டு, அக்கரை சேர்ந்தவுடன்," ஏ படகுகாரனே! யாராவது முதன்முதலில் வருகிற மனிதனைப் படகில் ஏற்றிவிட்டு நீ கரையில் குதித்து ஓடிவிடுவையேல் உனக்காக வந்தவன் தண்டுவலித்துக் கொண்டிருப்பான். உன் சாபமும் நீங்கும்" என்று கூறிவிட்டு, குதிரையின்மீது ஏறிக்கொண்டு நதி முகப்புக்கு

வந்து சேர்ந்தான். அங்கு கப்பல்களும் தயாராயிருந்தன. அதன்மேல் ஏறிக்கொண்டு சாளுவபுரியை நோக்கி வந்தான்.

அவன் நகரையடைந்ததும் தூதுவர்கள் ஓடோடியுஞ் சென்று நாராயணனிடம் 'காணாமற்போன பனிரண்டு கப்பல்களுடனும், விலையுயர்ந்த மணிப்பேழையுடனும் வத்ஸலன் திரும்பிவருகிறான்' என்று புகன்றார்கள். அதைக் கேட்ட நாராயணனுக்குச் செய்வது இன்னதெனப் புலப்படவில்லை. பிரமாதகோபம் உண்டாயிற்று. என்னென்றாலும் வெளிக்கு ஸந்தோஷப்பட்டவன்போல் பாவித்து, மருமகனை நன்குவரவேற்றி, விருந்துகளும் செய்தான்.

மேற்கூறிய சம்பவங்கள் நிகழ்ந்து கொஞ்சநாட்கெல்லாம் நவகோடிநாராயணன் பின்வருமாறு சிந்திக்கலானான். "மறுபடியும் அவனை வல்லாளராஜனிடம் அனுப்புகிறேன். ஆனால் இந்தத்தடவையும் அவன் தப்பிக்காமல் வரும்பொருட்டு நானே முன்னாடிபோய் அதற்குத் தகுந்த ஏற்பாடுகளைச்செய்து வருகிறேன்" என்பதாம்.

நாராயணன் யாத்திரைக்குப் புறப்பட்டான். அவனுடன்கூட அநேக பரிவாரங்களும் புறப்பட்டன. வழியில் ஆறும் குறுக்கிட்டது. படவோட்டியும் தனக்கு நல்லகாலம் பிறந்ததென்றெண்ணிக்கொண்டு, நாராயணன் படவில் ஏறினவுடன், தான் ஓரே தாவலாய்த் தாவிக்கரையிற் குதித்து, வீட்டுக்கு விரைந்தோடினான். நவகோடி நாராயணன் இன்றைக்கும் படகு விட்டுக்கொண்டிருக்கிறான். வேணுமானால் அப்படியே புத்தகத்தைக் கீழே வைத்துவிட்டு, ஆறுமாதத்துக்குக் காணும்படியாய் கட்டுசாதமும் கட்டிக்கொண்டு புறப்படுங்கள். நிச்சயமாய் நாராயணனைக்காணுவீர். ஆனால் அயர்ந்து மறந்துபோய்

படவில் மட்டும் ஏறிவிடாதீர்கள்! சொன்னேன்! சொன்னேன் !! சொன்னேன் !!!

சாளுவபுரியில் வத்ஸலனும் அபிராமியும், வஸிஷ்டனும் அருந்ததியும்போலவும், தேவேந்திரனும் இந்திராணியும்போலவும், சூரியனும் சுவர்ச்சலையும்போலவும் ஒருமனப்பட்டு, நீடுழிகாலம் இன்புற்று வாழ்ந்து வந்தனர்.

ஆகலால் நேயர்களே! அன்றெழுதியதை அழித்தெழுத அரி, அரன், அயனாலுமாகாது.

G. ரகுநாதாசாரி.




ஒரு நாள் காலைவேளையில் ராமஸாமி படுக்கையை விட்டு எழுந்திருந்ததும் வீதியில் பார்த்தான். முந்திய ராத்திரி நல்ல மழைபெய்திருந்தது. அதைக்கண்டதும் "நேற்று ராத்திரி மழைபெய்திருக்கிறாப்போலிருக்கிறது" என்றான். கிட்டவிருந்த அவன் ஸம்ஸாரம்—"ஆம் நேத்து ராத்திரி அஸாத்தியமான மழைபெய்தது" என்றாள். உடனே ராமஸாமி தன் ஸம்ஸாரத்தைப்பார்த்து "அப்படியானால் நீ ஏன் என்னை எழுப்பவில்லை. மழைபெய்தால் எனக்கு தூக்கம் வராதென்பது உனக்கு இன்னம் தெரியவில்லையே" என்றான்.

ஒரு வைத்தியர் பலபேர்களுக்கு முன்பாக தனது மருந்துகளைப்பற்றிப் பலவாறாகத் தோத்திரம் செய்துகொண்டிருந்தார். "இந்த மருந்துகளில் எவ்வளவோ ஸீஸாக்கள் வெளியே கொடுத்திருக்கிறேன். ஒரு கேஸிலாவது புகார் இல்லை. இதனால் என்ன தெரியவருகிறது" என்று கேட்டார். இதைக்கேட்ட ஒருவன் "இறந்தவர்கள் புகார் சொல்வதில்லையென்பது நன்றாகத் தெரிகிறது" என்றான்.

**தாயார்:**—ஏண்டா கிட்டு, உனக்கு ஒரு கிச்சிலிப்பழமும் உன் தம்பி சுப்புவுக்கு ஒரு கிச்சிலிப்பழமும் கொடுத்து அதை சாப்பிட்டாகும்வரையில் தின்கக்கூடாது என்று சொல்லியிருந்தேனே. அவரவர்கள் பழத்தைத்தின்கிறதில்லையென்று நீங்களும் சொன்னீர்களே. இப்பொழுது தின்றுவிட்டீர்களே. என்னிடம் பொய்தானே சொன்னீர்கள்.

**கிட்டு:**—இல்லை அம்மா. பொய் சொல்லவில்லை. நான் சுப்புவின் பழத்தையும் சுப்பு என் பழத்தையுமாகத் தின்றோம்.

**வாத்தியார்:**—கம்பளிப்பூச்சியை வர்ணிப்பதற்கு யாரால் முடியும்?

**பையன்:**—என்னால் முடியும்.

**வாத்தியார்:**—சொல் பார்ப்போம்.

**பையன்:**—கம்பளிப்பூச்சியானது, மெத்தை தைத்த நாற்காலியைப்போல் மெத்தை தைத்த புழு.

**பார்க்கவந்தவன்:**—அப்பா, உன் தாயார் இப்பொழுதுதான் அடுத்தவீட்டுக்குப்போவதைப் பார்த்தேன். அவள் எப்பொழுது திரும்பி வருவாள் என்று உனக்குத்தெரியுமா?

**பையன்:**—தெரியும். நீ போனதும் தான் திரும்பிவருவதாகச் சொல்லிவிட்டுத்தான் போனாள்.

**வண்டியில்போகும் பிரயாணி:**—அடே வண்டிக்காரா. ரயிலுக்கு ரொம்பவும் நாழியாய்விட்டதே. இதைவிட வேகமாக உன்னால் போகமுடியாதா?

**வண்டிக்காரன்:**—நான் இன்னும் எவ்வளவோ வேகமாகப் போவேன். ஆனால் இந்த வண்டியையும் குதிரையையும் யார் பார்த்துக்கொள்வார்கள்?

**தாயார்:**—(பையனைப்பார்த்து) அப்பா எல்லாக்காரியங்களையும் உடனுக்குடனே செய்துவிடுவதே எப்பொழுதும் மேலானது. இன்று செய்யக்கூடிய காரியத்தை நாளைக்காகட்டுமென்று எப்பொழுதும் தள்ளிவைக்காதே.

**பையன்:**—அம்மா, அப்படியானால் நாளைக்கு சாப்பிடலாமென்று பாக்கி வைத்திருக்கும் மிட்டாயையும் இன்றே கொடுத்துவிடு. இப்பொழுதே சாப்பிட்டுவிடுகிறேன்.

ஒரு தகப்பன் தன் மகன் பலவிதமாய் அந்தர்பல்டியடிப்பதையும், வளைவதையும், பூமியில் புரள்வதையும் கண்டு "ஏனடா அப்பா இப்படி செய்கிறாய்" என்று அவனைக் கேட்டான். அதற்கவன் "அப்பா, நான் இப்பொழுதுதான் மருந்து சாப்பிட்டேன். அம்மருந்தை உபயோகப்படுத்தும்பொழுது குலுக்கச் சொல்லி நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அவ்வாறு செய்ய இந்தத் தடவை மறந்துவிட்டேன். ஆதலால் இப்பொழுதாவது வயற்றுக்குள்ளிருக்கும் மருந்தை நன்றாய் குலுக்கிவிடலாமென்று இவ்வாறு செய்கிறேன்" என்றான்.

**தகப்பனார்:**—அடே பையா, நான் உன்னை தினம் ஏதாவதொரு பரோபகாரமான நல்ல செய்கை செய்யவேண்டுமென்று சொல்லியிருந்தேனே. அந்தப்படி நீ இன்று என்ன பரோபகாரம் செய்தாய்?

பையன்:—அப்பா, இன்று நாலும் என் தங்கையும் எண்ணெய் குடிக்கவேணுமென்று அம்மா சொன்னாள். ஆனால் எண்ணெய் இருந்தது ஒருவருக்குத்தான் காணும்போலிருந்தது. ஆதலால் அதை என் தங்கைக்குக் கொடுத்துவிட்டு நான் சும்மாவிருந்துவிட்டேன்.

கிறிஸ்தவப்பையன்:—அம்மா, பாதிரிகள் ஸ்வர்க்கத்திற்குப் போகிறார்களா?

தாயார்:—அதற்குத் தடையென்ன? ஏன் உனக்கு இதில் ஸந்தேகம்?

பையன்:—மனிதர்களைத் தின்கும் கானிபல் என்று சொல்லப்படும் ஜாதியார் ஒருவர் ஆப்பிரிக்கா தேசத்திலிருக்கிறார்களே. அவர்கள் ஸ்வர்க்கத்திற்குப் போகிறார்களா?

தாயார்:—ஒருநாளுமில்லை.

பையன்:—அவர்களுளொருவன் ஒரு பாதிரியாரைத் தின்றுவிட்டால் அப்பொழுது அவன் ஸ்வர்க்கத்திற்குத் தானே போகவேண்டும்.

ராமன்:—கிருஷ்ணன் கண்கள் ரொம்ப தீக்ஷண்யமாயுள்ளன. அவன் ரொம்ப தூரதிருஷ்டிக்காரன்போல் தோணுகிறது.

லக்ஷ்மனன்:—ஆமாம் நான் அவனிடம் 5 ரூபாய் கடன் வாங்கினது முதல் நான் அவனுக்கு அரைமைல் தூரத்துக்கப்பால் வரும்போதே கண்டுபிடித்துக் கூப்பிடுகிறான்.

**ஜட்ஜ்:**—"ஏனடா நீ இந்தத் திருட்டை வேறொருவருடைய உதவியுமில்லாமல் ஒருவனாகவேயா செய்தாய்?

**திருடன்:**—ஆம் ஐயா வேறு ஒருவனை இம்மாதிரியான காரியங்களில் சேர்த்துக்கொண்டால் அவன் யோக்கியனாயிருப்பான் என்று எப்படி நம்புகிறது.

ஒருவன் ஒருநாள் ஒருகால் நிஜாரை போஸ்ட்மாஸ்டரிடம் எடுத்துக் கொண்டுபோய் அதை அடுத்த ஊரிலுள்ள தன் சினேகிதனுக்கு அனுப்பவேண்டுமாய்க் கேட்டுக் கொண்டான். உடனே போஸ்ட்மாஸ்டர் தபால் ஆபீஸ் ரூல் புஸ்தகத்தை எடுத்து அவனுக்கு காண்பித்து துணிகளை உதிரியாக அனுப்பமுடியாது என்று சொன்னான். வந்தவன் உடனே அந்த ரூல் புஸ்தகத்திலேயே புக்போஸ்ட் என்னும் தலைப்பை எடுத்துக் காண்பிவித்து அதில் புக்போஸ்டில் ஒரு ஸாமனை அனுப்பவேண்டுமானால் அதில் இரண்டு பக்கமும் திறந்திருக்கவேண்டும் என்பதைக் காட்டி "ஏன் ஐயா, இந்த ரூல்படிக்கு நீர் இந்த சாமானை அனுப்பிக்கப்படாது. நிஜாரானது இரண்டு பக்கமும் திறந்த சாமான் அல்லவென்றால் வேறு எது அத்தகையதாகும்.

**புதிதாகக் கலியாணமானவன்:**—என் கண்மணியே, நாம் மிகவும் செட்டாகக் குடித்தனம் செய்து பணம் மீர்க்கவேண்டும்.

**மனைவி:**—ஆம் எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. எந்த அயிட்டத்தை குறைக்கலாம் சொல்லுங்கள்.

**கணவன்:**—என் உன் தாயார் இருக்கிறாளே.

கிருஷ்ணன்:—(சாப்பிடும்போது) "நல்லது நான் இப்பொழுது ஒரு ஜாலவித்தை செய்யப்போகிறேன் ஆகையால் மூன்று ஆப்பிள்களும், மூன்றுபேருடைய தலைப்பாவையும் கொடுங்கள்."

அப்படியே கொடுக்கப்பட்ட பிறகு அம்மூன்று பழங்களையும் சாப்பிட ஆரம்பித்தான்.

"சரி இப்பொழுது யாருடைய தலைப்பாகையின் கீழ் அந்தப் பழங்கள் இருக்கவேண்டும்!" அப்படியே ஓர் தலைப்பாகை குறிப்பிடப்பட்ட பிறகு அதைத் தூக்கி தன் தலைமேல் வைத்துக்கொண்டான்.

ராமன்:—"அதோ தெரிகிறதே அது நல்ல சின்ன அழகான வீடு. அதில் யார் வசிக்கிறார்கள்."

கிருஷ்ணன்:—"அதுதான் முதலியார் வீடு. அவருக்கு ஒரு மாமா இருந்தார். அவர் மிகவும் பணக்காரர். அவர் தன் சொத்தையெல்லாம் மருமகனுக்கு வைத்துவிட்டு இறந்துவிட்டார்."

ராமன்:—"ஆகா அதோ முதலியார் வீட்டைவிட பதின்மடங்கு பெரிதாய் அரண்மனைபோல் தோற்றும் அந்த மாளிகை யாருடையதோ?"

கிருஷ்ணன்:—"அது முதலியாருடைய மாமாவின் விவகாரங்களை தீர்த்த வக்கீலுடையது."

மாஜிஸ்ட்ரேட்:—"நல்லது நீ இனிமேல் நல்ல சாகவாசத்தில் பழகிப் பார்க்கவேண்டும், இனிமேல் கெட்டவர்களோடு பழகாதே."

கைதி:—"அப்படியானால் நீங்கள் இனிமேல் என்னை இங்கு பார்க்கமுடியாது."



# பத்திராதிபர் குறிப்புகள்

இத்தலைப்பின்கீழ் பிரதிஸஞ்சிகையிலும் முக்கியமான வர்த்தமானங்களைப்பற்றி சிறு குறிப்புகள் வரையப்படும்.

பல காரணங்களால் இந்த ஸஞ்சிகை வெளியாவதற்கு மிகவும் தாமதமாகிவிட்டது. அக்காரணங்களை விரிப்பதைக் காட்டிலும் இதற்கடுத்த பாக்கியாயுள்ள ஸஞ்சிகைகளை சீக்கிரத்திலேயே அடுத்தடுத்து வெளியாக்குவது மேலெனக் கருதி இங்கு வேறொன்றும் வரையாது விடுத்தனம்.

அடுத்த ஸஞ்சிகை ஸரஸ்வதி பூஜை ஸஞ்சிகையாதலால் அதில் அநேக அபூர்வ விஷயங்களடங்கி 200 பக்கங்களுள்ளதாகவிருக்கும். நவராத்திரிக்கு சிருங்ககிரிக்கு யாத்திரைபோய் வந்ததைப்பற்றியும் அங்கு நடந்த உத்ஸவத்தின் விபவத்தைப் பற்றியும் அதில் காணலாம். சதுரங்கக் கட்டத்தில் குதிரையடியால் ஏற்படும் பல அபூர்வ சித்திரங்களையும் அதில் காணலாம். அதிசீக்கிரத்தில் அது வெளிவரும்.

இச்சஞ்சிகையில் சென்ற ஆனிமீ நடந்த ஸ்ரீரங்கநாதனுடைய ஜ்யேஷ்டாபிஷேக உத்ஸவக் காக்ஷியை முதன் முதலில் பதிப்பித்திருக்கிறோம்.

சென்ற ஸஞ்கிகையிலும் இந்த ஸஞ்சிகையிலுமாக வெளியாக்கியுள்ள சுருதிநிர்ணயம் என்னும் வியாஸத்தில் கண்டபடி வீணையொன்று எழுதி இதில் சித்திரமாக பிரசுரிக்கவிருந்தோம். ஆனால் இன்னும் அது தயாராகவில்லையாதலால் அதை பின்னொரு ஸஞ்சிகையில் அச்சிடுவோம்.



# நமது சித்திரசாலை.



நமது சக்கிரவர்த்தியும் அவரது
குடும்பமும்.



விசுவாமித்திரரும் மேனகையும்.

ஸ்ரீமத் வால்மீகி

# இராமாயண வசனம்.

பண்டித நடேச சாஸ்திரியாரால்
தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு,
தகுந்த தமிழ் வித்வான்களால் பார்வையிடப்பட்டு,
பிழையறப் பரிசோத்துப் பிரசுரஞ்செய்யப்பட்டது.

---

## இப்பதிப்பின் விசேஷம்.

தமிழிற் கம்பர் முதலிய மகாகவிகள் இராமாயணத்தை இயற்றியிருந்தபோதிலும் செய்யுள் நடையை அறிந்து படித்து ஆனந்திக்கிறவர்கள் வெகு கொஞ்சமாயிருக்கிறபடியால் ஸ்திரீகளும் சிறுவர்களுங்கூட எளிதில் தெரிந்துகொள்ளும்படியாகத் தெளிவான எளிய நடையில் வசனரூபமாய் இவ்வால்மீகி ராமாயணம் எழுதப்பட்டிருக்கிறது.

இப்பதிப்பு இதன் ஆதிகிரந்தத்தின் கௌரவத்திற்கும் மகிமைக்கும் தக்கவாறு கனமான உயர்ந்த காகிதத்தில் பெரிய எழுத்தில், நன்றாய்ப்பரிசோதித்து, வெகு பொருள் செலவிட்டு சிரத்தையுடன் மிகச்சிறப்பாய் அச்சிடப்பட்டிருக்கின்றது. மிக விலையுயர்ந்த கனமான ஆண்டிக் காகிதத்தில் அச்சிட்டு நேர்த்தியான காலிகோவில் அழகாய் பயிண்டு செய்திருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| பாலகாண்டம் ... ... | ரூ. | 1 | 12 |
| அயோத்தியாகாண்டம் ... | ,, | 3 | 0 |
| ஆரணியகாண்டம் ... | ,, | 1 | 12 |
| கிஷ்கிந்தாகாண்டம் ... | ,, | 1 | 12 |
| சுந்தரகாண்டம் ... ... | ,, | 1 | 12 |
| யுத்தகாண்டம் ... ... | ,, | 3 | 8 |
| 6 காண்டமும் சேர்ந்துவாங்கினால் | ,, | 12 | 8 |

**வி. கல்யாணராம ஐயர் அண்டு கோ.,**

புக்ஸெல்லர்ஸ், எஸ்பிளநேட்,

சென்னப்பட்டணம்.

031n2111
N13.51

# FAMOUS INDIAN BRASS TOYS.

இந்தியர்களின் வீடுகளில் சமையல் செய்யும் பாத்திரங்களைப்போன்ற வடிவானது. பித்தளையினால் அழகாயும், நேர்த்தியாயும் செய்தது. குழந்தைகளுக்கு விளையாட சம்மானம் செய்யத் தகுதியுள்ளது. நவராத்திரி கொலுவுக்கு அலங்காரம் செய்ய மிகப் பொருத்தமுள்ளது. இவை சீமையிலிருந்து வரும் மண், தகரம் முதலிய விளையாட்டு சாமான்களைப்போல கையிலிருந்து நழுவினதும் உடைந்து வீணாப் போவதுபோல போகாதது. பலமும் சகாயமும் பளபளப்புமுள்ளது. ஒவ்வொரு ஜோடிப்பிலும் 32 வித சாமான்களடங்கியுள்ளது.

விலை விபரம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பெரிய சயிஸ் | ஜோடிப்பு 1க்கு | ரூபா | 3 | 8 | 0 |
| மத்திய சயிஸ் | ,, 1க்கு | ரூபா | 2 | 0 | 0 |
| சிறிய சயிஸ் | ,, 1க்கு | ரூபா | 1 | 8 | 0 |

எங்கள் விளையாட்டு சாமான்களைப்பற்றி அனேக ஆங்கில பிரபுக்களும், இந்திய பிரபுக்களும் பத்திரிகைகளும் மிகவும் புகழ்ந்து பேசப்பட்டு இருக்கின்றன.

☞ பம்பாயிலுள்ள பிரபல ஆங்கில பத்திரிகையாகிய "டைம்ஸ் ஆப் இந்தியா" கூறுகிறது:—

"ஆங்கில குழந்தைகளுக்கு வெகுமதிசெய்ய வாஸ்தவத்தில் இந்திய விளையாட்டு சாமான்களை வாங்குவதில் துரைசாணிமார்களுக்கு அடிக்கடி கஷ்டம் சம்பவித்து வருவதால் அவர்களுக்கு திருப்தியைக் கொடுக்கத்தக்க மாதிரியிலும், விலையிலும், அத்தகைய சாமானை உண்டு பண்ணுவதில் ஸ்ரீ காசியில் கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனியார் விசேஷ சக்தியுள்ளவர்கள் என்று தெரிந்து கொள்வது நலம்."

☞ நாகரீகமான அனேகவித பட்டு புடவைகளின் விலை விபரமுள்ள எங்கள் பெரிய கேட்லாக் இனாமாக அனுப்புவோம்.

84357

கே. எஸ். முத்தையா
அண்டு கம்பெனி, ஸ்ரீகாசி,
Benares City.



# ஸ்ரீசாங்கர கிரந்தாவளி

இத்தலைப்பின்கீழ் ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாசார்யாளாலியற்றப்பட்ட ஸமஸ்தகிரந்தங்களையும் இருபது ஸம்புடங்களாக அச்சிட்டு அழகிய ஒரு தேக்கமரப்பெட்டியில் வைத்து பூஜை பாராயணம் முதலியவற்றிற்கு உபயோகமாக செய்யப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு ஸம்புடமும் மிகவும் உயர்ந்த கடிதத்தில் அச்சிடப்பட்டு அதிமனோஜ்ஞமாக பூராகில்டுடன் பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

அநேகபண்டிதர்களின் உதவியின்பேரில் ரொம்பவும் நன்றாக சோதிக்கப்பெற்றது.

சிருங்ககிரி ஸ்ரீமகாஸந்நிதானத்தின் ஆஞ்ஞையின்பேரிலாரம்பிக்கப்பட்டு அவர்களுடைய பூர்ணமான அநுக்கிரஹம்பெற்று, அவர்களுக்கே ஸமர்ப்பிக்கப் பெற்று, அவர்களாலேயே மிகவும் நன்றாயிருப்பதாக ஆமோதிக்கப்பட்டது. மைத்தவிபரங்களுக்கு கடிதம் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

சாதாரண பிரதி 20 ஸம்புடமும் தேக்கமரப்பெட்டியுடன் கிரயம் ரூ. **50.** தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

மானேஜர்,

ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ், ஸ்ரீரங்கம்.

## IMPORTANT ANNOUNCEMENT.

# Brahmasutra Bhashya

OF

## SRI SANKARA BHAGAVATPADA

WITH

**BHAMATI** of Vachaspati Misra,

**KALPATARU** of Amalananda,

AND

**PARIMALA** of Appayya Dikshita.

This publication will be unique in that it contains at one glance all the five granthas styled by Brahmananda as Vedanta Sastra. Undoubtedly it will be of great help to all Advaita Scholars. The work being a gigantic one will be issued in parts beginning from March 1914. Each part will consist of 80 pages and will be priced at *Re. 1* each post free to subscribers who register their names before the end of March 1914. For others postage will be extra.

THE MANAGER,

BOOKSELLING DEPARTMENT,

*Sri Vani Vilas Press, SRIRANGAM.*